# சைவநெறி

## தரம் - 08

# ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம,
ஸ்ரீலங்கா.
www.nie.lk
info@nie.lk

# சைவநெறி

தரம் - 08

ஆசிரியர் வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்

முதற் பதிப்பு - 2017

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,

மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,

தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம.

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தமது பங்களிப்பானது மாணவர்ளின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலை நோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனையவற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள் தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பிணியினை ஆகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல் / கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னைசெயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும் போது (மாணவர் செயன்முறை) கன்யூசியஸ (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது. அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர். பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர் ஆனால் செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, கற்றுக்கொள்கின்றனர்.

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களைப் பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும் போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன் உயர்மட்ட கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தி எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை, தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்துதலாகும். எனவே, ஆசிரியர்களது, கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் /தகுதிப்பாடு களை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் /தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு புதிது புனைதலுக்கான விருப்பு, மற்றும் விடாமுயற்சி;
- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு, ஒழுக்கம், மற்றும் வினைத்திறனான தொடர்பாடல்;
- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங் களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலகர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் (உளப்பாங்கு (Att tute), பகுப்பாய்வு (Anolysis), செயல் செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Account-ability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும் சாதகமானதுமான **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற் கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறு பேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பேராசிரியர் குணபால நாணயக்கார
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரியவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்

தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி சைவநெறிப் பாடத்தை கற்றலால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடையும் வகையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய இறைநம்பிக்கை,சமய நம்பிக்கை, சமய ஒழுகலாறு, வழக்காறு, விழுமியங்கள், தத்துவங்கள், சமய சமூக நடைமுறைகள், இலக்கியம் செயன்முறை அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் தேர்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டே ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான விடய உள்ளடக்கம் இவ் ஆசிரியர் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்கள், தரவிருத்தி உள்ளீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதால், முன் கூட்டியே அவற்றை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கின்றது.

பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல, கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வழங்கும் போதும் ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போதும், உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கும், பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு இது தேவையான விளக்கத்தை அளிக்கிறது.

ஆசிரியர் வழிகாட்டியில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாடுகள் உள்ளடக்கப்படட்டுள்ளன. இச் செயற்பாடுகளை ஆசிரியர் அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தமது ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைகளுக்கும் ஏற்ப, செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக நான்கு குழுக்களை அமைக்க வேணடுமென கூறியிருப்பினும் வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப அதை மாற்றிக் கொள்ளலாம். குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும் போது ஆசிரியர் சாதுர்யமாக நடந்து கொள்ளவேண்டும். உரிய தேர்ச்சி மட்டத்தை நிறைவு செய்யும் விதமாகச் செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. ஒரு பாடவேளைக்கு அப்பாற் செல்ல ஆசிரியருக்கு நேரிடலாம் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தச் செயற்பாடுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேர அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தனிப் பாடவேளை, இருபாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளைப் பகுதிகளாகச் செய்து கொள்ள வேண்டியது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை தொடர்ந்து மறுநாள் செய்யும் போது முதன் நாள் நிறைவு செய்தவற்றை மீண்டும் அறிமுகம் செய்து, தொடர வேண்டும் என்பதும் உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாதேனும் ஒரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். என உங்களிடம் எதிர்பார்க்கபட்டவில்லை. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி, மேற் கொள்ளப்படும் சிறந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். புதிய விடயங்களை அறிமுகப்படுத்தும் போது உங்களின் வினைத்திறனையும், விளைதிறனை மேம்படுத்தும் நோக்கில் இவ் வழிகாட்டியை தேசிய கல்வி நிறுவகம் வழங்குகிறது. கணிப்பீட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளை பயன்படுத்தி கற்றலைப் பரிசீலனை செய்து, உரிய மீளவலியுறுத்தல்களைச் செய்வது உங்கள் பணியாகும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. வழிகாட்டியில் செயற்பாடுகளின் இறுதியில் வீட்டில் செய்யப்படவேண்டியதும் ஆசிரியர்களால் அவதானிக்கப்பட வேண்டியதுமான செயற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது அவற்றை ஆசிரியர்கள் உரியவாறு செயற்படுத்தும் அதேவேளை மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல். சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

திரு. பொன் ஜெயரூபன்,
உதவி விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

## எழுத்தாளர் குழு

**வழிகாட்டலும் அனுமதியும் :** **பேராசிரியர் குணபால நாணயக்கார**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு :** **வண கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,

**இணைப்பாக்கம் :** **திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**விடய ஆலோசனை :** **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**
தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

**பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி,**
கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

**எழுத்தாளர் குழு :** **திரு. பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,

- **திரு. பெ. பேரின்பராசா,**
ஆசிரியர், மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்,
களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பு.

- **திரு. எஸ். சேதுரட்ணம்,**
ஆசிரியர், பது/பண்டாரவளை தமிழ் ம.மகா வித்தியாலயம்,
பண்டாரவளை.

- **செல்வி. ஆர். சசிகலா,**
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
கொழும்பு.

- **செல்வி கே. தாட்ஷாயணி,**
ஆசிரியர், கொ/றோயல் கல்லூரி
கொழும்பு-7

- **திரு.என். அகிலன்,**
ஆசிரியர், யாழ்/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

**கணனி வடிவமைப்பு** - **திரு. பொன் ஜெயரூபன்**
சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,

**அட்டைப்படம்** -

**காரியாலய உதவி** - திருமதி எஸ்.சி.பிரியதர்சனி
- திருமதி மங்கலிகா விஜயரதன
- திரு..டயஸ் அமரசிங்க

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | - i |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | - iii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | - iv |
| பாட நிபுணத்துவ குழு | - v |
| 8.1.0 பாடத்திட்டம் | |
| 8.1.1 அறிமுகம் | - 02 |
| 8.1.2 தேசிய கல்விக் குறிக்கோள்களும் அடிப்படைத் தேர்ச்சிகளும் | - 03 |
| 8.1.3 பாடத்திட்டத்தின் நோக்கம், தேர்ச்சிகள் | - 06 |
| 8.1.4 பாடத்திட்டம் | - 07 |
| 8.1.5 கற்றல் - கற்பித்தல் முறை | - 16 |
| 8.1.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | - 17 |
| 8.1.7 கணிப்பீடும் மதிப்பீடும் | - 19 |
| 8.2.0 பாடத்திட்ட செயற்பாடுகள் | |
| 8.2.1 கற்றல் கற்பித்தல் முறை - விளக்கம் | - 20 |
| 8.3.0 கணிப்பீடும் மதிப்பீடும் | |
| 8.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம் | - 109 |

# சைவநெறி

## பாடத்திட்டம்

## தரம் - 08

(2017 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை

மொழிகள் மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

## 8.1.1 அறிமுகம்

விஞ்ஞான விருத்தியும் பொருளாதார மாற்றமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், மாணவர்களின் வாழ்வில் குறுக்கிடும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கத்தக்க ஆளுமையுள்ளவர்களாக்குவது கல்வியின் கடமையும் பொறுப்புமாகும். மாணவர்களை ஆளுமையுள்ளவர்களாக வளர்ப்பதில் சமய பாடம் முக்கிய பங்கினை வகிக்கிறது. சமயம் ஒரு வாழ்க்கை நெறி. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கான நெறிமுறைகளையும் பண்புகளையும் அது அமைத்துத் தருகின்றது.

மனித வாழ்வில், சமயம் வகிக்கின்ற முக்கியத்துவம் உணரப்பட்டமையாலேயே சைவநெறி இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெற்று வருகின்றது. அத்துடன்,2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கலைத்திட்டத்தில் இப்பாடம், கட்டாய பாடங்கள் ஐந்தினுள் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சைவநெறி, பாடத்தினூடாக மாணவர்களின் அறிவு, திறன்,மனப்பாங்கு மட்டுமன்றி,சமய அடிப்படையில் வையத்துள் வாழ்வாங்கு வாழும் திறனை விருத்தி செய்யக் கூடிய ஒழுக்கம், பண்பாடு முதலான ஆளுமைப் பண்புகளும் ஆன்மீகப் பண்புகளும் விருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் சமய அபிமானம், சமய நம்பிக்கை,சமய உணர்வுகள் என்பன வளர்க்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் இக்கலைத்திட்டமானது, நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படையான தேர்ச்சிகளை வழங்கி, மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கு சமயக் கல்வியைப் பயன்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,

- இறைசிந்தனை
- சமய நம்பிக்கை
- சமய ஒழுகலாறுகளும் விழுமியங்களும்
- சமய இலக்கியங்களும் தத்துவங்களும்
- சமயமும் சமூக நடைமுறைகளும்
- சமய சமரசம்

முதலான விடயங்களையும் உள்ளடக்குவதாக இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தில் மாணவர்கள் அடையவேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய தேர்ச்சிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் தம்மாலான ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும்.

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003 மார்கழி**

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### (i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

| | | |
|---|---|---|
| எழுத்தறிவு | : | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம். |
| எண்ணறிவு | : | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல். |
| சித்திர அறிவு | : | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எ ண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும். |
| தகவல் தொழில் நுட்பத் தகைமை | : | கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்துதல். |

### (ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

### (iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

| | | |
|---|---|---|
| **சமூகச் சூழல்** | : | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும். |

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்:**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 8.1.4 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

01. தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல்.
02. பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்ளல்.
03. திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுதல்.
04. ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுதல்
05. சைவசமய குரவர்கள்,சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுதல்
06. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கிக் கருத்துக்களை வெளிப்படுத்துதல்.
07. நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுதல்.
08. ஈழத்து சைவசமய வளர்ச்சியின் தொன்மையும் வரலாறும் பற்றி அறிந்து வெளிப்படுத்துதல்
09. ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல்.
10. பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளித்தல்.

### 8.1.5 தரம் 8 க்குரிய தேர்ச்சிகள்

1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.
2.0 பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வார்.
3.0 திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்
4.0 ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவார்
5.0 சைவ சமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவார்
6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கிக் கருத்துக்களை வெளிப்படுத்துவார்.
7.0 நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவார்.
8.0 ஈழத்து சைவசமய வளர்ச்சியின் தொன்மையும் வரலாறும் பற்றி அறிந்து வெளிப்படுத்துவார்
9.0 ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார்.
10.0 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளிப்பார்.

## 8.1.4 பாடத்திட்டம் சைவநெறி - தரம் - 08

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார். | 1.1 கடவுளின் மேலான தன்மையையும் (பரத்துவம்) கருணைத்திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் ஈடுபடுவார். | • **கடவுளின் சர்வ வியாபகம்**<br>(உப்பு நீர், ஆலம் வித்து உபநிடத தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கதை) | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• கடவுள் சர்வ வியாபகம் கொண்டவர் என்பதனை அறிவார்.<br>• உபநிடதக் கதைகள் மூலம் இறைவனின் சர்வ வியாபகத்தை உணர்வார்.<br>• இதனை மற்றோருக்கும் எடுத்துக் கூறுவார்.<br>• உபநிடத தத்துவங்கள் உணர்த்தும் உண்மைப் பொருள் பற்றி மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார் | 02 |
| | 1.2 தமது வாழ்வியலில் நாளாந்த செயற்பாட்டில் இறைசிந்தனையுடன் ஈடுபடுவார் | • **ஆலய வழிபாடு**<br>- நித்திய நைமித்திய காமிக கிரியைகள் பற்றிய விளக்கம் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நித்திய கிரயைகளை அறிந்து அதில் ஈடுபடுவார்<br>• நைமித்திய கிரயைகளை அறிந்து அதில் ஈடுபடுவார்<br>• வாழ்வு மேம்பட நித்திய நைமித்திய காமிக கிரியைகளில் ஈடுபவார்<br>• நித்திய நைமித்திய காமிக கிரியைகளின் பொருளை விளங்கிச் செயற்படுவார்<br>• கிரியைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை உரிய வேளையில் நிறைவேற்றுவார் | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.3 சைவ சமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவார். | • **ஆலய வழிபாடு**<br>- ஆலயத்துக்குச் செல்லும் முறை<br>- ஆலயத்தில் செய்யத்தக்கவை (இயம நியமங்கள்)<br>- கோபுர தரிசனம்<br>- தெய்வ வழிபாடு<br>- தோத்திரம் செய்தல்<br>- நமஸ்காரம் (அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம்)<br>- தியானம் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆலயத்துக்குச் செல்லும் முறை, ஆலயத்தில் செய்யத்தக்கவை (இயம நியமங்கள்) பற்றி அறிந்து அதற்கேற்ப வழிபாடுகளில் ஈடுபடுவார்<br>• கோபுர தரிசனத்தின் மகத்துவத்தை உணர்ந்து அவற்றில் ஈடுபடுவார்<br>• வழிபாட்டின் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து வழிபடுவார், நமஸ்காரமுறைகளை விதிப்படி நமஸ்கரிப்பார்.வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவார் அமைதி பேணுவார். | 02 |
| | | • விழுமியப் பண்புகள்<br>- மனக் கட்டுப்பாடு<br>- ஈதல்,<br>- முதியோரைக் கனம் பண்ணுதல்<br>- மங்கல வாழ்த்தும் பயனும்<br>- இயற்கையைப் பேணுதல்<br>- மனித உரிமைகளை மதித்து நடத்தல் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• வாழ்க்கையில் ஜெயிக்க நற்பண்புகள் தேவை என்பதை அறிவார்.<br>• வாழ்வியல் நற்பண்புகளை அறிந்து அவற்றை பட்டியல்ப்படுத்துவார்.<br>• மனக் கட்டுப்பாடு, ஈதல், முதியோரைக் கனம் பண்ணுதல், மங்கல வாழ்த்தும் பயனும், பற்றிய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்<br>• சமூகத்தில் இயற்கையைப் பேணும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்<br>• விழுமியப் பண்புகள் பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.4 வாழ்வியல் மேம்பாட்டிற்காக சடங்குகளை அறிந்து அவற்றை முறைப்படி கடைப் பிடிக்கும் முறையை இனங்காட்டுவார். | • **பிறந்தநாள் விழா**<br>- பின்பற்ற வேண்டிய முக்கிய அம்சங்கள். அவை உணர்த்தி நிற்கும் போதனைகள் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பிறந்தநாள் விழாவின் போது இடம்பெறும் கிரியைகளை அறிவார்.<br>• பிறந்தநாள் விழாவின் கிரியைகளின் முக்கியத்துவம் குறித்து விவரிப்பார்.<br>• பிறந்தநாள் விழாவின் போது செய்யப்படும் சடங்குகளின் பொருளைக் கேட்டறிந்து கொள்வார்<br>• பிறந்தநாள் விழாவின் போது நடைபெறும் சடங்குகளின் அவசியம் பற்றி அறிந்து கொள்வார்.<br>• கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவார். | 02 |
| | 1.5 வாழ்வின் மேம்பாட்டில் விரதங்கள் பண்டிகைகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விளங்கி அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவார் | • **விரதங்களும் பயன்களும்**<br>- பங்குனி உத்தரம்<br>- வைகாசி விசாகம்<br>- ஆனி உத்தரம் - சிவராத்திரி<br>- **பண்டிகைகள்**<br>- சித்திரை வருடப்பிறப்பு | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• விரதங்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றினை அனுட்டிப்பார்.<br>• நாள் விரதங்களையும் மாத விரதங்களையும் அறிவார்.<br>• விரதங்களை அனுட்டிக்கும் போது விரத நியதிகளைக் கடைப்பிடிப்பார்.<br>• ஆன்மீக மேம்பாட்டிற்கு விரதம் உதவுகின்றது என்பதை உணர்வார்.<br>• பண்டிகைகளின் முக்கியத்துவத்தினை அறிந்து கடைப்பிடிப்பார்.<br>• சித்திரை வருடப்பிறப்பு பற்றி அறிந்து அதனை கொண்டாடுவார்.கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 2.0 பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனைத் தமது வாழ்வில் மேற்கொள்வார். | 2.1 சமய நூல்களையும் அவற்றின் பக்தி வெளிப்பாடுகளையும் அறிந்து வெளிப்படுத்துவார். | • **திருமுறைகளில் காணப்படும் புராண இதிகாசக் கதைகள்**<br>- (திருமுறைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டது) | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• திருமுறை என்றால் என்ன என்பதை அறிவார்.<br>• திருமுறைகளின் வைப்பு முறையையும் அதன் ஆசிரியர்களையும் அறிந்து அதற்கு மதிப்பளிப்பார்.<br>• திருமுறைகளின் பொருள் மரபின் அறிமுகத்தினைப் பெறுவார்.<br>• திருமுறைகள் வெளிப்படுத்தும் புராண இதிகாசக் கதைகளை இனங்காண்பார்.<br>• திருமுறைகளின் சிறப்பு பற்றிய விடயங்களைத் தேடியறிவார்.<br>• பன்னிரு திருமுறைகளின் பக்தி வெளிப்பாடுகளை இனங்காண்பார் | 03 |
| | 2.2 நாயன்மாரின் வரலாறுகளினூடாக அவர்களது இறை நம்பிக்கையையும், பக்தி உணர்வையும் அறிந்து அவற்றின் வழி ஒழுகுவார், பக்தியின் சிறப்பை எடுத்துரைப்பார் | • **கண்ணப்ப நாயனார்** வரலாற்றுக்கதையினூடாக அவரது பக்தி வெளிப்பாடுகளை போற்றுதல் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• கண்ணப்பநாயனாரின் வழிபாட்டு முறைகளை விளங்கிக் கொள்வார்<br>• கண்ணப்பநாயனாரின் நற்பண்புகளை எடுத்துரைப்பார்.<br>• கண்ணப்பநாயனாரின் வரலாற்றை விளங்கித் தம்மாலான பணிகளுடாக சைவசமயத்தை மேன்மையுறச் செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.<br>• கண்ணப்ப நாயனாரின் வழிபாடு பிற்கால கண் பற்றிய சத்திர சிகிச்சைக்கு வித்திட்டது என்பதை விளங்கிக் கொள்வார்.<br>• இறைவனை வழிபடுவோருக்கு இறைவன் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 3.0 திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவார். | 3.1 பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார். | • **பஞ்சபுராணமும் தோத்திரப்பாடல்களும்**<br>பஞ்சபுராணங்கள் ஓதும் ஒழுங்கு முறையை அறிதல், பாடல் பாடியவர், தலம், பண், பாடல் அடங்கியுள்ள திருமுறை ஆகியவற்றை அறிதல்<br>**1. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்**<br>"கற்றாங் கெரியோம்பி...."<br>"மண்ணில் நல்லவண்ணம்..."<br>**2.திருநாவுக்கரச நாயனார் தேவாரம்**<br>"பண்ணி நேர்மொழி..."<br>"பெருகலாம் தவம்..."<br>**3.சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்**<br>"நீள நினைந்தடியேன்..."<br>"தில்லைவாழ் அந்தணர்..."<br>**4.மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்**<br>"பாரொடு விண்ணாய்..."<br>**5.திருவிசைப்பா - 9-**<br>"ஏகநாயகனே..."<br>**6.திருப்பல்லாண்டு**<br>"மிண்டு மனத்தவர்..." .<br>**7. திருமந்திரம்**<br>"சிவ சிவ என்கிலர்.."<br>**8.பெரியபுராணம்**<br>"இறவாத அன்பு வேண்டி..."<br>**9.திருப்புகழ்**<br>"பக்தியால் யானுனைப்..." | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• தேவாரங்களினதும் தோத்திரப் பாடல்களினதும் சிறப்பினை அறிவார்.<br>• தேவாரங்களையும் தோத்திரங்களையும் மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.<br>• எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக தேவாரத்தினையும் தோத்திரத்தினையும் எழுதுவார்.<br>• பஞ்சபுராணம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.<br>• பாடல்களைப் பண்ணோடு பாடுவார்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களைப் பாடுவார்<br>• பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வார்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும் என்பதை விவரிப்பார்.<br>• பஞ்ச புராணப் பாடல்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 4.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவார் | 4.1 ஆலய வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் பேணும் முறையை எடுத்துரைப்பார் | • **ஆலய வழிபாடும் அறிவியலும்**<br>(நமஸ்காரங்கள், கிரயைகள், சடங்குகள், கட்டிட அமைப்புக்கள் வழிபாட்டு முறைகளை விளக்குதல்) | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆலயம் என்பதன் பொருளை விளக்குவார்.<br>• ஆலய வழிபாட்டின் அவசியம் பற்றி விபரிப்பார்.<br>• ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தினை அறிவார்.<br>• ஆலய வழிபாட்டில் காணப்படும் சமய, விஞ்ஞான ரீதியான கருத்துக்களைத் தேடிப் பெறுவார் அவற்றை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவார்.<br>• கட்டிட அமைப்புக்களின் தத்துவத்தை மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார் நமஸ்காரங்கள், நேர்த்திகள் என்பவற்றின் சமய விஞ்ஞான கருத்துக்களை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவார்<br>• ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கு ஏற்ப வழிபாடுகளில் ஈடுபடுவார். | 02 |
| 5.0 சைவ சமய குரவர்கள்,சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொணடு பின்பற்றுவார் | 5.1 சமய குரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறையை அறிந்து கூறுவார் | • **சமய குரவர் நால்வரும் அவர்களது அற்புதங்களும்** | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சமய குரவர்கள் நால்வரும் இறைவன் அருள் பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வார்.<br>• சமய குரவர்கள் நால்வரும் இறையருளுடன் அற்புதங்களைச் செய்து, மக்களின் துன்பத்தை நீக்கி இறைபக்தியை வளர்த்தனர் என்பதை கதைகளுடாக விவரிப்பார்.<br>• சமய குரவர்களின் குரு பூசைத்தினங்களைக் கொண்டாடி அவர்களின் பணிகளுக்குமதிப்பளிப்பார்.<br>• சமய குரவர்கள் பாடிய தேவாரப் பதிகங்களை மனனம் செய்து பாடுவார்.<br>• சமய குரவர்களின் பணிகளை தாம் வாழும் சூழலில் முன்னெடுத்துப் பணிகளில் ஈடுபடுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 5.2 ஈழத்தில் சமயம் வளர்த்த பெரியார்களையும் அவர்களது பணிகளையும் அறிந்து அவர்களுக்கு மதிப்பளிக்கும் முறையை விளக்குவார். | • சிவபாத சுந்தரனார்<br>- வரலாற்று அறிமுகம்<br>- சமயப் பணிகள் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சிவபாத சுந்தரனார் அவர்களின் வாழ்க்கைப் பின்னணியை அறிவார்.<br>• அவரின் சமயப் பணிகளை அறிந்து போற்றுவார்.<br>• தம்மாலான சமய, சமூகப் பணிகளை செய்ய முன் வருவார்.<br>• இன்றையச் சூழலிலும் சமூக. சமய பணியின் அவசியம் குறித்து நண்பர்களுடன் கலந்துரையாடுவார். | 02 |
| 6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துவார். | 6.1 சைவ சித்தாந்தம் தொடர்பாக அடிப்படை விளக்கம் பெற்று தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை இனங்காண்பார், அவை தொடர்பாக விளக்கம் பெறுவார். | • பசு<br>- பசு அறிமுகம்<br>- பசு இலக்கணம்<br>- பசு இயல்புகள்<br>- பதிக்கும் பசுவுக்கும் உள்ள தொடர்பு (எளிமையான அறிமுகம்) | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் பசுவும் ஒன்று என்பதை அறிவார்.<br>• பசுவின் இயல்புகளைக் கூறுவார்.<br>• பசுவுக்குரிய இலக்கணங்களை அறிந்து போற்றுவார்.<br>• பதிக்கும் பசுவுக்கும் இடையிலுள்ள தொடர்பினை அறிவார்.<br>• ஆன்மாவின் தன்மையினை அறிந்து நிதமும் ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 7.0 நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவார். | 7.1 நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் கடைப்பிடிக்கும் முறைகளை எடுத்துரைப்பார். | • **நாட்டார் வழிபாடு**<br>(ஆகமம் சாரா வழிபாடு)<br>- **குமாரத்தன் வழிபாடு**<br>- **மதுரை வீரன்** | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆகமம் சாரா வழிபாட்டின் வரைவிலக் கணத்தைக் கூறுவார்<br>• ஆகமம் சாரா வழிபாட்டுக்குரிய தெய்வங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்<br>• ஆகமம் சாரா வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவார்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டினால் கிடைக்கும் பயன் களை விளக்குவார்.<br>• நாட்டார் வழிபாடு ஆகமம் சாரா முறையில் இடம்பெறும் என்பதை அறிவார்.<br>• குமாரத்தன் வழிபாடு இடம்பெறும் இடங்களைக் குறிப்பிடுவார்.<br>• மதுரைவீரன் வழிபாட்டு முறைகளை அறிந்து போற்றுவார்.<br>• தாமும் அவ்வழிபாடுகளில் ஈடுபடுவர்.கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவார். | 04 |
| 8.0 சைவமரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி,உரிய ஆதாரங்களுடன் சைவத்தின் தொன்மை யையும்,வரலாற்றுச் சிறப்பையும் எடுதுரைப்பார் | 8.1 சைவசமய வளர்ச்சியின் தொன்மை, வரலாறு என்பவற்றை ஆதாரத்துடன் முன்வைப்பார். | • சைவ சமய வளர்ச்சியின் தொன்மையும் வரலாறும<br>- **உபநிடத சிந்தனைகள்** | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• உபநிடதங்கள் என்பதன் பொருளை விளக்குவார்<br>• உபநிடதங்களின் வகைகள் பற்றி அறிவார்<br>• சைவ மக்களின் ஈடேற்றத்துக்கு உபநிடதங்களின் கருத்துக்களை அறிந்து வெளிப்படுத்துவார்.<br>• உபநிடதங்கள் வெளிப்படுத்தும் ஒழுக்கவியல் கருத்துககளை கூறுவார்.<br>• சுவேதாஸ்வதர உபநிடதம் வெளிப்படுத்தும் கருத்துக்களை விளக்கிக் கூறுவார். சைவசமயத்தின் தொன்மையை அறிவதில் உபநிடதங்களின் பங்கு பற்றி ஆராய்ந்து கூறுவார் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 9.1 ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார் | • **விநாயகர் ஆலயம்-** திருமுறிகண்டி விநாயகர் ஆலயம்<br>• **சிவாலயம்-** முன்னேஸ்வரம்<br>• **அம்மன் ஆலயம்-**<br>- காரைதீவு கண்ணகையம்மன்<br>- உடப்பு ஸ்ரீ திரௌபதியம்மன்<br>• **முருகன் ஆலயம்-**<br>- உகந்தை முருகன் ஆலயம்<br>- கதிர்காமம்<br>• **விஷ்ணு ஆலயம்-**<br>- வல்லிபுர ஆழ்வார் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• திருமுறிகண்டி விநாயகர் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.<br>• முன்னேஸ்வர ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.<br>• காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.<br>• உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.<br>• உகந்தை முருகன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.<br>• கதிர்காம முருகன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.<br>• வல்லிபுர ஆழ்வார் ஆலய வரலாற்றுச் சிறப்புக்களை போற்றுவார்<br>• தம் வாழ்க்கையில் இவ்வாலயங்களுக்கு தலயாத்திரை செல்ல வேண்டும் என்ற உணர்வினைப் பெறுவார். | 09 |
| | 10.1 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து கொள்வார், அவை பற்றி விளக்குவார். | • **இலங்கையிலுள்ள சமயங்கள் பற்றிய பொது விளக்கம்** | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இலங்கையிலுள்ள அனைத்து மதங்கள் பற்றியும் அறிந்து அவைகள் கூறும் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார்.<br>• சமயங்கள் கூறும் மனித விழுமியங்கள் மற்றும் விழாக்கள், விசேட தினங்கள் பற்றியும் அறிந்து அதற்கேற்ப அவற்றுக்கு மதிப்பளிப்பார். | 01 |

## 8.1.5 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவு மட்டம், பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் மாணவரிடம் உருவாக்கப்படும் கற்றல் பற்றிய கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவாகும் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை, மாணவர்களிடம் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படை நோக்கமாகும்.

மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத்திறன், கற்பனைத்திறன், தொடர்பாடல் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் என்பன சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக் கூடிய ஒரு கற்றல் முறையாகவும் இது அமைந்துள்ளது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சைவசமய பாடத்தைப் பொறுத்தவரை முக்கியமாக எதிர்பார்ப்பது, மனப்பாங்கு விருத்தியும் நடத்தை மாற்றமுமாகும். அதனை ஏற்படுத்த ஓர் இலகு வழியாக தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சி மையக் கல்வியில் ஆசிரியரது வகிபாகம் தெளிவானதொரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. தாம் பெற்றிருக்கும் அறிவை மாணவர்களுக்கு அப்படியே ஒப்புவிப்பதன் மூலம் அறிவை இடமாற்றம் செய்பவராக விளங்கிய ஆசிரியரின் செயன்முறை மாற்றப்பட வேண்டியதொன்றாகும். தேர்ச்சியை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட சைவநெறி பாடத்திட்டத்தில், சமயம் சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இங்கு மாணவரின் செயற்பாடு, பங்கு பற்றல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடையவேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவு மட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழி காட்டுவது ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஆரம்பத்திலேயே மாணவரிடம் விருப்பு, எதிர்பார்ப்பு என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். இங்கு விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படுவது அவசியமாகும். இதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்களைக் கேட்டல், அட்டைகளைக் காட்சிப்படுத்தல், திருமுறைப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள் என்பவற்றைப் பாடச் செய்தல், ஓதச் செய்தல், ஒளி, ஒலி நாடாக்கள் என்பவற்றைப் பயன்படுத்துதல், செய்து காட்டல் முதலானவை அவற்றுட் சிலவாகும்.

சைவநெறி வாழ்வியலுடன் தொடர்புடைய ஒரு பாடமாகும். அதனால், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக மாணவரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆதலால், ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நடத்துவதற்காகத் திறந்த உள்ளத்துடனும் போதிய திட்டமிடலுடனும் தயாராக வரவேண்டும். இங்கு மாதிரிகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. தமது தற்றுணிவுக்கேற்ப மாதிரிகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் உரிமையுடையோராவர்.

## 8.1.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

சமயக் கல்வி கற்றல் - கற்பித்தல் தொடரப்பாகப் பாடசாலையிலும் அயலிலும் கிடைக்கின்ற பௌதிக வளங்களையும், மனிதவளங்களையும் உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையும் திட்டமிட்டுச் செயற்படுவது அவசியம்.

சைவ சமய வழிபாட்டு முறைகளுக்கும், சமயம் சார்ந்த நடவடிக்கைகளுக்குமென பாடசாலைக் கொள்கை இருத்தல் அவசியம்.

சமயக் கல்வியின் அவசியத்தை, தகுந்த ஆதாரங்களுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் உதவிகளைப் பெற்றுக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளலாம்.

சைவசமயத்தைக் கற்பிப்பதற்கு, பாடசாலையில் வளப் பற்றாக்குறை ஏற்பட்டால் அதனை நிவர்த்தி செய்வதற்குப் பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் முதலானோரதும் சமய நிறுவனங்களதும் ஒத்துழைப்புக்களைப் பெறலாம்.

மேற்படி கொள்கைகளை நடைமுறைபடுத்துவதற்கும், ஆற்றல்மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதற்குப் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவுபடுத்தப்படல் அவசியமாகும்.

சைவநெறிப் பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின் பால் வழிப்படுத்தப்படும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும்போது சைவசமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- பாடசாலையில் தினசரிப் பிரார்த்தனைகள், வெள்ளிக்கிழமை பிரார்த்தனை என்பவற்றுக்கு ஏற்ற வசதிகள் அளித்தலும், மாணவர் அனைவரும் கலந்து கொள்ள வழிவகை செய்தலும்
- ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நற்சிந்தனை கூற இடமளித்தல்
- வகுப்பறையில் சுவாமிப்படங்களை வைத்து வழிபட ஊக்குவித்தல்
- பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபட வழிப்படுத்தல்
- சமய தீட்சை வழங்கல்
- குருபூசை, பாடசாலைச் சமய விழா,சமயப் பேச்சு, பண்ணிசை, நாடகப்போட்டி முதலானவற்றினை நடத்த ஒழுங்கு செய்தல்.
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- மாணவரின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக் கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடத்தல்
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் நடத்த ஒழுங்கு செய்தல்
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்களச் சுற்றுலாக்களையும் திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கம் போன்றவற்றில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்
- வெவ்வேறு தலைப்புக்களில் திட்டமிடப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடத்துதல்

- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள் என்பவற்றில் பங்கு கொள்ள ஊக்குவித்தல் மாணவரின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக் கூடிய வகையில் இவ்வாறான செயற்பாடுகளை வழங்கலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்ளிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காகப் பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காகத் தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம்.

ஒவ்வொரு சமய பாட ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் நற்பழக்கவழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

- கடவுள் பக்தி
- தாய், தந்தை, குரு ஆகியோரைத் தினம் தினம் வணங்குதல்
- மூத்தோரிடம் மரியாதை
- ஒழுக்கம்
- தியாகமும், தொண்டும்
- சமய அறிவில் ஆர்வம்
- சைவ தர்ம நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்படல் வேண்டும். பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால் அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம்.

## 8.1.7 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக, மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கு ஏற்ற இலகுவான வழிமுறைகளாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்துள்ளது.
மாணவரின் நடத்தைசார் பண்புகள், சமய வழிபாடுகளில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை, சமய, சமூக செயற்பாடுகளில் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் போது வெளிக்காட்டும் தன்மை, பங்கேற்கும் தன்மை என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இவற்றை முறை சார்ந்த வழிகளில் வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் கணிப்பீடு செய்ய முடியும்.

மதிப்பீட்டினைப் பல வழிகளில் மேற் கொள்ள முடியும். பாடம் தொடர்பான மதிப்பீடு பாட அலகின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது, வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற் கொள்ள முடியும். தவிர, தவணை இறுதியில் ஒப்படை, செயற்றிட்டங்களை வழங்குதல் என்பவற்றினூடாகவும் மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

மேலும், திருமுறைகள் தோத்திரப்பாடல்கள் பாடும் போது, மாணவர் பிழையற மனனம் செய்து, உச்சரிப்புத் தெளிவு, பண், இசை என்பவற்றுடன் சரியான நிலையில் நின்று பாடுகிறார்களா என்பதையும் கணிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறே, ஆலய வழிபாடு, அங்கு செய்யப்படும் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்கார முறைகளையும் தெய்வங்களை வழிபடும் ஒழுங்கு முறைகளையும் அவதானிக்க வேண்டும். இவற்றுக்கு ஏற்ற மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளை முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும்.

| தவணை | தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளை | மொத்தப் பாடவேளை |
|---|---|---|---|---|
| தவணை -1 | 1.0 | 1.1 | 02 | 16 |
| | | 1 2 | 04 | |
| | | 1.3 | 06 | |
| | 3.0 | 3.1 (1,2, ஆம் பாடல்) | 04 | |
| தவணை -2 | 1.0 | 1.4 | 02 | 25 |
| | | 1.5 | 04 | |
| | 2.0 | 2.1 | 03 | |
| | | 2.2 | 02 | |
| | 3.0 | 3.1(3,4,5,6 ஆம் பாடல்) | 06 | |
| | 4.0 | 4.1 | 02 | |
| | 5.0 | 5.1 | 04 | |
| | | 5.2 | 02 | |
| தவணை -3 | 3.0 | 3.1 (7,8ஆம் பாடல்) | 02 | 19 |
| | 6.0 | 6.1 | 03 | |
| | 7.0 | 7.1 | 04 | |
| | 8.0 | 8.1 | 03 | |
| | 9.0 | 9.1 | 06 | |
| | 10.0 | 10.1 | 01 | 60 |

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம்

| தொடர் இல. | தேர்ச்சி மட்டம் | செயற்பாட்டின் தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 01. | 1.1 | fITspd;rut; tpahgfj;ij czu;e;J ,iwrpe;jidapy; <LgLNthk; | 21 |
| 02. | 1.2 | thoT Nkkgl epj;jpa>ieikpj;jpa>fhkpa fpupa topghLfspy; <LgLNthk; | 23 |
| 03. | 1.3 | Mya topghl;bd;xOqF tpjpfisf;fillgpbj;J topgLNthk; | 26 |
| 04. | 1.3 | tpOkpag;gz;Gfis mwpe;J mtw;iw thoT;py;fillgpbg;Nghk; | 29 |
| 05 | 1.4 | பிறந்தநாள் விழாவை சைவமுறைப்படி கொண்டாடுவோம். | 35 |
| 06. | 1.5 | விரதங்கள் பற்றிய புராண இதிகாசகதைகளையும், பயன்களையும் அறிந்து உரிய முறைப்படி அனுட்டிப்போம்.” | 38 |
| 07. | 1.5 | சித்திரை வருடப்பிறப்பு பற்றி அறிந்து உரிய முறைப்படி கொண்டாடுவோம். | 42 |
| 08. | 2.1 | திருமுறைகளில் காணப்படும் புராண இதிகாசக் கதைகளை அறிந்து போற்றுவோம். | 44 |
| 09. | 2.2 | கண்ணப்ப நாயனாரின் கதை மூலம் நாமும் இறைபக்தி உடையவர்களாக இறைபணி செய்து வாழ்வோம் | 46 |
| 10. | 3.1 | திருஞான சம்பந்தர் சுவாமிகளின் தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 48 |
| 11. | 3.1 | திருநாவுக்கரச சுவாமிகளின் தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 50 |
| 12. | 3.1 | சுந்தரமூர்த்தி நாயனார் சுவாமிகளின் தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 52 |
| 13. | 3.1 | மாணிக்கவாசக சுவாமிகளின் தேவாரங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 54 |
| 14. | 3.1 | திருவிசைப்பா பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 56 |
| 15. | 3.1 | சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | |
| 16. | 3.1 | சேக்கிழார் சுவாமிகளின் பாடிய பெரிய புராணப்பாடல்களை பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம் | 58 |
| 17. | 3.1 | அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் பாடல்களை பக்தியோடு பாடுவோம் | 60 |
| 18. | 4.1 | ஆலய வழிபாட்டின் மூலமாக வெளிப்படும் அறிவியல் உண்மைகளை அறிந்து போற்றுவோம் | 62 |
| 19. | 5.1 | திருஞானசம்பந்தர் சுவாமிகளும் அவர் செய்த அற்புதங்களையும் அறிந்து போற்றுவோம் | 69 |
| 20. | 5.1 | திருநாவுக்கரசு சுவாமிகளும் அவர் செய்த அற்புதங்களையும் அறிந்து போற்றுவோம் | 71 |
| 21. | 5.1 | சுந்தரமூர்த்தி நாயனார் சுவாமிகளும் அவர் செய்த அற்புதங்களையும் அறிந்து போற்றுவோம் | 73 |
| 22. | 5.1 | மாணிக்கவாசக சுவாமிகளும் அவர் செய்த அற்புதங்களையும் அறிந்து போற்றுவோம் | 75 |
| 23. | 5.2 | சைவப் பெரியார் அ.சிவபாதசுந்தரனார் பணிகளை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் சமயப் பணிகளில் ஈடுபடுவோம் | 77 |
| 24. | 6.1 | சைவ சித்தாந்தம் கூறும் பசு பற்றிய தத்துவக் கோட்பாட்டினை அறிந்து ஆன்ம விடுதலைக்கான செயற்பாடுகளில் ஈடுபடுவோம். | 79 |
| 25. | 7.1 | நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து அவற்றின் பாரம்பரியங்களை பேணிப்பாதுகாப்போம் | 81 |
| 26. | 8.1 | சைவசமயத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்புக்களையும் அறிந்து கொள்வோம் | 84 |
| 27. | 9.1 | திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 87 |
| 28. | 9.1 | முன்னேஸ்வரம் ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம | 90 |
| 29. | 9.1 | காரைதீவு கண்ணகையம்மன் ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம | 93 |
| 30. | 9.1 | உடப்பு ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயம் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 95 |
| 31. | 9.1 | உகந்தை முருகன் மற்றும் கதிர்காமம் ஆலயங்கள் பற்றிய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 99 |
| 32. | 9.1 | ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வோம் | 102 |
| 33. | 10.1 | இலங்கையிலுள்ள சமயங்களின் வழக்காறுகளை அறிந்து மதிப்பளிப்போம். | 105 |

**தேர்ச்சி 1.0** : **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1** : கடவுளின் மேலான தன்மையையும் (பரத்துவம்) கருணைத்திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் ஈடுபடுவார்.

**செயற்பாடு** : ''கடவுளின் சர்வ வியாபகத்தை உணர்ந்து இறைசிந்தனையில் ஈடுபடுவோம்.''

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- கடவுள் சர்வ வியாபகம் கொண்டவர் என்பதை அறிவார்.
- உபநிடதக்கதைகள் மூலம் இறைவனின் சர்வவியாபகத்தை உணர்ந்து கொள்வார்.
- இறைவனின் சர்வ வியாபகத்தை மற்றோருக்கும் எடுத்துக் கூறுவார்.
- உபநிடதத் தத்துவங்கள் உணர்த்தும் உண்மைப்பொருள் இறைவனின் வியாபகத்தை எடுத்துரைப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- கடவுளின் சர்வ வியாபகம் பற்றி மாணவர் அறிந்தவற்றை கூற இடமளியுங்கள்.
- கடவுளின் சர்வ வியாபகத்தை தேவார பாடலடிகள், திருமந்திரம், திருவாசகம் போன்றவற்றை ஆதாரங்களாகக் கொண்டு முன்வைக்க இடமளியுங்கள்.
- உபநிடதக் கதைகளை வினவி, அதன் மூலம் இறைவனின் சர்வ வியாபகம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்துங்கள்.
  - கடவுள் எங்கும் வியாபித்துள்ளார்.
  - கடவுள் உண்மையானவர்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு, குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - உபநிடதக் கதைகள் மூலம் இறைவனின் சர்வவியாபகம்.
  - சுவேத கேதுவும் அவனது தந்தை உத்தாலகர்க்கும் இடையில் நடைபெற்ற

உரையாடல் சாந்தோக்கிய உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது.

- உபநிடதத்தில் கடவுளின் வியாபகம் பற்றி கூறப்பட்டுள்ள கதைகள்:
    - ஆலம் விதை
    - உப்புக்கல்
- உப்புக்கல் ஒன்றை நீரில் போட்டு சிறிது நேரத்தில் பார்க்கும்போது உப்புக்கல் கண்ணுக்கு புலப்படாமல் நீருடன் கலந்து எவ்வாறு வியாபித்திருக்கிறதோ அவ்வாறே இறைவனும் எங்கும் வியாபித்துள்ளார்.
- மிக நுண்ணிதமான ஆலம் வித்திலிருந்து பல கிளைகளும், இலைகளும் விழுதுகளும் கொண்ட பிரமாண்டமான விருட்சகம் உண்டாவது போல நுண்ணிய பிரம்மத்திலிருந்து உலகம் தோன்றுகிறது.
- இக்கதைகள் மூலம் இறைவன் புலனுக்கெட்டாமல் எங்கும் வியாபித்தும், அவர் ஒருவரே உண்மையாகவும் உள்ளார் என எடுத்துக் கூறப்படுகின்றது.
- தேவார பாடல்கள், திருவாசகம், திருமந்திரம், சிவபுராணம் என்பவற்றின் மூலமும் கடவுளின் உண்மைத்தன்மையும், எங்கும் வியாபித்துள்ளார் என்றும் அறிய முடிகிறது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- உபநிடதக் கதைகள் மூலம் கடவுளின் வியாபகம் பற்றி நிரூபிப்பார்.
- தேவாரங்களில் கடவுளின் வியாபகம் பற்றி ஆதாரங்களை எடுத்துக் கூறுவார்
- திருமந்திரம், சிவபுராணம், திருவாசகப் பாடலடிகள் மூலம் கடவுளின் மெய்த் தன்மையை எடுத்துரைப்பார்.
- உபநிடதங்கள் ஆன்மீக ஈடேற்றத்துக்கு முன்வைக்கும் கருத்துக்களை வாழ்வில் பின்பற்றுவார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்
- உபநிடதக் கதைகள் அடங்கிய அட்டை (உப்புக்கல், ஆலம் விதை)
- தேவாரங்கள்
- சிவபுராணம்
- திருவாசகங்கள்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு- 1, 3**

1. கடவுளின் உண்மை பற்றி எடுத்துக் கூறும் ஆதாரங்களும், நூல்களும் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றினைச் சரியான முறையில் தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| ஆலம்விதை, உப்புக்கல் | திருமந்திரம் |
| ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே | சிவபுராணம் |
| ஒருவனே தேவன் | உபநிடதக்கதைகள் |
| ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க | தேவாரம் |
| ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரந் திருநாமம் | திருவாசகம் |

**குழு- 2, 4**

1. கடவுளின் வியாபகத்தை நிரூபிக்க உபநிடதத்தில் உள்ள கதைகளைத் தேடி அவற்றைக் கலந்துரையாடி இறைசிந்தனையில் ஈடுபடவும்.
   ஆன்மீக ஈடேற்றத்துக்கு உபநிடதம் முன்வைக்கும் கருத்துக்களை விளக்குக

**தேர்ச்சி 1.0 :** **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 :** தமது வாழ்வியலில் நாளாந்த செயற்பாட்டில் இறைசிந்தனையுடன் ஈடுபடுவார்.

**செயற்பாடு :** “வாழ்வு மேம்பட நித்திய, நைமித்திய, காமிக கிரியை வழிபாடு களில் ஈடுபடுவோம்.”

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள் :**
- நித்திய, நைமித்திய, காமிக கிரியைகள் பற்றி அறிந்து கூறுவார்.
- வாழ்வு மேம்பட நித்திய, நைமித்தய, காமிக கிரியைகளில் ஈடுபடுவார்.
- நித்திய, நைமித்திய, காமிக கிரியைகளின் பொருளை விளங்கிச் செயற்படுவார்.
- கிரியைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை உரிய வேளையில் நிறைவேற்றுவார்.
- கிரியைகளில் கலந்து கொண்ட சந்தர்ப்பங்களை வெளிப்படுத்துவார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் ஆலயத்திற்கு செல்லும் சந்தர்ப்பங்களைப் பற்றி கூற இடமளியுங்கள்.
- ஆலயங்களில் மாணவர்கள் பார்த்த கிரியைகள் பற்றி கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கிரியை முறைகள் பற்றி வினவி, அவை தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- ஆலயத்தில் பார்த்த கிரியை முறைகளை நித்திய, நைமித்திய, காமிக கிரியைகளின் அடிப்படையில் இனங்காண வழிப்படுத்துங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு, குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் அனைத்தும் திருவுருவத்தை அடிப் படையாகக் கொண்டவை.
  - ஆலய வழியாடு என்பது சமய ஒழுக்கத்துக்கு நிறைவு தரும் ஒரு அங்க மாகும்.
  - வழிபாடு இரண்டு வகைகள்
    - ஆன்மார்த்தம்
    - பரமார்த்தம்

- ஆன்மார்த்தம் என்பது ஒவ்வொரு மனிதனும் தன் நலன் கருதி தன் இல்லத்தில் செய்யும் வழிபாடு ஆகும்.
- பரமார்த்தம் என்பது உலக நன்மையின் பொருட்டு திருக்கோவில்களில் செய்யப்படுகின்ற வழிபாடு ஆகும்.
- இவ்வாறு ஆலயத்தில் நடைபெறுகின்ற பரமார்த்த கிரியைகள் மூன்று வகைப் படும்.
  - நித்திய கிரியை
  - நைமித்திய கிரியை
  - காமிக கிரியை
- நித்திய கிரியை என்பது ஆலயத்தில் தினந்தோறும் நடைபெறும் கிரியை களைக் குறிக்கின்றது.
- ஆலயத்தின் விதிமுறைக்கும் வசதிக்கும் அமைய பூசைகள் வேறுபடும். அவை ஒரு வேளையேனும், மூன்று வேளையேனும், ஆறு வேளையேனும் இடம் பெறலாம்.
- திருவனந்தல் (உஷக்கால) பூசை, காலை சந்திப்பூசை, உச்சிக்காலப் பூசை, சாயங்காலப் (சாயரட்சைப்) பூசை, இரண்டாங்காலப் பூசை, அர்த்த யாமப் பூசை என்பன ஆறு காலப் பூசைகளாகும்.
- நைமித்திய கிரியை என்பது விசேட தினங்களில் / விசேட காரணத்தை முன்னிட்டு நடைபெறும் சம்பிரதாய பூர்வ நியதிச் செயல்களைக் குறிக்கும். இவ் நைமித்திய கிரியைகள் பல வகைப்படும்.
  - வாரத்தில் ஒருமுறை நடைபெறுவது
    - சோமவாரம், சுக்கிர வாரம்
  - இரு வாரத்திற்கு ஒருமுறை நடைபெறுவது
    - பிரதோஷம்
  - மாதம் ஒருமுறை நடைபெறுவது
    - சதுர்த்தி, சஷ்டி
  - வருடம் ஒருமுறை நடைபெறுவது
    - விநாயகர் சதுர்த்தி, கந்தசஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி, மார்கழி திருவாதிரை, ஆவணி மூலம், மகோற்சவத் திருவிழா
  - பன்னிரண்டு (பல) வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிடேகம்
- காமிக கிரியை என்பது ஏதாவது ஒரு பயன் கருதி செய்யப்படும் வழிபாடு ஆகும்.
- நித்திய கிரியைகளின்போது பயன் கருதி செய்யப்படும் வழிபாடு நித்திய கிரியையில் காமிக கிரியை என அழைக்கப்படும்.

  **உ+ம்:-** அர்ச்சனை செய்தல்
  தேங்காய் உடைத்தல்
- நைமித்திய கிரியைகளின்போது பயன் கருதிச் செய்யப்படும் வழிபாடு நைமித்திய கிரியையில் காமிக கிரியை என அழைக்கப்படும்.

  **உ+ம்:-** விசேடமாக தேங்காய் உடைத்தல், அர்ச்சனை செய்தல், காவடி எடுத்தல், அங்க பிரதட்சணம் செய்தல் போன்றன.
- நித்திய கிரியைகளின் போதும் அல்லது நைமித்திய கிரியையின் போதும் அடியவர் பயன் கருதி செய்யப்படும் வழிபாடு காமிக கிரியை என அழைக்கப் படும். எனவே காமிக கிரியை, நித்திய கிரியையிலும் நைமித்திய கிரியை யிலும் இடம்பெறும்.
- நிஷ்காமிக கிரியை என்பது பயன் கருதாது செய்யப்படும் வழிபாடு ஆகும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 5:**
- சைவத் திருக்கோயில்களில் கிரியைகளின் வகைகளை வகைப்படுத்துவார்.
- நித்திய கிரியைகளை அறிந்து அதில் பங்கு கொள்வார்.
- நைமித்திய கிரியைகளை அறிந்து அதன் வகைகளை எழுதுவார்.
- காமிக கிரியைகள பற்றிய விளக்கத்தை முன்வைப்பார்.
- கிரியைகள் நடைபெறும் ஒழுங்கு முறைகளைப் பட்டியற்படுத்துவார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்
- கிரியைகளின் படங்கள்
- கிரியைகளின் ஒளிப்பதிவு நாடாக்கள்
- எழுது கடதாசி, டிமைன் கடதாசி, நிறப்பேனாக்கள்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு- 1**
வாழ்வுக்கு மேம்பட நித்திய, நைமித்திய, காமிக கிரியைகளின் முக்கியத்துவத்தினை குறிப்பிடுங்கள்.

**குழு- 2**
நித்திய கிரியைகளில் காமிக கிரியையின் விளக்கத்தைக் குறிப்பிட்டு அவை தற்கால கோயில்களில் எவ்வாறு காணப்படுகின்றது.

**குழு- 3**
நைமித்திய கிரியையில் காமிக கிரியையின் விளக்கத்தை குறிப்பிட்டு அவை சமுதாயத்தில் எவ்வாறு காணப்படுகின்றது.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- ஆலய வழிபாட்டின்போது நடைபெறும் கிரியைகளில் வீட்டு அங்கத்தவர் அனைவரும் ஈடுபடுங்கள்.
- ஆலயம் சென்று தொண்டுகளைச் செய்து வழிபாட்டு ஒழுங்கு விதிக்கு அமைய நித்திய நைமித்திய காமிக கிரியைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 :** **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 :** சைவசமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு :** "ஆலய வழிபாட்டின் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து வழிபடுவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- ஆலயத்திற்குச் செல்லும் முறை, ஆலயத்தில் செய்யத்தக்கவை (நியமங்கள்) பற்றி அறிந்து அதற்கேற்ப வழிபாடுகளில் ஈடுபடுவார்.
- கோபுர தரிசனத்தின் மகத்துவத்தை உணர்ந்து இறைபக்தியுடன் ஈடுபடுவார்.
- வழிபாட்டின் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து வழிபடுவார். நமஸ்கார முறைகளை விதிப்படி நமஸ்கரிப்பார். வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவார். அமைதி பேணுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்கள் ஆலயத்திற்கு செல்லும் முறை பற்றிக் கூற இடமளியுங்கள்.
- ஆலயத்தில் சென்றதும் முதலில் கண்ணுக்கு புலப்படுவது எது என வினவி அது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ஆலயத்தினுள் வழிபடும் ஒழுங்கு விதிகள் பற்றி வினவிக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை, குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - ஆலயத்திற்குச் செல்லும்போது நீராடித் தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிந்து இறைவனின் நாமங்களை உச்சரித்த வண்ணம் செல்லுதல் வேண்டும்.
  - ஆலயத்திற்கு செல்லும்போது இயம நியமங்களை அறிந்து அதன் வழி செல்லுதல் வேண்டும்.

- இயமம், நியமம் ஆகிய இரண்டும் நம் எண்ணங்களை, செயல்களை நேர்வழிப்படுத்த துணை செய்வன.
- இயமம் என்பது இது தகாது என எதிர்மறை முகமாக விதி களை வகுப்பது ஆகும். அதாவது நாம் எமது எண்ணங்கள், செயல்களில் தவிர்க்க வேண்டியவை ஆகும்.
  **உ+ம்:-** பிற உயிர்களை இம்சித்தல், பொய் பேசுதல், களவெடுத்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- நியமம் என்பது இது தகும் என உடன்பாட்டு முகமாக விதி களை வகுப்பது ஆகும். அதாவது நாம் எமது எண்ணங்கள், செயல்களில் செய்யக்கூடியவை ஆகும்.
  **உ+ம்:-** தூய்மை, திருப்தி, நேர்மை, சிறந்த நூல்களைக் கற்றல் போன்றவை மேற்கொள்ளத்தக்கன ஆகும்.
- கோபுர தரிசனத்தின் மகத்துவம்
  ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்''
  ''கோபுர தரிசனம் பாப விமோசனம்'' என்பன ஆன்றோர் வாக்கு. கோபுரத்தின் சிகரம் எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கத் தெரியுமோ அவ்வளவு தூர இடமும் பூலோக கைலாசம் என்று அழைக்கப்படும். எனவே அவ்வளவு தூர இடமும் இறைசிந்தனை, இறை அருள் நிறைந்திருக்கும்.
- கோபுரம் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது அடுக்குகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

  மூன்று - சாக்ரம் - நனவு, சொப்பனம் - கனவு, சுழுத்தி - உறக்கம்

  ஐந்து - ஐம்பொறிகளைக் குறிக்கும்.

  ஏழு - ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்பவற்றைக் குறிக்கும்.

  ஒன்பது - ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவற்றைக் குறிக்கும்.
- கோபுரத்தைக் கண்டவுடன் இரு கைகளையும் சிரமேல் குவித்து வணங்குதல் வேண்டும்.
- **வழிபாட்டின் ஒழுங்கு விதிகள்:**
  - ஆலயத்திற்குச் செல்வோர் தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து சிவசின்னங்களைத் தரித்து சிவநாமங்களை உச்சரித்த வண்ணம் செல்லுதல் வேண்டும்.
  - கோபுரத்தை வணங்கி உள்ளே சென்றதும் முதலில் கொடிமரம், பலிபீடம் என்பவற்றை வணங்கி மூலமூர்த்திக்குரிய ஊர்தியையும் வணங்குதல் வேண்டும். பின் கொடிமரத்திற்கு இப்பால் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.
  - பின் துவார பாலகர், மூலமூர்த்தி, பரிவாரத் தெய்வங்கள், இறுதியாக சண்டேசுரரை (மூன்று முறை கைகொட்டி) தரிசித்து கும்பிட்டு தோத்திரஞ் செய்து சிவதரிசன பலனைத் தந்தருளுமாறு பிரார்த்தித்தல் வேண்டும்.
  - ஆலயத்தினை வணங்குதல்:- குறைந்தது மூன்று தடவையேனும் வலம் வந்து வணங்குதல் வேண்டும். ஒரு தடவை வலம் வந்து வணங்குதல் பாவச் செயலாகும்.
  - **நமஸ்கார முறைகள்:**
    - **திரியாங்கம்:**
      சிரசில் இரு கைகளையும் குவித்து வணங்குதலைக் குறிக்கும். இது இருபாலாரும் செய்யலாம்.

- **அட்டாங்க நமஸ்காரம்:**
  தலை, இருகை, இருசெவி, இருபுயம், மேவாய் எனும் எட்டு அங்கங்கள் நிலத்தில் பொருந்த வணங்குதல் வேண்டும். இது ஆண்களால் செய்யப் படும் நமஸ்காரம் ஆகும்.
- **பஞ்சாங்க நமஸ்காரம்:**
  தலை, இருகை, இருமுழந்தாள் எனும் ஐந்து உறுப்புக்கள் நிலத்தில் பொருந்த வணங்குதல் ஆகும். இது பெண்களால் செய்யப்படும் நமஸ்காரம் ஆகும்.
- **அங்கபிரதட்சணம்:**
  ஆண்களுக்கு மட்டுமே உரியது. பெண்கள் செய்வதில்லை

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- ஆலயத்திற்கு செல்லும் ஒழுங்கு விதிகளைக் கூறுவார்.
- நமஸ்கார முறைகளைச் சரியான முறையில் செய்வார்.
- ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார்.
- கோபுர தரிசனத்தின் மகத்துவம் பற்றி பேச்சு ஒன்றினை நிகழ்த்துவார்.
- நமஸ்காரமுறைகளினால் கிடைக்கும் பலன்களைப் பட்டியற்படுத்துவார்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு- 1**
1. ஆலய வழிபாட்டு முறைகளையும் முக்கியத்துவத்தினையும் பட்டியற்படுத்துங்கள்.
2. ஆலய வழிபாட்டில் ஐம்பொறிகளின் செயற்பாட்டை எவ்வாறு ஒருங்கிணைத்தல் வேண்டும்

**குழு- 2**
1. இயம நியமங்கள் விதிகள் நான்கினை அட்டவணைப்படுத்துங்கள்.
2. இயம நியமங்கள் ஒரு மனிதனை நல்வழிப்படுத்த எவ்வாறு துணைசெய்கின்றது.

**குழு- 3**
1. நமஸ்கார முறைகளை விதிப்படி நமஸ்கரிக்கும் முறையினை எழுதிக் காட்டுங்கள்.
2. நமஸ்காரமுறைகளினால் கிடைக்கும் பலன்களை பட்டியற்படுத்துவார்

## பின்தொடர் பயிற்சி:

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

### பெற்றோருக்கானது:

- வீட்டில் வழிபாட்டின்போது பஞ்சபுராணம் பாடி நமஸ்காரங்களைச் செய்து அங்கத்தவர் அனைவரும் ஈடுபடுங்கள்.
- ஆலயத்திற்கு சைவ கலாசாரமாக சென்று ஆலயத்தில் தொண்டுகளைச் செய்து ஆலய வழிபாட்டு ஒழுங்கு விதிக்கு அமைய வழிபடுங்கள். அவற்றைப் பிள்ளைகள் வழக்கமாக்கிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 :** **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 :** சைவசமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு :** ''விழுமியப் பண்புகளை அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்போம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- வாழ்க்கையில் ஜெயிக்க நற்பண்புகள் தேவை என்பதை அறிவார்.
- வாழ்வியல் நற்பண்புகளை அறிந்து அவற்றைப் பட்டியல்ப்படுத்துவார்.
- மனக் கட்டுப்பாடு, ஈதல், முதியோரைக் கனம் பண்ணுதல், மங்கல வாழ்த்தும் பயனும், பற்றிய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்.
- சமூகத்தில் இயற்கையைப் பேணும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்
- சமுதாயத்தில் மனித உரிமைகளை மதித்து நடத்தல் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துரைப்பார்.
- விழுமியப் பண்புகள் பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**

- சைவ சமயம் கூறும் விழுமியப் பண்புகள் யாவும் ஒரு மனிதனின் தனிப்பட்ட சமய வாழ்வையும் சமூகவாழ்வையும் மேம்படுத்துகின்றன என்பதை மாணவர்களிடம் முன்வைத்து விழுமிய பண்புகள் பற்றிக் கூற இடமளியுங்கள்.
- ''மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்'' என்ற உலக நீதிப் பாடலை மாணவர்கள் கூறச் செய்து அதன் உண்மைகளைக் கேட்டுப் பாடத்தை ஆரம்பித்தல்
- விழுமியங்கள் தொடர்பான அனுபவங்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.
- மாணவர்கள் குழுவாகச் செயற்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்

**படி- 3:**

- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:** • குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

- எமது சைவசமயத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு நிகழ்வுகளும் எடுத்துரைக்கப்பட்ட ஒவ்வொரு விடயங்களுக்குள்ளும் ஆழமான வழிப்படுத்தல்கள் காணப்படுகின்றன.
- அந்தவகையில் விழுமியப்பண்புகள் என்பது மிக முக்கியத்துவமானதாக காணப்படுகின்றது அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வது நம் ஒவ்வொருவரது பொறுப்புமாகும்
- விழுமியப்பண்புகளாக பின்வருவன காணப்படுகின்றன.
  - மனக் கட்டுப்பாடு
  - ஈதல்,
  - முதியோரைக் கனம்பண்ணுதல்
  - மங்கல வாழ்த்தும் பயனும்
  - இயற்கையைப்பேணுதல்
  - மனித உரிமைகளை மதித்து நடத்தல்

**மனவடக்கம் அல்லது மனக் கட்டுப்பாடு**

- மனவடக்கம் என்பது சமய வாழ்வையும் சமூக வாழ்வையும் மேம்படுத்துகின்றது.
- மனவடக்கத்தை மேற்கொள்வதற்குப் பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம்
  - இறைவழிபாடு
  - தியானம்
  - திருமுறை ஓதுதல்
  - பொறுமை காத்தல்
  - அடுத்தவரின் துன்பங்களில் (கஷ்டங்களில்) பங்கெடுத்தல் போன்றன
- மனதை ஒரு நிலைப்படுத்துதல் அல்லது மனத்தை பொறிவழிப்போகாது நிலை நிறுத்தல் என்பது மனவடக்கத்தைச் சுட்டுவதாகும்.
- மனவடக்கம் என்பது மனிதனிடம் சிறப்பான பண்புகளை வளர்க்க உதவுகின்றது.
- மனவடக்கம் பற்றி நீதி நூல்களில் குறிப்பிடப்பட்டள்ளன. (உ-ம்)

திருக்குறள் - "அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

ஔவையார் - ஆத்திசூடி "நயம்பட உரை"

உலகநாதர் - உலகநீதி
"மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்"

சன்மார்க்க போதினி -
"இனிய சொல்லே விளைநிலமாகவும், தானஞ்செய்தலே விதையாகவும், உண்மையே எருவாகவும், அன்பே நீராகவும் கொண்டு, கடுஞ்சொல்லாகிய களையை நீக்கி அறமாகிய கதிரைப் பெறக்கூடிய பயிரை இளைமையிலே நீ செய்வாய்"

- மனவடக்கத்தால் ஏற்படும் நன்மைகள்
  - கோபம், வீணான ஆசைகள் கட்டுப்படுத்தப்படும்
  - மனம் சாந்தி பெறும், காரிய சித்தி ஏற்படும்
  - கவலைகள், துன்பங்கள், தற்பெருமை நீங்கும்
  - பொறுமையும், பெரியோர் நன்மதிப்பும் கிடைக்கும்
  - நட்பு, உறவு என்பன கிடைக்கும்.
  - ஆபத்திலிருந்து (அழிவில்) பாதுகாப்பு கிடைக்கும்

- மனக் கட்டுப்பாடு இன்மையால் ஏற்படும் விளைவுகள்
  - மனநிம்மதியின்மை
  - பகைமை உணர்வு, கோப உணர்வு என்பன உண்டாகும்
  - மன அழுத்த நோய்கள்
  - துன்பம், கவலைகள் ஏற்படும்
  - நன்மதிப்பு கெடும்

**ஈதல் எனும் விழுமியம்**

- ''அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
  இன்சொலன் ஆகப் பெறின்'' (இனியவைகூறல் குறள் எண்:92)

- முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்

- ''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
  ஊதியம் இல்லை உயிர்க்கு''.

- வறியவர்க்கு ஈதல் வேண்டும் அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும், அப் புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

  வேந்தனாக இருந்தாலும் வேடனாக இருந்தாலும் உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகள் எல்லோருக்கும் ஒன்றுதான். தேவைகளுக்கு மீறிய செல்வம் இருந்தால் அதைப் பயன்படுத்த முடியாது. ஆகவே. தன் செல்வத்தைப் பிறருடன் பகிர்ந்துகொள்வதுதான் செல்வத்தைப் பெற்றதின் பயன். தானே தன் செல்வம் முழுவதையும் அனுபவிக்கலாம் என்று எண்ணுபவர்கள் செல்வத்தின் பயனை இழந்தவர்களாவார்கள்.

  செல்வத்தைப் பிறர்க்கு உவந்து கொடுக்காமல் யாமே துய்ப்போம் என்று எண்ணித் தாமும் துய்க்கத் தவறியவர் வாழ்நாளே இவ்வுலகில் பாழாகும்

**முதியோரைக் கனம் பண்ணுதல்**

- நாம் தினந்தோறும் செய்யவேண்டிய நல்ல பல கருமங்கள் உள்ளன.
- முதியோரைக் கனம் பண்ணுதல் என்பது மகத்தான செயலாகும்.
- சமூகத்தில் பல்வேறு தொழில்நிலையங்களிலும் கடமைபுரியும் வயது முதிர்ந்தவர்களிடத்தும் பணிவுடனும் அன்புடனும் ஆதரவாகவும் நடந்து கொள்ளுதல் அவசியமாகும்
- முதியோர் இல்லங்களுக்கு கட்டாயம் செல்லவேண்டும் அவர்களுடன் அளவளாவி தங்களால் ஆன உதவிகளை ஒரு வேளையாவது செய்தல் வேண்டும். குறிப்பாக பாடசாலைச் சுற்றுலாவின்போது ஒரு பொழுது அவர்களைச் சந்தியுங்கள்.
- பெற்றோர், குரு, முதியோர்களைக் கனம் பண்ணிப் பெருமதிப்புப் பெற்ற சமயப் பெரியார்கள்கள் பற்றி அறிந்து கொள்ளவேண்டும். அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

- முதியோரைக் கனம் பண்ணி வாழ்வதனால் அவர்களின் ஆசீர்வாதத்துடன் நற்குணங்கள் பெருகும், அன்பு பெருகும் வாழ்க்கையின் தத்துவத்தை புரிந்து அதற்கேற்ப தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளமுடியும். இதனால் இறைவனின் திருவருட்பேற்றை அடைவதற்கான முதற்படியாக இவற்றைக் கொள்ளலாம்.

**மங்கள வாழ்த்தும் பயனும்**

- வாழ்வியலிலிலும் வழிபாட்டிலும் மங்கள வாழ்த்தின் பயனாக மனநிறைவும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.
- சைவசமய வாழ்வில் எந்தவொரு சமய நிகழ்ச்சியின் நிறைவிலும் மங்கள வாழ்த்து இடம்பெறுவது முக்கிய அம்சமாகும்- நடைபெற்று முடிந்த சமய நிகழ்வால் முழு மனித குலமும் உலகமும் மங்கலச் சிறப்புடன் நிறைவான வாழ்வு வாழவும் நற்சுகத்துடனும் சீரும் சிறப்புடனும் வாழவும் வாழ்த்துவதாக அமைவதே மங்கள வாழ்த்தாகும். ஆலயக்கிரியைகளின் போதும் நிறைவில் அனைத்து மக்களும் நலமுடன் வாழ்வார்களாகுக. என சிவாச்சாரியார் மங்கள வாழ்த்துக் கூறுவது மரபாகும்- திருமணத்தின் போதும் மணமக்கள் சீரும் நற்சிறப்புடனும் வாழ மங்களம் பாடுவது மரபாகும்.
- யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
- இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
- மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்....தேவார திருப்பதிகங்களில் வாழ்த்துக்கள்
- இவைபோன்ற தொடர்கள் மூலமும் மங்கள வாழ்த்தின் அவசியத்தையும் பயனையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**இயற்கையைப் பேணுதல்**

- மனித வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய விழுமியப்பண்புகளில் இயற்கையைப் பேணுதல் அல்லது பாதுகாத்தல் முக்கியமானது
- இயற்கையை பேணுதல் என்பது அனைவரும் இன்பமாக வாழ்வதற்கான செயற்பாடாகும்
- இயற்கை எமது வாழ்வின் உயிர் நாடி.
- மனித வாழ்வும் இயற்கைச் சூழலும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாது.
- இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை எமது வாழ்வை வளமாக்கும்
- இயற்கை எமக்கு பல்வேறு நன்மைகளை அளிக்கின்றது (உ-ம்) அழகியல், சுத்தமான சூழல், சுத்தமான தண்ணீர், இயற்கை உணவு முதலியன.
- நாம் சைவசமயத்தவர் என்ற நிலையில் ஆலயத்தினதும் ஆலயச் சூழல். நீர்நிலைகள். தலவிருட்சம், நந்தவனம் போன்றவற்றை பாதுகாத்து பராமரித்தல் எமது தலையாய கடமையாகும்.

**மனித உரிமைகளை மதித்து நடத்தல்**

- மனித உரிமைகள் என்பது ஒவ்வொருவரும் மனிதராக இருப்பதன் காரணத்தினால் உரிமைகளைப் பெறவேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் உருவாகும் ஒன்றாகும்.

- ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து அவன் உயிர் வாழும் காலம் வரைக்கும் அவனுக்கான உரிமைகள் கூடவே இருக்கின்றது. உரிமைகளை அரசாங்கம் மதித்து, பாதுகாத்து, நிறைவேற்றுதல் வேண்டும். ஆனால் ஒருவர் உரிமையினை அனுபவிக்கும் போது அடுத்தவர்களைப் பாதிக்காது இருக்க வேண்டியது அவசியமாகும்.

- இது மனிதனது உள்ளார்ந்த கௌரவத்தையும், சமத்துவத்தையும், மற்றும் பராதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கீகரித்துப் பாதுகாத்தலாகும். உலகில் வாழுகின்ற போது சுதந்திரம், நீதி என்பவற்றிற்கு உரிமைகள் அடிப்படையாகவுள்ளது.

- மனித உரிமைகள் வரலாற்றினை எடுத்து நோக்கும்போது, உரிமைகளைப் பாதுகாக்க எழுத்திலான ஆவணம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற நோக்குடன் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பிரான்சிஸ் ருஸ் வெல்டின் மனைவி எலினோர் தலைமையில் ஐக்கிய நாடுகள் தாபனம் எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்றைத் தெரிவு செய்தது. இக்குழுவின் ஆலோசனைப்படி எழுதப்பட்ட ஆவணம் ஐ.நா. பொதுச் சபையினால் 10.12.1948 அன்று நிறைவேற்றப்பட்டது. இதனையே அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் என்கிறோம். இந்நிகழ்வின் காரணமாகவே டிசம்பர் பத்தாந் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினமாக ஐக்கிய நாடுகள் தாபனம் பிரகடனம் செய்துள்ளது.

- மனித உரிமைகள் பிரகடனம் உலகின் சகல நாடுகளிலும் மனித உரிமையின் நிலையினைக் கணிப்பீடு செய்யும் அளவுகோலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 30 உறுப்புரைகளைக் கொண்ட இந்தப் பிரகடனத்தின் முதலாவது வாசகம் மனிதப் பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமையிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும், மனட்சாட்சியையும் இயற்கையாகவே பெற்றவர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

- இந்த ஆவணத்தில் கைச்சாத்திடும் அரசுகள் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கேள்விகளுக்குப் பொறுப்புடன் விடையளிக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

- மனித உரிமைகள் பிரகடனத்தின் பின்னர் சிவில், அரசியல் உரிமைகள் என்றும், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தங்கள் எனவும் இரு விடயங்கள் கொண்டு வரப்பட்டன.

- ஒக்டோபர் முதலாம் திகதி சிறுவர் தினம் அனுட்டிக்கப்படுகின்றது. எமது நாட்டில் உலகில் போர் சூழலின் காரணமாகவும் அதன் பின் முகாம் வாழ்விலும் பொருளாதார பின்னடைவின் காரணமாகவும் சிறுவர்கள், முதியோர்கள் விதவைகள், பெண்கள், விசேட தேவைகொண்ட வாழ்வாதாரத்திற்காக ஏங்கும் எமது சமுதாயத்துக்குச் சிறந்த வாழ்கையை உருவாக்கித்தரும் பொறுப்பு நம் கடமை. எனவே மனித உரிமை தினத்தை கொண்டாடுகின்றோம் என்பதை விட இத்தினத்தின் நோக்கம் பற்றிச் சிந்தித்துச் செயல்படுவோம்.

**தர உள்ளீடுகள்** : - சைவசமய விழுமியப்பண்புகளை விளக்கும் வகையிலான படங்கள்.

- மனித உரிமைகள் விளக்கப்படங்கள், கையேடுகள்
- மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

· சைவசமய விழுமியப் பண்புகளை அறிந்து தம் வாழ்வில் கடைப்பிடிப்பார்.
· மனத்தைக் கட்டுப்படுத்தி வாழும் முறைகளை முன்வைப்பார்.
· ஈதல் எனும் விழுமியத்தினை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வார்
- முதியவர்களை அன்புடன் கனம் பண்ணி வாழும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வார்.
- மங்கல வாழ்த்தும் பயனும் பற்றிய முக்கிய விடயங்களை விளக்குவார்
- இயற்கையை மனித வாழ்வுக்கு ஏற்ப அவற்றைப் பேணிக் காப்பார்
- வாழ்வில் மனித உரிமைகளை மதித்து நடப்பார், ஏனையோருக்கு தெளிவு படுத்துவார்

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள். அதிலுள்ள செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுங்கள். அதனைக் கடைபிடியுங்கள்.

குழு **1,3**

1. மனக்கட்டுப்பாடு என்றால் என்ன?
2. மனக்கட்டுப்பாட்டின் அவசியத்தைப் பட்டியற்படுத்துங்கள்.
3. ஈதல் எனும் அறம் பற்றிய நூலாதாரக் கருத்துக்களை எழுதுங்கள்.
4. முதியோரைக் கட்டாயம் கனம் பண்ணி வாழவேண்டும் எனும் கருத்தைச் சிறிய கதைகளுக்கூடாகக் குறிப்பிடுங்கள்.

குழு **2,4**

5. மங்கல வாழ்த்தும் பயனும் பற்றி நீங்கள் அறிந்த விடயங்களைக் குறிப்பிடுங்கள்?
6. இயற்கையைப் பாதுகாத்து வாழ்வதன் முக்கியத்துவம் பற்றி சிததிரம் வரைக
7. மனித உரிமைகளின் இன்றைய நிலையும் அவற்றை மதித்து நடக்கவேண்டியதன் அவசியத்தையும் முன்வையுங்கள்.

**பின்தொடர் பயிற்சி:**

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- மேற்குறிப்பட்ட சைவசமய விழுமியப் பண்புகளை அவற்றின் அவசியம் உணர்ந்து பிள்ளைகள் தம் வாழ்வில்கடைப்பிடிக்க வழிப்படுத்துங்கள்.
- மேற்குறிப்பிட்ட விழுமியப் பண்புகளைப் பிள்ளைகளுடன் இணைந்து நடைமுறைப்பத்திக் காட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0 :** **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 1.4 :** வாழ்வியல் மேம்பாட்டிற்காக சடங்குகளை அறிந்து, அவற்றை முறைப்படி கடைப்பிடிக்கும் முறையை இனங்காட்டுவார்.

**செயற்பாடு :** ''பிறந்தநாள் விழாவை சைவமுறைப்படி கொண்டாடுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- பிறந்தநாள் விழாவின்போது இடம்பெறும் கிரியைகளை அறிவார்
- பிறந்தநாள் விழாவின் கிரியைகளின் முக்கியத்துவம் குறித்து விவரிப்பார்.
- பிறந்தநாள் விழாவின்போது செய்யப்படும் சடங்குகளின் பொருளைக் கேட்டறிந்து கொள்வார்.
- பிறந்தநாள் விழாவின்போது நடைபெறும் சடங்குகளின் அவசியம் பற்றி அறிந்து கொள்வார்.
- கூட்டு மனப்பாங்குடன் சைவமுறைப்படி பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் உமது வாழ்வில் நீர் கொண்டாடும் விழாக்கள் பற்றி வினவிக் கலந்துரையாடுங்கள்.
- பிறந்தநாள் விழாக்களின்போது செய்யும் சடங்குகள் பற்றி வினவி அவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - வீட்டில் நடைபெறும் வாழ்வியல் விழாக்கள் பல உள்ளன. அவற்றுள் பிறந்தநாள் விழாவும் ஒன்றாகும். இது ஒருவர் பிறந்த நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படுவது ஆகும். ஜனன தினம் எனவும் குறிப்பிடுவர்.
    - நீராடி புத்தாடை அணிதல்.

- வீட்டில் இறைவழிபாடு செய்தல்.
- ஆலயம் சென்று வழிபாடு செய்தல்.
- நாமம், நட்சத்திரம் கூறி அர்ச்சனை செய்தல்.
- பெற்றோர் மற்றும் பெரியோர்களை வணங்கி அவர்களின் ஆசீர்வாதம் பெறுதல்.
- உறவினர், நண்பர்களுடன் இனிப்பு, பலகார உணவு வகைகளை பகிர்ந்து உண்ணுதல்.

- **பிறந்தநாளின்போது செய்யக்கூடியவை:**
  - ஏழைகளுக்கு உதவுதல். (பிறந்த பலனை எவ்வாறு அனுபவித்தல் பற்றி விளக்குவர்)
  - சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்களுக்கு சென்று அவர்களுடன் பிறந்தநாளைக் கொண்டாடி மகிழ்ந்து அவர்களையும் மகிழ்வித்தல்.
- **பிறந்த நாளன்று விலக்க வேண்டியவை:**
  - ஆடம்பரச் செலவுகள்
  - விளக்கை ஊதி அணைத்தல்
  - ஏனையோரைப் புண்படுத்துதல்
  - கேக் வெட்டுதல்
  - மாமிச உணவை உட்கொள்ளல்
  - மெழுகுதிரி பற்றவைத்தல்
  - தீய எண்ணங்கள் கொண்டு தீய செயல்களில் ஈடுபடுதல்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- சைவ முறைப்படி பிறந்தநாள் விழாவை கொண்டாடும் ஒழுங்குமுறையை அட்டவணைப்படுத்துவார்.
- பிறந்தநாள் விழாவை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்பதை விளக்குவார்.
- பிறந்த நாளன்று செய்யக்கூடிய நற்காரியங்களையும், விலக்க வேண்டியவை களையும் பட்டியற்படுத்துவார்.
- பிறந்த நாள் விழா எத்தினத்தன்று கொண்டாடுவது என்பதை மற்றவர்களுக்கு தெளிவு படுத்துவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்,
- புகைப்படங்கள்
- எழுது கடதாசி

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு- 1**

வீட்டில் கொண்டாடும் பிறந்த நாள் விழா எவ்வாறு கொண்டாடப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுங்கள்.

**குழு- 2**

பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடும்போது செய்யக்கூடிய நற்செயல்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு- 3**

பிற்நத நாள் விழா எப்போது கொண்டாடப்பட வேண்டும். அவ்வாறு கொண்டாடப்பட வேண்டியதன் அவசியம் பற்றிக் குறிப்பிடுங்கள்.

### பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- பிள்ளையின் ஜனன தினத்தினை (பிறந்த நட்சத்திரத்தன்று) அடிப்படையாகக் கொண்டு விழாவினை கொண்டாடி, ஆதரவற்றோருக்கு உதவும் மனப்பாங்கினை வளர்க்கவும்.

**தேர்ச்சி 1.0 :** **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 1.5 :** வாழ்வின் மேம்பாட்டில் விரதங்கள், பண்டிகைகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விளங்கி, அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவார்.

**செயற்பாடு :** "விரதங்கள் பற்றிய பராண இதிகாசக் கதைகளையும் பயன்களையும் அறிந்து உரிய நியதிகளின்படி அனுட்டிப்போம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- விரதங்களின் முக்கியத்துவத்தினை அறிந்து, அவற்றினை அனுட்டிப்பார்.
- நாள் விரதங்களையும், மாத விரதங்களையும் அறிவார்.
- விரதங்களை அனுட்டிக்கும்போது விரத நியதிகளைக் கடைப்பிடிப்பார்.
- விரதம் ஒரு வகையில் தவமாகும் என்பதை உணர்வார்.
- உறவினர்கள் விரதம் அனுட்டிக்கும் காலத்தில் ஒத்துழைப்பார்
- விரதங்கள் இறைவனின் திருவருளைப் பெறுவதற்கான வழி என்பதை உணர்ந்து தாமும் கடைப்பிடிக்க முன்வருவார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் நீர் அறிந்த அல்லது கடைப்பிடித்த விரதங்கள் பற்றி கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- விரதங்களை கடைப்பிடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மனதை ஒரு நிலைப்படுத்தும் குறுகிய செயற்பாடுகளைச் செயற்படுத்துங்கள்.
- மாணவர்கள் அனுட்டித்த விரதங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்குக் குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - விரதமானது ஒருவகையில் தவமாகக் கொள்ளலாம்.

- விரதம் என்பது ''மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடல்'' ஆகும். -நாவலர்
- விரதத்தை அனுட்டித்தலின் நோக்கம் மனவடக்கத்தை மேம்படுத்தல்.
- விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஐம்புலன்களை அடக்கி, திரிகரண சுத்தி யுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.
- விரதம் இறைவனது அருளைப் பெறுவதற்கும், மனதை ஒரு நிலைப்படுத்து வதற்கும் உதவுகின்றது.

**பங்குனி உத்தரம்**

- இறைவன் பங்குனி உத்தர நாளில் இமயமலைக்குச் சென்று பார்வதியை மணந்து கொண்ட நாள் ஆகும். இத்திருமணத்தின் பின் உலகில் இருள் நீங்கி ஒளிபெற்றது. (துன்பம் அகன்று இன்பம் செழித்தது) அந்த இன்பத்தினை ஆண்டவன் சக்தியோடு கலந்து இப்பங்குனி உத்தர நாளில் உலகுக்கு அளித்தான்.
- இப் பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி தினத்தில் இறைவன், இறைவியைத் திருமணம் செய்த நாள் அன்றைய தினத்தில் சிவ விரதமான கலியாணசுந்தர விரதத்தை அனுட்டித்து கலியாணசுந்தரரை வழிபடுவார்.
- அனைவரையும் ஒன்றுபடுத்தி எல்லோரும் இன்புற்றிருக்கப் பணியாற்றி, அனைவருக்கும் சோறிட்டு பசியாற்றிப், பிணிபோக்கி வாழவைக்கும் விழா பங்குனி விழா ஆகும்.
- மக்கள் உள்ளம் தழைத்து, இன்பத்தில் இயங்கி **"வையகமுந் துயர்தீர்க"** என ஆரவாரித்துக் கொண்டாடும் விழா இப்பங்குனிப் பெருவிழா ஆகும்.

**வைகாசி விசாகம்**

- வைகாசி விசாகம் என்பது முருகப் பெருமான் உதித்த நாளாகும்
- சரவணப்பொய்கையில் ஆறு தாமரை மலர்களிலே ஆறு குழந்தைகளாக உருவெடுத்து உமையம்மையின் அரவணைப்பினால் ஒரு தெய்வக்குழந்தையாகி ஆறு முகங்களும் பன்னிரெண்டு கைகளுமுடைய முருகன் தோன்றினார்.
- கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் கார்த்திகேயன் எனும் பெயரும் பெற்றார்
- விசாக தினத்திலே பிறந்ததினால் விசாகன் என்றொரு பெயரும் உண்டு
- பிரம்மமுகூர்த்த வேளையில் (காலை 4.30) மணிக்குள் எழுந்து நீராடவேண்டும். நாள்முழுவதும் விரதம் இருக்க முடியாதவர்கள், ஒருவேளை மட்டும் உணவு உண்ணலாம். மற்றவர்கள் பால்,பழம் சாப்பிட்டு விரதம் மேற்கொள்ளலாம்.
- முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரங்களான "ஓம் சரவணபவ" "ஓம் சரவணபவாயநம" "ஓம் முருகா" ஆகிய மந்திரங்களில் ஏதாவது ஒன்றை நாள் முழுதும் ஜெபித்து வர வேண்டும்.
- திருப்புகழ், கந்தசஷ்டிகவசம், ஸ்கந்தகுருகவசம், சண்முககவசம் பாடல்களில் ஏதேனும் ஒன்றைக் காலையிலும், மாலையிலும் பாராயணம் செய்ய வேண்டும்.
- முருகன் கோயிலுக்குச் சென்று விளக்கேற்றி வழிபாடு செய்யவேண்டும்.
- முருகன் கோயில் அமைந்துள்ள மலையை வலம் வந்தால் மிகுந்த புண்ணியம் உண்டாகும். இந்த விரதம் இருப்பவர்களுக்கு புத்திரதோஷம் நீங்கும். குழந்தை இல்லாதவர்களுக்கு விரைவில் மழலைச்செல்வம் கிடைக்கும் என்பது ஐதீகம்.

**ஆனி உத்தரம்**

- ஆனி உத்தரம் சிதம்பர நடராஜர் தரிசனத்தினால் விசேடம் உற்ற தினமாக கொள்ளப்படுகின்றது.
- உத்தரம் என்பது சிம்ம கன்னி ராசிகளுள்ள மண்டலமாகும். இவ்விரண்டு நட்சத்திரங்களும் பூரத்தில் உள்ள இரு நட்சத்திரங்களுடனும் சேர்ந்து சிறப்பான பலன்களைக் கொடுக்கும் தினமாகும்.
- ஆனிமாத உத்தரநட்சத்திரத்தில் நடைபெறும் அபிஷேகத்தை "ஆனித்திருமஞ்சனம்" என்று அழைப்பார்.
- மார்கழித்திருவாதிரையிலும்,சித்திரைத்திருவோணத்திலும், ஆனி உத்தரத்திலும் மாசி, ஆவணி, புரட்டாதி ஆகிய மாதங்களில் பூர்வபக்க சதுர்த்தசிகளிலும்-அதாவது அமாவாசைக்குப் பின்வரும் 14ஆம் நாளிலும் அபிசேகம் நடைபெறும்.
- மார்கழித்திருவாதிரை, ஆனிஉத்தரம் ஆகிய காலங்களில் சிதம்பரத்தில் பத்து நாட்கள் மகோற்சவம் நடைபெறும்.

## சிவராத்திரி

- சிவராத்திரி விரதம் சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும்

- சிவராத்திரி என்ற சொல் சிவனுடைய இராத்திரி, சிவமான ராத்திரி, சிவனை அர்ச்சிக்கும் ராத்திரி, சிவனுக்கு உகந்த இன்பமான ராத்திரி எனப் பல பொருள்படும்

- சிவராத்திரி ஐந்து வகைப்படும்
  - நித்திய சிவராத்திரி
  - பட்ச சிவராத்திரி
  - மாத சிவராத்திரி
  - யோக சிவராத்திரி
  - மகா சிவராத்திரி

- மகா சிவராத்திரியானது மாசி மாத கிருஷ்ண பட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் (பதினான்காம் நாள்) அனுட்டிக்கப்படும்

**விரத நியதிகள்**

- சிவாலய தரிசனம் செய்தல், நான்கு சாமப் பூசைகளிலும் கலந்து கொள்ளுதல் சிவதோத்திரம் பாடுதலும், கேட்டலும்
- பஞ்சாட்சர மந்திரம் செபித்தல் -
- இரவுமுழுவதும் கண்விழித்து இருந்து தியானித்தல் இயலாதோர் இலிங்கோற்பவ காலம் வரை விழித்திருத்தல்
- மறுநாட் காலை விரதம் முடித்து சூரிய உதயத்தின் முன் பாறணை செய்தல்
- சிவராத்திரி மகிமை கூறும் நூல்களைப் படித்தல் - கந்தபுராணம், இலிங்க புராணம், சிவராத்திரி புராணம்

**விரதபலன்கள்**

புண்ணியம் பெருகும் அகவிருள் நீங்கி சிவஞான ஒளி கிடைக்கும் விழுமியப் பண்புகள் வளர்ச்சியடையும் உ-ம் ஜீவகாருண்யம். அன்பு, பொறுமை, பணிவு, கடமை, பகிர்ந்துண்ணல், சகோதரத்துவம்

சிவராத்திரி பற்றிய புராண இதிகாச மற்றும் செவிவழிக் கதைகள் பல உள்ளன.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- விரதங்களின் முக்கியத்துவத்தினையும், அதன் அவசியத்தினையும் பற்றி பேச்சு ஒன்றினை நிகழ்த்துவார்.
- விரதங்கள் அனுட்டிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய விரத நியதிகள் நான்கினை அட்டவணைப்படுத்துவார்.
- விரதங்களையும், அவை அனுட்டிக்க வேண்டிய முறைகள் பற்றி பஞ்சாங்கத்தின் உதவியுடன் அறிக்கை தயாரிப்பார்.
- சிவராத்திரி விரதம் பற்றிக் கதைகளை வாசித்து அறிந்து அவற்றுக்கு விளக்கமளிப்பார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- விரதங்களுக்குரிய கதைகள்
- பஞ்சாங்கம், விரதமகிமை
- எழுது கருவிகள்
- செயற்பாட்டுப் பத்திரம்

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

(விடயத்திற்கேற்ப செயற்பாடுகளைத் தயார் செய்து வழங்குங்கள்)

**குழு- 1**

விரதங்களை நாள், மாத விரதங்கள் என அட்டவணைப்படுத்துங்கள். (பஞ்சாங்கத்தைப் பயன்படுத்துங்கள்)

**குழு- 2**

விரதங்களையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் எழுதுங்கள்.

**குழு- 3**

விரதங்கள் கடைப்பிடிக்கப்படவேண்டியதன் அவசியத்தை எழுதுங்கள்.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**
- விரதங்களை முறையாக அனுட்டிப்பதன் மூலம் ஆன்மீக மேம்பாட்டிற்கு உதவுகின்றது என்பதை உணர்த்துங்கள்.
- பிள்ளைகளின் வயது, விருப்பு, உடல நலம் கருதி அவர்களை விரங்களை கடைப்பிடிக்க ஊக்கப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 :** **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 1.5 :** வாழ்வின் மேம்பாட்டில் விரதங்கள், பண்டிகைகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விளங்கி, அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவர்.

**செயற்பாடு :** ''சித்திரை வருடப்பிறப்புப் பற்றி அறிந்து உரிய முறைப்படி கொண்டாடுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- பண்டிகைகளின் முக்கியத்துவத்தினை அறிந்து, அவற்றினை கொண்டாடுவார்.
- சித்திரை வருடப்பிறப்புப் பற்றி அறிந்து கூறுவார்.
- சித்திரை வருடப்பிறப்பில் காணப்படும் நியதிகளைக் கடைப்பிடிப்பார்.
- மருத்து நீர்வைத்தல் என்பது பிரதானமானது என்பதை உணர்ந்து அவற்றைப் பேணுவார்.
- வருடப்பிறப்பின்போது பஞ்சாங்கத்துக்கு பிரதானம் இடம் கொடுத்து அவற்றை பிரதானமாகக் கொண்டு நடப்பார்.
- வருடப்பிறப்பில் திருவருளைப் பெறுவதற்கான வழிகளை உணர்ந்து தானதர்மங்களில் ஈடுபடுவார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் நீர் அறிந்த அல்லது கொண்டாடிய பண்டிகைகள் பற்றிக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பண்டிகைகள் கொண்டாடுவதனால் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மனதை ஒரு நிலைப்படுத்தும் குறுகிய செயற்பாடுகளைச் செயற்படுத்துங்கள்.
- மாணவர்கள் கொண்டாடிய பண்டிகைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - பண்டிகையானது சமயம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் நடைபெறும் விழாவாகும்.

**சித்திரை வருடப்பிறப்பு**

- மேடம் முதல் மீனம் வரையான 12 இராசிகளும் வருடத்தின் சித்திரை முதல் பங்குனி வரையுள்ள ஒவ்வொரு மாதத்தையும் குறிக்கின்றது. இறைவனை ஒளி வடிவத்தில் வழிபடுவது சூரிய வழிபாடு ஆகும். அந்த வகையில் முதலாவது மேட இராசியில் சூரியன் புகும் தொடக்க நாள் சித்திரை முதல் நாள் ஆகும். இந்நாளினையே சித்திரை வருடப் பிறப்பு எனப் பண்டிகையாகக் கொண்டாடுவது மரபாகும்.
- புதுவருடப் பிறப்பின் புண்ணிய காலத்தில் மருத்து நீர் தேய்த்து நீராடி ஆலயம் சென்று வழிபாட்டில் ஈடுபடுதல் வேண்டும்.
- குரு, பெற்றோர். பெரியோர் ஆகியோரை வணங்கி அவர்களின் ஆசி பெறுதல் வேண்டும்.
- இந்துக்கள் புதுவருட நாளன்று பொங்கல் பூசைகள் செய்வது வழக்கம்.
- சுப நேரத்தில் கைவிஷேசம் நடைபெறும். கைவிஷேசம் என்பது வெற்றிலையில் நெல் அல்லது பச்சசையரிசி இட்டு அதன் மீது காசு பணம் வைத்து குடும்பத்தலைவன் அங்கத்தவர்களுக்கு வழங்குதலைக் குறிக்கும்.
- புதுவருடப் பிறப்பினைத் தொடர்ந்து ஆடல், பாடல், விளையாட்டுக்கள், மங்களகரமான காரியங்கள், விருந்துண்ணல் என்பவற்றில் ஈடுபடுவார்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- பண்டிகைகளின் முக்கியத்துவத்தினையும், அதன் அவசியத்தினையும் பற்றி பேச்சு ஒன்றினை நிகழ்த்துவார்.
- பண்டிகைக் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளை அட்டவணைப்படுத்துவார்.
- பண்டிகைகள் பற்றியும், அவை கொண்டாடும் சிறப்பினையும் பற்றி அறிக்கை தயாரிப்பார்.
- பண்டிகைக்கும் விரதங்களுக்குமிடையிலான ஒற்றுமைகளை எடுத்துரைப்பார்
- பண்டிகைகளின் முக்கியத்துவம் உணர்ந்து அனைவருடன் இணைந்து கொண்டாடுவார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- பண்டிகை தொடர்பான கதைகள்
- பஞ்சாங்கம்
- எழுது கருவிகள்
- செயற்பாட்டுப் பத்திரம்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு- 1,3**

பண்டிகைகளுக்கும் விரதங்களுக்குமிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை அட்டவணைப்படுத்துங்கள்

**குழு- 2,4**

பண்டிகைகள் சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள் பற்றி வில்லுப்பாட்டு ஒன்றினைத் தயார் செய்யுங்கள்.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துக.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- பண்டிகைகள் கொண்டாடுவதன் மூலம் ஆன்மீக மேம்பாட்டிற்கு உதவுகின்றது என்பதை உணர்த்துங்கள்.

**தேர்ச்சி 2.0 :** **பக்தி இறை நம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து அதனைத் தமது வாழ்வில் மேற்கொள்ளுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 :** சமய நூல்களையும், அவற்றின் பக்தி வெளிப்பாடுகளையும் அறிந்து வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு :** ''திருமுறைப் பாடல்களில் வெளிப்படுத்தப்படும் புராண இதிகாசக் கதைகளையும் பக்தி வெளிப்பாடுகளையும் போற்றுவோம்.''

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- திருமுறை என்பதன் பொருளை விளக்குவார்.
- திருமுறைகளின் ஆசிரியர்களையும், வைப்பு முறைகளையும் சுருக்கமாக அறிவார்.
- திருமுறைகள் கூறும் இதிகாச புராணக் கதைகளின் சிறப்பினை விளக்குவார்.
- திருமுறைகள் குறிப்பிடும் புராண இதிகாசக் கதைகள், அடிகளை இனங்கண்டு தொகுப்பார்.
- திருமுறைகள் கூறும் பக்தி வெளிப்பாடுகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- திருமுறை பாடிய நாயன்மார்கள் திருமுறை வைப்பு முறைகளை மாணவர்களிட மிருந்து கேட்டு அறியுங்கள்.
- திருமுறைப் பாடல்களின் இடம், புராண இதிகாசக் கதைகள் தொடர்பான பாடல் அடிகளை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுங்கள்.
- திருமுறைகளின் சிறப்பு, பக்தி வெளிப்பாடு பற்றி மாணவர்கள் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை, குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - திருமுறை என்பது தெய்வத்தன்மை வாய்ந்த முறையாகத் தொகுக்கப்பட்ட நூற்தொகுப்பு.
  - திருமுறைப்பாடல்களில் இறைவனின் வீரதீரச் செயல்கள், அனுக்கிரகங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

- புராண இதிகாசக் கதைகள் மூலம் இறைவனின் கருணைத்திறன் விளக்கப் படுகின்றது.
    - நீலமா கடல் விடம்தனை உண்டு கண்டத்தே வைத்த (நஞ்சுண்ட கதை)
    - வந்த காலன் தன் ஆருயிரதனை வல்லின (காலனை உதைத்தமை)
    - கங்கையை சடையில் வைத்தாய், கதிர் பொறி அரவம் வைத்தாய் (கங்கை அணிந்தமை)
    - பொருதுமுவெயில் செற்றவன் (முப்புரம் எரித்தமை)
    - கரிய கறைக் கண்டன் கண்மேல் ஒரு கண்ணான் (நஞ்சுண்டமை)
    - எடுத்தவன் தருக்கை இழித்தவன் விரலால் (இராவண அனுக்கிரக மூர்த்தம்)
    - இராவணன் மேலது நீறு (இராவண அனுக்கிரக மூர்த்தம்)
    - அர்ச்சுனர்க்குப் பாசுபதம் அளித்தல்.
    - ஆல்கலி சூழ் தென்னிலங்கை யழகர் மண்டோதரிக்கு பேரருள் இன்பம் அளித்த (மண்டோதரிக்கு அருள் கொடுத்தல்)
    - மன்மதனை அழித்து ரதிக்கு அருள் கொடுத்தமை
    - விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த விமலன்

  இவ்வாறான திருமுறைகளில் காணப்படும் பாடல் அடிகள் இறைவனின் கருணைத்திறனையும் பக்தி வெளிப்பாட்டையும் விளக்குகின்றன.

(மேலதிக தகவல்களைத் தேடிப் பெற்றுச் செயற்பாடுகளை முன்னெடுங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- திருமுறைகள் தெய்வத்தன்மை வாய்ந்தன என்பதனை அறிவார்.
- பன்னிரு திருமுறைகளையும், ஆசிரியர்களையும் பட்டியற்படுத்துவார்.
- திருமுறைகளில் காணப்படும் புராண இதிகாசக் கதைகளைத் தேடித் தொகுப்பார்.
- இறைவனின் கருணைத்திறனை அறிந்து தாமும் இறைபக்தி கொள்வார். பொருத்தமான இடங்களில் பொருத்தமான திருமுறைப் பாடல்களைப் பா்டுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- திருமுறைத் தொகுப்பு
- டிமை கடதாசி, பேனா
- புராண, இதிகாச கதைகள் கொண்ட அட்டவணை
- செயற்பாட்டுப் பத்திரம்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு- 1-2**

திருமுறைகளில் காணப்படும், இதிகாச புராணக் கதைகளைக் கொண்ட பத்து அடிகளைத் தேடித் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

**குழு- 3-4**

திருமுறைகளில் இடம்பெறும் ஐந்து புராண இதிகாசக் கதை வரிகளின் விளக்கத்தினைத் தொகுத்து எழுதுங்கள்.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- திருமுறைகளில் இடம்பெறும் புராண இதிகாசக் கதைகளை பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.
- இறைவனின் கருணைத்திறத்தினை பிள்ளைகளுக்கு கூறுங்கள்.

**தேர்ச்சி 2.0 :** **பக்தி இறை நம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து அதனைத் தமது வாழ்வில் மேற்கொள்ளுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 :** நாயன்மாரின் வரலாறுகளினூடாக அவர்களது இறை நம்பிக்கையையும் பக்தி உணர்வையும் அறிந்து அவற்றின் வழி ஒழுகுவார். பக்தியின் சிறப்பினை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு :** "கண்ணப்ப நாயனாரின் கதை மூலம் நாமும் இறைபக்தி உடையவர்களாக இறைபணி செய்து வாழ்வோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- கண்ணப்ப நாயனாரின் வழிபாட்டு முறைகளை விளங்கிக் கொள்வார்.
- கண்ணப்ப நாயனாரின் நற்பண்புகளை எடுத்துரைப்பார்.
- கண்ணப்ப நாயனாரின் வரலாற்றினை விளங்கி தம்மாலான இறை பணிகளைச் செய்வார்.
- இறைவனை பக்தியோடு வழிபாடு செய்பவர்களுக்கு இறைவன் அருள்புரிவான் என்பதை எடுத்துக் கூறுவார்.
- கண்மாற்றுச் சத்திரசிகிச்சைக்கு கண்ணப்ப நாயனார் முன்னோடியாக விளங்கினார் என்பதனை அறிவார்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- நாயன்மார்களின் வரலாற்றினை மாணவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.
- சமய குரவர் தவிர்ந்த ஏனைய நாயன்மார்கள் பற்றி வினாவி அறியுங்கள்.
- அவர்கள் செய்த செயற்கரிய செயல்களைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- இறைவன் அடியவர்களுக்கு எளியவர் என்ற கருத்தினைப் பற்றி கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு, குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - பெரியபுராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் கண்ணப்ப நாயனாரும் ஒருவர்.
  - கண்ணப்பர் பெரியதம்பி நாட்டில் உடுப்பூரில் பிறந்தார்.

- பதினாறு வயதில் நாணன், காடன் என்ற இரு நண்பர்களுடன் வேட்டையாடச் சென்றபோது பொன் முகலி ஆற்றங்கரை அருகில் திருக்களாத்தி மலையில் வீற்றிருக்கும் குடுமித்தேவரை தரிசிக்கும் பேறு கிடைத்தது.
- கொடிய விலங்குகள் வாழும் காட்டில் தனியே இருக்கும் இறைவனுக்கு உணவு படைக்க விரும்பினார். காடனால் வெட்டி வைக்கப்பட்ட இறைச்சியைத் தீயில் பதப்படுத்தி கண்ணப்பர் சுவைத்துப் பார்த்து நல்லவற்றை எடுத்துக் கொண்டும், இறைவனுக்குரிய பூக்களை தனது தலையில் சூடிக் கொண்டும், வாயில் இறைவனுக்குரிய அபிஷேக நீரை உமிழ்ந்தும் சென்று இறை பூசையில் ஈடுபட்டார். அங்கேயிருந்து இறைவனைக் காவல் செய்தார்.
- ஆகம விதிப்படி இவ் ஆலயத்தில் பூசை செய்யும் சிவகோசாரியார் கண்ணப்பரின் செயல் மூலம் வெறுப்படைந்தார்.
- கண்ணப்பரின் உண்மையான அன்பினை உலகத்தவர்களுக்கும் சிவகோசாரியருக்கும் வெளிப்படுத்த இறைவன் திருவுளம் கொண்டார்.
- இறைவன் தனது வலது கண்ணிலிருந்து இரத்தத்தினை வடியச் செய்தார். இதனைக் கண்ட கண்ணப்பர் தனது வலது கண்ணை இறைவனுக்கு எடுத்து வைத்தார். பின் இறைவனின் இடது கண்ணிலிருந்து இரத்தம் வழிவதனைக் கண்ட கண்ணப்பர் தனது காலை இறைவனின் இடது கண்ணில் அடையாளமாக வைத்து இடது கண்ணை எடுக்க முற்பட்டபோது "நில்லு கண்ணப்பா............" என்று அழைத்து தடுத்தாட்கொண்டார். அத்துடன் "கண்ணப்பா நீ எப்போதும் என் வலப் பக்கத்தில் என் காவலனாகவே நிற்கக் கடாவாய்" என அருள் கொடுத்தார். இதன் மூலம் கண்ணப்பரின் வழிபாட்டின் சிறப்பினையும், இறைவனின் கருணையினையும் அறிய முடிகின்றது.
- மணிவாசகர் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்ட பின்......" எனக் குறிப்பிடுகின்றார்.
- கண்ணப்பரின் செயற்கரிய செயலை களாத்தி புராணம், பெரியபுராணம் சிறப்பாகக் கூறுகின்றது.
- சிவலிங்கத்தினை வழிபட்டு முத்தி அடைந்த சிவனடியார் ஆவர். குருபூசைத்தினம் தை மாத மிருகசீரிடம்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- கண்ணப்பநாயனாரின் வாழ்க்கை வரலாற்றினை அறிவார்.
- கண்ணப்பர் செய்த இறைவழிபாட்டினை விளக்குவார்.
- உண்மையான பக்தியே இறைவழிபாட்டில் உயர்வு என்பதனைக் கூறுவார்.
- இறைவன் அடியவர்களுக்கு எளியவர் என்பதனை விளக்குவார்.
- கண்ணப்பநாயனார் குரு பூசையைச் சிறப்பாகக் கொண்டாடுவார்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு:1,3**

கண்ணப்ப நாயனார் வாழ்க்கை வரலாறு, இறை வழிபாடு பற்றிய விடயங்களை உள்ளடக்கி வில்லுப்பாட்டு ஒன்றை வகுப்பறையில் நிகழ்த்திக் காட்டுங்கள்.

**குழு:2,4**

கண்ணப்ப நாயனார் குரு பூசை தொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுத்து அவற்றை நடைமுறைப்படுத்துங்கள்.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துக.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- உள்ளன்போடு இறைவழிபாடு செய்வது சிறப்பானது என்ற எண்ணத்தினைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தி இறைவழிபாட்டினை மேற்கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** திருமுறைப் பாடல்களையும். தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு :** "திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரத்தினைப் பண்ணோடும், பக்தியோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பதிகத்தினை எழுதுவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பதிகத்தினை எழுதுவார்.
- தனது நாளாந்த வழிபாட்டில் பதிகத்தினை ஓதுவார்.
- திருஞான சம்பந்தர் பாடல்களில் காணப்படும் இறைபற்றிய உண்மைகளை எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிய வேறு பதிகம் ஒன்றினைக் கேட்டு அறியுங்கள்.
- அதனைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள். (சங்கீத ஆசிரியரின் உதவியை / இறுவட்டினைப் பயன்படுத்தலாம்.)

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- பதிகத்தினை பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத்துங்கள்.
- பதிகத்தைக் காட்சிப்படுத்துங்கள்
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே தேவாரத்தினை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
  - " கற்றாங் கெரியோம்பி.....", "மண்ணில் நல்லவண்ணம்" தில்லை, சீர்காழி (திருக்கழுமலம்) ஆகிய தலங்கள் மீது பாடப்பட்டன.
  - " கற்றாங் கெரியோம்பி....." என்னும் தேவாரம் தில்லையம்பதியில் திருநடனம் புரியும் கூத்தப் பெருமானின் திருவடியை பற்றுக் கோடாய் பற்றியவர்களை பாவங்கள் பற்றாது எனக் கூறுகிறது.
  - "மண்ணில் நல்லவண்ணம்......." என்னும் தேவாரம் திருக்கழுமல திருப்பதிகத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பதிகம் பாடி சிவனடியார்கள் அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்னும் ஆக்கச் சிந்தனையை வளர்ப்பதாக அமைந்துள்ளது. அத்துடன்,

- இறைவனை மெய்யன்போடு துதித்து வழிபடுவோருக்கு குறைகள் நேர்வதில்லை என வலியுறுத்தப்படுகிறது.
- தேவாரம் பாட ஆரம்பிக்கும்போதும், பாடி முடிந்த பின்பும் **'திருச்சிற்றம்பலம்'** கூறப்படவேண்டும்.
- தேவாரத்தினை எழுத்துப் பிழையின்றி உச்சரித்துப் பண்ணோடு பாட வேண்டும்.

  தேவாரங்களை உரிய விதிகளின்படி வரிக்கிரமமாக எழுதுதல் வேண்டும் அவற்றை மனனம் செய்து பண்ணோடு பாடுதல் வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- "கற்றாங் கெரியோம்பி", "மண்ணில் நல்லவண்ணம்" எனும் பதிகங்கள் தில்லை, சீர்காழி என்னும் தலங்கள் மீது பாடப்பட்டன என்பதைக் கூறுவார்.
- தில்லை, சீர்காழி என்பன பாடல் பெற்ற தலங்கள் எனக் கூறுவார்.
- இறைவனை மெய்யன்போடு துதித்துப் பாடி குறைகள் இன்றி வாழலாம் என்பதை விளக்குவார்.
- இறைவனின் பெருமைகளை எடுத்துக் கூறுவார்.
- தேவாரங்களைப் பண்ணோடும், பக்தியோடும் பாடுவர். வரிக்கிரமமாக எழுதுவார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருமுறைத் தொகுப்பு
- இறுவட்டு, ஒலிநாடா
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 3.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

(1) "கற்றாங் கெரியோம்பி" யாரால், எத்தலம் மீது பாடப்பட்டது?

(2) இத்தேவாரத்தை உமது குழுவினருடன் சேர்ந்து பண்ணோடு இசைத்துக் காட்டுக.

(3) பாடலை வரிக்கிரமமாக எழுதுங்கள்

**குழு - 2**

(1) "மண்ணில் நல்லவண்ணம்" வாழ யாது செய்தல் வேண்டும்?

(2) இத்தேவாரத்தை உமது குழுவினருடன் சேர்ந்து பண்ணோடு இசைத்துக் காட்டுக.

(3) பாடலை வரிக்கிரமமாக எழுதுங்கள்

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துக.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்

  (1) வீட்டில் காலை/மாலையில் விளக்கேற்றி வழிபடும்போது தேவாரங்களைப் பிள்ளைகள் பண்ணோடு பாட வழிப்படுத்துங்கள்.

  (2) நீங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** **திருமுறைப் பாடல்களையும். தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு :** ‘‘திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரத்தினைப் பண்ணோடும், பக்தி யோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பதிகத்தினை எழுதுவோம்.’’

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பதிகத்தினை எழுதுவார்.
- தனது நாளாந்த வழிபாட்டில் பதிகங்களைப் பாடுவார்.
- நாவுக்கரசர் பாடல்களில் காணப்படும் இறைபற்றிய உண்மைகளை எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய வேறு பதிகத்தினைக் கேட்டு அறியுங்கள்.
- அப்பதிகத்தினைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- பதிகங்களைப் பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரின் உதவியை / இறுவட்டினைப் பயன் படுத்தலாம்.)

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- பதிகத்தினை பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத் துங்கள்.
- பதிகத்தைக் காட்சிப்படுத்துங்கள்
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே தேவாரத்தினை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துங்கள்.
  - ‘‘பண்ணி நேர்மொழி.....’’, ‘‘குனித்த புருவமும்......’’ ஆகிய பதிகங்கள் முறையே திருமறைக்காடு, சிதம்பரம் ஆகிய தலங்கள் மீது பாடப்பட்டன.
  - தலயாத்திரைகள் மேற்கொண்ட சம்பந்தரும், அப்பரும் ஒரு சமயம் திருமறைக்காடு என்ற தலத்தை அடைந்தனர். அங்குள்ள திருக்கோயிலின் தலைவாசல் நீண்டகாலம் மூடப்பட்டிருப்பதை அறிந்த அப்பர் அக்கோயிலின் கதவை திறக்கப் பாடிய பதிகமே ‘‘பண்ணி நேர்மொழி.....’’ என்பதாகும்.
  - திருநாவுக்கரசர் கூத்தப்பெருமானைக் கும்பிட வேண்டும் என்னும் ஆசையால் சிதம்பரம் வந்து சேர்ந்தார். அங்கே கனகசபையிலே ஆனந்த நடனம் புரியும் நடராஜப் பெருமானைக் கண்டு அவன் அருளில் திளைத்து பாடியதே ‘‘குனித்த புருவமும்......’’ என்னும் பதிகமாகும்.

- இறைவனின் அருட்கருணையையும், தோற்றப் பொலிவையும் இவ்விரு பாடல்களும் எடுத்துக் கூறுகின்றன.
- இறைவனின் திருநடனத்தைக் காண்பதற்காகவே அனைவரும் வெறுக்கும் மனிதப் பிறவியும் வேண்டும் எனக்கு எனப் பாடுகின்றார்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
- "பண்ணி நேர்மொழி.....", "குனித்த புருவமும்......" ஆகிய பதிகங்களை திருநாவுக்கரசர் பாடினார் என்பதை அறிவார்.
- திருநாவுக்கரசர் தலயாத்திரைகளை மேற்கொண்டார் என்பதை விளக்குவார்.
- இறைவனின் நடராஜ வடிவத்தின் சிறப்பையும் பெருமைகளையும் கூறுவார்.
- பதிகங்களைப் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.
- திருமுறைகளை அன்றாடம் பாடவேண்டும் என்பதை மற்றவர்களுக்கு எடுதுரைப்பார்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- திருமுறைத் தொகுப்பு
- இறுவட்டு, ஒலிநாடா
- டிமை கடதாசி, நிறப்பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

## இணைப்பு: 3.1.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

(1) "பண்ணி நேர்மொழி....." யாரால், எத்தலம் மீது பாடப்பட்டது?

(2) அத்தேவாரம் பாடி முடிந்ததும் நிகழ்ந்த அற்புதம் யாது?

(3) "பண்ணி நேர்மொழி....." என்னும் தேவாரத்தினை வரிக்கிரமமாக எழுதுக.

**குழு - 2**

(1) "குனித்த புருவமும்......" யாரால், எத்தலம் மீது பாடப்பட்டது?

(2) திருநாவுக்கரசு சுவாமிகள் எதற்காக நாம் மனிதப் பிறவியை விரும்பி பெறுவதாகக் கூறுகின்றார்?

(3) "குனித்த புருவமும்......" என்ற தேவாரத்தைப் பண்ணோடு குழுவாகப் பாடுங்கள் பாடலை எழுத்துப் பிழைகள் இன்றி வரிக்கிரமமாக எழுதுங்கள்

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்

  (1) வீட்டில் இறைவனை வழிப்படும்போது பதிகங்களைப் பண்ணோடு பாட வழிப் படுத்துங்கள்.

  (2) பிள்ளைகளுடன் நீங்களும் இணைந்து பாடுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** **திருமுறைப் பாடல்களையும். தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு :** "சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தினைப் பண்ணோடும், பக்தி யோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பதிகத் தினை எழுதுவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாகப் பதிகத்தினை எழுதுவார்.
- தமது நாளாந்த வழிபாட்டில் பண்ணோடும் பக்தியோடும் பதிகங் களைப் பாடி வழிபடுவார்.

  திருமுறைப்பாடல்கள் பாடுவதன் அவசியத்தை ஏனையோருக்கு எடுத்துரைப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- மாணவர்களிடம் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பதிகத்தினைக் கேட்டு அறியுங்கள்.
- பதிகங்களைப் பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரின் உதவியை / இறுவட்டினைப் பயன் படுத்தலாம்.)

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.

  செயற்பாட்டிற்கான தரஉள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- பதிகத்தினைப் பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத் துங்கள்.
- பதிகத்தைக் காட்சிப்படுத்துங்கள்
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே தேவாரத்தினை மனனம் செய்து பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
  - "நீள நினைந்தடியேன்.....", "தில்லைவாழ் அந்தணர்......" என்னும் திருப் பதிகங்கள் சுந்தரமூர்த்தி நாயனாரால் திருக்கோளிலி, திருவாரூர் முதலிய தலங்கள் மீது பாடப்பட்டவையாகும்.
  - "நீள நினைந்தடியேன்....." என்னும் பதிகமானது சுந்தரர் பரவையாருக்காக குண்டையூர் கிழாரிடம் பெற்ற நெல் மூட்டையை பரவையாரின் மாளிகைக் குச் சுமந்துச் செல்ல கூலியாள் ஒருவரும் கிடைக்கவில்லை. எனவே சுந்தரர் அந்த நெல் மூட்டையைக் கொண்டு செல்ல எம்பெருமானின் அருளை வேண்டிப் பாடினார்.
  - "தில்லைவாழ் அந்தணர்......" என்னும் பதிகமானது திருவாரூர் கோயிலின் முன்புறத்தில் அமைந்த தேவாசிரியன் மண்டபத்திற் கூடியிருந்த அடியார் களைப் பார்த்துப் பாடிய திருத்தொண்டத்தொகையின் முதலாவது பாட லாகும்.

- இறைவனிடம் தமது வாழ்க்கைக்கு வேண்டியவற்றை நட்புரிமையுடன் வேண்டிப் பெற்ற பண்பினையும், இறைவனுக்கு மட்டுமன்றி அவனது அடியவர்க்கும் தான் அடிமை இறையடியார்களையும் உயர்த்தியும் போற்றியும் பாடிய உயர்ந்த பண்பினையும் இத்தேவாரங்களில் காணலாம்.
- உண்மையான பக்தர்களின் வேண்டுதல்களுக்கு இறைவன் செவி சாய்ப்பான் என்னும் உண்மையை உணரலாம்.
- தேவாரங்கள் பண்ணோடும், பக்தியோடும் பாடப்பட வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- "நீள நினைந்தடியேன்.....", "தில்லைவாழ் அந்தணர்......" ஆகிய பதிகங்கள் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டது என்பதை அறிவார்.
- அத்தேவாரங்கள் பாடப்பட்ட தலங்களின் சிறப்புக்களை எடுத்துரைப்பார்.
- "நீள நினைந்தடியேன்....." - சுந்தரருக்கு இறைவன் அருள் பாலித்த திறத்தினையும், "தில்லைவாழ் அந்தணர்......" - சுந்தரரின் சிவபக்தியின் உயர்வினையும் எடுத்துக் காட்டுவதை விளக்குவார்.
- பதிகங்களைப் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.
- தேவாரம் பாடும் முன்னும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- திருமுறைத் தொகுப்பு
- இறுவட்டு
- டிமை கடதாசி
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 3.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

(1) "நீள நினைந்தடியேன்....." என்னும் பதிகம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?

(2) "வாளன கண்மடவாள்" என சுந்தரர் யாரைக் குறிப்பிடுகின்றார்?

(3) சுந்தரர் நெற்குவியலைப் பெற்றுக் கொண்ட செல்வந்தர் யார்?

(4) "நீள நினைந்தடியேன்....." என்னும் பதிகத்தை உமது குழுவினருடன் பாடிக் காட்டுக.

**குழு - 2**

(1) "தில்லைவாழ் அந்தணர்......"என்பதை முதலாகக் கொண்டு சுந்தரர் பாடிய நூல்யாது?

(2) இப்பதிகம் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?

(3) "தில்லைவாழ் அந்தணர்........" என்னும் தேவாரத்தினை வரிக்கிரமமாக எழுதிக் காட்சிப்படுத்துக. அவற்றைக் குழுவாகப் பாடிக் காட்டுங்கள்.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  - (1) வீடு, கோயில், பாடசாலை. சமய விழாக்களின்போது பதிகங்களைப் பண்ணோடு பாட பிள்ளைகளை ஊக்கப்படுத்துங்கள்.
  - (2) பிள்ளைகளுடன் நீங்களும் சேர்ந்து பாடுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** **திருமுறைப் பாடல்களையும். தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு :** ''மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகப் பாடல்களைப் பண்ணோடும், பக்தியோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக திருவாசகத்தினை எழுதுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக திருவாசகத்தினை எழுதுவார்.
- தமது நாளாந்த வழிபாட்டில் பண்ணோடும் பக்தியோடும் திருவாசகத்தினை ஓதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவாசகத்தினைக் கேட்டு அறியுங்கள்.
- திருவாசகத்தினைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- திருவாசகத்தை பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரின் உதவியை / இறுவட்டினைப் பயன் படுத்தலாம்.)

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- திருவாசகத்தினைப் பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத் துங்கள்.
- திருவாசகத்தைக் காட்சிப்படுத்துங்கள்
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே திருவாசகத்தினை மனனம் செய்து பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
  - திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்டது. இது எட்டாந் திருமுறையாகும்.
  - திருவாசகத்தில் திருச்சதகம், திருச்சாழல் அச்சோ பதிகம், திருவம்மானை, திருவெம்பாவை, பிடித்த பத்து, குழைத்த பத்து, வாழாப்பத்து என பல்வகைப் பாடல்கள் உள்ளன.
  - ''பாரொடு விண்ணாய்.....'' என்ற பதிகம் வாழாபத்து என்னும் தொகுதியில் அமைந்த பாடலாகும்.

- இப்பாடலானது இவ்வுலக வாழ்வை வெறுத்து இறைவன் தன்னை அருள் கூர்ந்து அழைத்துக் கொள்ள வேண்டும் என இறைவனிடம் மாணிக்கவாசகர் கேட்பதாக பாடியுள்ளார்.
- திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் இறைவன் மீது பாடப்பட்டது.
- திருவாசகத்தை ஓத முன்னும், ஓதிய பின்னும் திருச்சிற்றம்பலம் கூற வேண்டும்.
- திருவாசகத்தைப் பண்ணோடும், பக்தியோடும் பாட வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- திருவாசகம் மாணிக்கவாசகரால் பாடப்பட்டது என்பதை அறிவார்.
- திருவாசகம் பல்வகைப் பாடல்களின் தொகுதி என்பதைக் கூறுவார்.
- மாணிக்கவாசகரின் பக்தி வைராக்கியத்தை விளக்குவார்.
- திருவாசகப் பாடல்களைப் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.
- திருவாசகம் பாடும் முன்னும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திருவாசகம்
- இறுவட்டு
- டிமை கடதாசி
- செயற்பாட்டுப் பத்திரம்

## இணைப்பு: 3.1.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு:**

(1) திருவாசகம் யாரால் பாடப்பட்டது? அது எத்தனையாந் திருமுறையில் அடங்கும்?

(2) திருவாசகத்தில் அடங்கும் பாடல் வகைகள் எவை?

(3) "பாரொடு விண்ணாய்....." என்னும் பதிகத்தில் மாணிக்கவாசகர் இறைவனை எவ்வா றெல்லாம் விளித்துப் பாடியுள்ளார்?

(4) "பாரொடு விண்ணாய்....." என்னும் திருவாச பாடலை டிமை கடதாசியில் எழுதி, உமது வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள். அவற்றைக் குழுக்களாக இணைந்து பாடிக் காட்டுங்கள்

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  - (1) வீடு, சமய, சமூக நிகழ்வுகளில் பதிகங்களைப் பண்ணோடு பாடப் பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்.
  - (2) பிள்ளைகளுடன் நீங்களும் இணைந்து பாடுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** **திருமுறைப் பாடல்களையும். தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு :** “ திருவிசைப்பா, திருப் பல்லாண்டுப் பாடல்களையும் பண்ணோடும், பக்தியோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக திருவாசகத்தினை எழுதுவோம்.”

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- திருமாளிகைத்தேவர் ஒன்பது அடியவர்களுடன் சேர்ந்து பாடிய திருவிசைப்பாப் பாடலை பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- சேந்தனாரின் திருப்பல்லாண்டுப் பாடலை பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.
- வரிக்கிரமமாக எழுத்துப் பிழையின்றி திருவிசைப்பா, திருப் பல்லாண்டு என்பவற்றை எழுதுவார்.
- திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடல்களின் சிறப்புக் கருதி ஏனையோரும் பாடுதற்கு உதவியளிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் திருப்பல்லாண்டு, திருவிசைப்பா பாடல்களைக் கேட்டு அறியுங்கள்.
- இப்பாக்களைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- இப்பாடல்களைப் பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரின் உதவியை / இறுவட்டினைப் பயன் படுத்தலாம்.)

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுக்கான தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களை மனனம் செய்து பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- திருவிசைப்பா என்னும் அருட்பாடல்கள் ஒன்பதாந் திருமுறையில் அடங்குகின்றன.
- இதன் சிறப்பு யாதெனில் இப்பாடல்கள் திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது அடியவர்களால் பாடப்பட்டமை ஆகும்.
- திருவீழிமிழலை என்னும் தலத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவனின் உயர்வை போற்றிப் பாடிய பாடல்களில் ஒன்றாகிய “ஏகநாயகனை” எனும் பாடல் அமைந்துள்ளது.
- திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களும் ஒன்பதாந் திருமுறையில் அடங்கு கின்றன.
- திருப்பல்லாண்டை சேந்தனார் பாடினார்.

- சிதம்பரத்தில் திருவாதிரை நாளில் ஓடாது நின்ற திருவாதிரைத் தேரை திருப்பல்லாண்டு பாடி ஓடச் செய்த பெருமை கொண்டது.
- தில்லையில் எழுந்தருளி இருக்கின்ற சிவபெருமானின் திருவடிச் சிறப்பை "சிவனடியே" எனத் தொடங்கும் இப்பாடல் விளக்குகிறது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
- திருவிசைப்பாவினை திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பது அடியவர்களால் பாடப்பட்டது என்பதை அறிவார்.
- திருப்பல்லாண்டினை சேந்தனார் பாடினார் என்பதைக் கூறுவார்.
- இவ்விரு பாடல் தொகுதிகளும் ஒன்பதாந் திருமுறையில் அடங்குவன என விளக்குவார்.
- இவ்விரு பாடல்களிலும் இடம்பெறும் இறைவனின் அருட்சிறப்பை எடுத்துக் கூறுவார்.
- திருவிசைப்பா பாடலையும், திருப்பல்லாண்டு பாடலையும் பக்தியோடும், பண்ணோடும் பாடிக் காட்டுவார்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- திருவிசைப்பா, திருப்பல்லாண்டு எழுதப்பட்ட அட்டை
- பாடல் இறுவெட்டு, திருமுறைத் தொகுப்பு
- நிறப்பேனாக்கள், டிமை கடதாசி
- செயற்பாட்டுப் பத்திரம்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

(1) திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?

(2) இதனைப் பாடியோர் யாவர்?

(3) திருவிசைப்பாவின் சிறப்பென நீர் கருதுவது யாது?

**குழு - 2**

(1) திருப்பல்லாண்டு எத்தனை பாடல்களைக் கொண்டது?

(2) இதனைப் பாடியவர் யார்?

(3) திருப்பல்லாண்டு பாடப்பட்ட சந்தர்ப்பத்தினை உமது குழுவினருடன் இணைந்து சிறு நாடகமாக நடித்துக் காட்டுக.

**குழு - 3**

(1) டிமை கடதாசியைப் பயன்படுத்தி "ஏகநாயகனை", "சிவனடியே" என்னும் பாடல்களை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதிக் காட்டுக. அவற்றின் அருப்பத விளக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள்.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  (1) வீடு, சமூக நிகழ்வுகள் போன்றவற்றில் சந்தர்ப்பம் அமையும்போது இவற்றை பண்ணோடு பாட வழிப்படுத்துங்கள்.
  (2) பிள்ளைகளின் இச்செயற்பாடுகளின்போது நீங்களும் முன்மாதிரியாகத் திகழுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** **திருமுறைப் பாடல்களையும். தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு :** "சேக்கிழாரின் "இறவாத இன்ப அன்பு....." எனும் பாடலை பண்ணோடும், பக்தியோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவோம்."

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- பஞ்சபுராணம் பற்றி தெளிவாக விளக்கம் கூறுவார்.
- முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்கள் என்பதை விபரிப்பார்.
- பஞ்சபுராணம் பாடி முடிந்த பின்னரே தோத்திரப் பாடல்கள் பாடப்படும் என்பதை அறிந்து கொள்வார்.
- தேவாரங்கள், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்பவற்றைப் பண்ணோடு பாடிக் காட்டுவார்.
- திருமுறைப்பாடல்கள் தெய்வ சக்தி கொண்டது என்பதை எடுத்துரைப்பார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் பெரிய புராணப் பாடலையும், திருப்புகழ் பாடலையும் கேட்டு அறியுங்கள்.
- இப்பாடல்களைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- இப்பாடல்களைப் பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரின் உதவியை / இறுவட்டினைப் பயன் படுத்தலாம்.)

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- குழுச் செயற்பாட்டுக்கான தரஉள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் செயற்படுவதை அவதானியுங்கள்.
- பெரிய புராணம், திருப்புகழ் பாடல்களைப் பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடல்களை மனனம் செய்து பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறையாக அமைந்துள்ளது.
- இதனை சேக்கிழார் பெருமான் பாடினார்.
- பெரியபுராணத்தில் 63 தனியடியார்கள் 9 தொகையடியார்கள் பற்றிய வரலாற்று சிறப்புக்களை வெளிப்படுத்துகின்றது.

- பெரியபுராணம் 2 காண்டங்களையும், 13 சருக்கங்களையும், 4287 விருத்தப்பாக்களையும் கொண்டது.
- பெரியபுராணம் சைவ அடியார்களின் பெருமைகளை எடுத்துரைக்கின்றது. இந்நூல் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான காரைக்கால் அம்மையார் புராணத்தில் இடம்பெறும் பாடலே “இறவாத இன்ப அன்பு.....” என்ற பாடலாகும்.
- சிவபிரானின் திருவடிக்கீழ் இளைப்பாறும் பெரும்பேற்றை இப்பாடலில் காரைக்கால் அம்மையார் வேண்டுவதாக சேக்கிழார் பாடியுள்ளார்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
- பெரிய புராணம் சேக்கிழாரால் பாடப்பட்டது.
- பன்னிரண்டாந் திருமுறையான பெரிய புராணம், பஞ்ச புராணத்தின் இறுதியில் பாடப்படுகிறது என விளக்குவார்.
- இறவாத இன்ப அன்பு வேண்டி... என்ற பாடலின் பொருளை விளக்குவார்
- இப்பாடல்களைப் பக்தியோடும், பண்ணோடும் பாடிக் காட்டுவார்.
- இறையடியார்களுக்குச் செய்யவேண்டிய தொண்டின் அவசியம் பற்றி எடுத்துரைப்பார்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- அடியார்களின் திருவுருவப் படங்கள்
- பெரிய புராணம் பாடல் எழுதப்பட்ட அட்டை
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 3.1.1:**

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1,3**

(1) பெரிய புராணத்தின் முதல் அடி யாது?

(2) பெரிய புராணத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர் ஒன்றைக் கூறுக.

(3) சேக்கிழாரின் இயற்பெயர் யாது?

(4) “இறவாத வின்ப.......” என்ற பாடலை உமது குழுவினருடன் சேர்ந்து பண்ணோடு பாடிக் காட்டுக.

**குழு - 2**

(1) பெரிய புராணம் குறிப்பிடும் பக்தியின் அவசியம் பற்றிக் குறிப்பிடுங்கள்.

(2) பெரியபுராணத்தின் தனிச் சிறப்புக்கள் இரண்டினை எழுதுக.

(3) சிவனடியார்கள் பற்றிக் கூறும் பெரியபுராணக் கருத்துக்களை எடுத்துக்காட்டுங்கள்.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  (1) வீடு, ஆலயம் என்பவற்றில் இறைவழிபாட்டின்போது பண்ணோடு பாடி வழிபடவும் வழிப்படுத்துங்கள்.

  (2) நீங்களும் பண்ணோடு பாடி இறைவழிபாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** **திருமுறைப் பாடல்களையும். தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும், பக்தியோடும் பாடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவார்.

**செயற்பாடு :** "அருணகிரிநாதரின் "பக்தியால் யானுனைப்......" பாடலை பக்தியோடு பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக திருப்புகழை எழுதுவோம்."

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- திருப்புகழ் பற்றி தெளிவாக விளக்கம் கூறுவார்.
- திருப்புகழ் அருணகிரிநாதரால் பாடப்பட்டது என்பதை விபரிப்பார்.
- பஞ்சபராணம் பாடப்பட்தும் தோத்திரப் பாடல்கள் பாடப்படும் என்பதை அறிந்து கொள்வார்.
- திருப்புகழ் முருகப் பெருமானின் தனிச் சிறப்புக்களை எடுத்தியம்பும் என எடுத்துத்துரைப்பார்
- தோத்திரப் பாடல்களைப் பக்தியோடு பாடிக் காட்டுவார்.

## பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- மாணவர்களிடம் திருப்புகழ் பாடல்கள் பற்றி கேட்டு அறியுங்கள்.
- இப்பாடல்களைப் பக்தியோடு பாடும்படி கேளுங்கள்.
- இப்பாடல்களைப் பக்தியோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரின் உதவியை / இறுவட்டினைப் பயன் படுத்தலாம்.)

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள். செயற்பாட்டுக்கான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- திருப்புகழ் பாடல்களை பக்தியோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே திருப்புகழ்ப் பாடல்களை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்ட பின்னர் பாடப்பட்டவைகள் தோத்திரப்பாடல்கள் ஆகும்.
- தோத்திரப்பாடல்களில் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், அபிராமி அந்தாதி, சகலகலா வல்லிமாலை எனபன அடங்கும்.
- "பக்தியால் யானுனைப்......" எனும் திருப்புகழை அருணகிரிநாதர் பாடினார்.

- திருப்புகழானது முருகப் பெருமானின் புகழை ஆழ்ந்த பொருள் அமைதி, சந்தம், தடை யில்லா நடை, இசையின்பம், தாளக்கட்டு என்பன அமைய பாடப்பட்ட சிறப்புடையது.
- இதன் சிறப்புக் காரணமாக அருணகிரிநாதரும் “வாக்கிற்கு அருணகிரி” என்னும் பெரும் புகழை அடைந்தார்.
- அருணகிரிநாதர் “பக்தியால் யானுனைப்......” என்னும் பாடலில் முருகப் பெருமானிடம் முக்தி இன்பத்தை வேண்டிப் பாடுகின்றார்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- திருப்புகழ் அருணகிரிநாதரால் பாடப்பட்டது.
- பஞ்சபுராணம் பாடி முடிந்ததும் தோத்திரப் பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்பங் களை அவதானித்து கூறுவார்.
- இப்பாடல்களைப் பக்தியோடு பாடுவதன் மூலம் இறைபக்தி மேலோங்கும் என்பதை வெளிப்படுத்துவார்.
- ஆன்மீகப் பயணத்தில் மறைந்து உறையும் இறைவனை எம் கண்முன்னே கொண்டுவரும் பேற்றைத் திருப்புகழ் கொண்டுள்ளது என்பதை ஏனையோருக்கு எடுத்துரைப்பார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- அடியார்களின் திருவுருவ படங்கள்
- திருப்புகழ் பாடல் எழுதிய அட்டை
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 3.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

**குழு - 2**

(1) திருப்புகழைப் பாடியவர் யார்?

(2) திருப்புகழின் தனிச்சிறப்புகள் இரண்டினை எழுதுக.

(3) திருப்புகழை உமது குழுவினருடன் சேர்ந்து பண்ணோடு பாடிக் காட்டுக.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  - (1) வீடு, ஆலயம் என்பவற்றில் இறைவழிபாட்டின்போது பக்தியோடு பாடி வழிபடவும் வழிப்படுத்துங்கள்.
  - (2) நீங்களும் பக்தியோடு பாடி இறைவழிபாட்டில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 1.0 :** **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 :** சைவசமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு :** ''ஆலய வழிபாட்டில் காணப்படும் அறிவியல் உண்மைகளை அறிந்து போற்றுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- ஆலயம் என்பதன் பொருளை விளக்குவார்.
- ஆலய வழிபாட்டின் அவசியம் பற்றி விபரிப்பார்.
- ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தினை அறிவார்.
- ஆலய வழிபாட்டில் காணப்படும் சமய, விஞ்ஞான ரீதியான கருத்துக்களைத் தேடிப் பெறுவார் அவற்றை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவார்.
- கட்டிட அமைப்புக்களின் தத்துவத்தை மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார் நமஸ்காரங்கள், நேர்த்திகள் என்பவற்றின் சமய விஞ்ஞான கருத்துக்களை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவார்
- ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கு ஏற்ப வழிபாடுகளில் ஈடுபடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் ஆலயத்திற்கு செல்லும் முறை பற்றி கூற இடமளியுங்கள்.
- ஆலயத்தில் சென்றதும் முதலில் கண்ணுக்கு புலப்படுவது எது என வினவி அதனை முதலில் வழிபடுவதற்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ஆலயத்தினுள் வழிபடும் ஒழுங்கு விதிகளில் காணப்படும் விஞ்ஞான தொடர்பு பற்றி வினவிக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - ஆலய வழிபாட்டில் காணப்படும் அறிவியல் உண்மைகளை ஆராய்ந்து அவற்றுக்கேற்ப வழிபாடுகளில் ஈடுபடுதல்.

- கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பதின் விஞ்ஞான ரீதியான உண்மை
  ( கோபுரத்தின் கலசத்தில் வைக்கப்படும் நவதானியங்களின் சக்தியானது ஆலயத்தைச் சுற்றியிருக்கும் மக்களை இடி மின்னல் போன்ற அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கும். அதனாலேதான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற அறிவியல் உண்மையை முன்னோர்கள் விளக்கியிருந்தனர்)
- ஆலயத்தின் அமைப்பு விதிகள் (மனித உடல். சுற்றுப்பிரகாரம், வாயில்கள், உருவங்கள்)
- கோபுரத்தின் தத்துவம் ( அதில் அமைக்கப்படும் தளங்கள், உருவங்கள் உலகத்தில் காணப்படும் அனைத்துவிதமான செயற்பாடுகளும்)
- மூலஸ்தானம், கலசம், கொடித்தம்பம் தொடர்பு (மூல முர்த்திக்கும் பலிபீடத்திற்கும் குறுக்காக செல்லக்கூடாது என்பதற்கான காரணம்)
- நேர்த்திக்கடன் வழிபாடு -காவடி, கற்பூரச்சட்டி, தீமிதிப்பு, மிதிகட்டை, அங்கப்பிரதட்சணம், அலகிடுதல் ( தற்கால அக்குபஞ்சர் வைத்திய முறைமையை எமது சமயம் பல ஆண்டுகளுக்கு முன் காவடி, அலகுகுத்தல், மிதியடிக் கட்டை போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்தியிருந்தது)
- நவக்கிரக வழிபாடு ( கிரகங்களுக்கும் இறைவனுக்குமான தொடர்பு, கிரகங்களின் நிறங்களுக்கேற்ப அலங்காரம்)
- கும்பாபிசேகம் - ஆவர்தனம், அனாவர்த்தனம், புனருத்தாரணம், அந்தரிதம்
- மகோற்சவம் - ஐந்தொழில் தத்துவம்
- யாகம் செய்தல்
- கலை வெளிப்பாடு - உருவங்கள் (புராண இதிகாச கதைகள்)
- ஆலய வழிபாட்டில் பஞ்சாங்கத்தின் முக்கியத்துவம்
- மரவழிபாடு, மிருக வழிபாடு
- சைவ உணவு
- ஆலயத்துக்கும் சமூகத்துக்குமான தொடர்பு
- கோயில் பிரகாரங்களை வலமிருந்து இடமாகச் சுற்றி வருதல் இந்துக்களின் புவியியல் அறிவையும் (புவிச் சுழற்சி) பிரகாரத்தை 3,5,7,9 முறைகள் வலம் வரவேண்டும் என்னும் நியமம் உடல், உள ஆரோக்கியத்திற்கும் வழிவகுக்கின்றது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
- மனித உடலுடன் ஆலயத்தின் அமைப்பு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.
- கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் விஞ்ஞான ரீதியான உண்மையை ஆராய்ந்து கூறுவார்.
- நவக்கிரக வழிபாடும் இறைவனுக்குமான தொடர்பு பற்றிய அறிவார்
- நேர்த்திக்கடன் வழிபாடு பற்றிய விஞ்ஞானக் கருத்துக்களை விளக்குவார்
- கும்பாபிசேகம், மற்றும் மகோற்சவக் கிரியைகளின் தத்துவத்தை விளக்குவார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- ஆலய அமைப்புப் பற்றிய பல்வேறு படங்கள்
- வழிபாடு பற்றிய விஞ்ஞான விளங்கப் படங்கள்
  கும்பாபிசேகம் மற்றும் வழிபாடு தொடர்பான படங்கள்
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்
- செயற்பாட்டுப் பத்திரம்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1, 3**

(1) ஆலயத்துக்கும் மனித உடலுக்குமான தொடர்பு பற்றி விளக்கிக் கூறுங்கள்.

(2) கோபுரதரிசனம் பற்றியும் அதன் தத்துவம் பற்றியும் கருத்துரைக்குக.

(3) ஆலய வழிபாட்டில் கலை வெளிப்பாடு பற்றிய சிறப்புக்களை எழுதுக.

(4) ஆலயத்தில் நேர்த்திக்கடன் வழிபாடு பற்றி விளக்கிக் கூறுங்கள்

**குழு - 2, 4**

(1) கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனும் பழமொழிக்கான கருத்தை விளக்கிக கூறுங்கள்?

(2) நவக்கிரக வழிபாடு பற்றிய கருத்துக்களை முன்வையுங்கள்

(3) நமஸ்கார முறைகளும் விஞ்ஞானமும் பற்றிய தேடல்களை முன்வையுங்கள்.

(4) கும்பாபிசேகமும், மகோற்சவமும் பற்றிய விளக்கத்தை தெளிவுபடுத்துங்கள்

### பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  - (1) ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கிணங்க வழிபாட்டின் உண்மையை உணரச் செய்து பிள்ளைகள் நாள்தோறும் ஆலய வழிபாட்டில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.
  - (2) ஆலய வழிபாட்டின் போது ஆலய விதிமுறைகளை மீறாவண்ணம் தான தர்மங்களில் ஈடுபடுங்கள்.

இணைப்பு -1

## கோயில்

கோவிலும் உடலும் ஒன்று. இரண்டுமே ஆத்ம சக்தியின் உறைவிடம். ஆலயம் என்றால் என்ன? ஆலய அமைப்பு நமது அகத்தைப் பிரதிபலிக்க வைக்கும் கண்ணாடியைப் போன்றது. நமக்குள்ளே பார்க்கும் திறன் நமக்கில்லாத படியால், ஆலய அமைப்பின் மூலமாக நமது உள்ளமைப்புக்களை நாம் அறியும் வகையில் சான்றோர்கள் அமைத்துள்ளார்கள். பிரசாத வடிவில் மருந்துகளையும் பிரார்த்தனை வடிவில் உடற்பயிற்சிகளையும் வகுத்துத் தந்துள்ளார்கள். உடற்பயிற்சியினால் உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் அதனூடாக ஆன்மாவையும் ஆரோக்கியம் செய்யலாம். நமது உடலையும் மனதையும் சுத்தம் செய்யும் மருத்துவமனை போல ஆலயம் அமைகின்றது. வரையறுக்கப்பட்ட முறைகளைப் பின்பற்றி ஆலயத்தில் இறைவழிபாடு செய்தால் நாம் ஆரோக்கியமாக வாழலாம்.

ஆலயம் என்பது மிகவும் சக்தி வாய்ந்த மருத்துவமனை. ஆலயம் உடல் நிலையையும் மன நிலையையும் சமப்படுத்தி அழுக்குகளை வெளியேற்றி சக்தி கொடுக்கும் இடமாக தலமாக இருக்கின்றது. நாம் வீட்டில் இருந்தபடியே வழிபாடு செய்வதனால் பலன் பெருமளவில் கிடைக்கும் எனக்கூற முடியாது. ஏனெனில் நாம் ஒருவர் என்பதனால் நமக்குள் இருக்கும் சக்தி சிறியதே. ஆனால் ஆலயத்தில் கூட்டாக மக்கள் பக்தர்களாக சேரும் போது ஆலயத்தில் உள்ள பல சக்திக் கலங்களின் மூலமாக சக்தியை உள்வாங்கி அதை வெளியிடும் பொழுது அந்த சக்தி அலை நம்மை சமன் செய்கின்றது. எனவே தான் ''ஆலயம் தொழுவது சாலச் சிறந்தது'' எனச் சொல்லப்படுகின்றது.

ஆலயத்தின் கோபுரம் மிகவும் முக்கியமான ஒரு அம்சமாகும். கோபுரத்தில் ஏழு நிலைகள் உள்ளன. இந்த ஏழு நிலைகளும் நம் உடலில் உள்ள ஏழு சக்திச்சக்கரங்களைக் குறிக்கும். கோபுரத்தின் உச்சியில் தங்கத்தினால் அல்லது வெள்ளியினால் அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக் கலசங்களிலும் அதன் அடியிலும் வைக்கப்படும் தானியங்களும் உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை (earth) கலசங்களுக்கு கொடுக்கின்றன.

இத் தானியங்களும் உலோகங்களும் 12 வருடங்களுக்கு ஒரு முறை மாற்றுவது வழக்கம்.

ஏனெனில் இவை பன்னிரண்டு வருடங்களில் தமது சக்தியை இழந்து விடுகின்றன. அதனால் தான் 12 வருடங்களுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்து இவை புதுப்பிக்கப் படுகின்றன. எனவே தான் இக்கலசங்கள் மின்னலை தாங்கும் சக்தியுடையவை. ஆதி காலத்தில் வீடுகளில் மின்னலை எதிர்க்கும் சாதனங்கள் இல்லாத காரணத்தால் (earth) மழை காலங்களில் இடி மின்னலில் இருந்து பாதுகாக்கக் கோயில்களில் தங்குவது வழக்கம். இதன் காரணமாகத்தான் போலும் ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என நம் முன்னோர்கள் கூறினார்கள்.

கோயிலின் பிரதான வாசலாகிய கோபுர வாசலானது ஊடுருவிக்கதிர் ஆய்வுக் கருவி போல் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதனால் நாம் கோபுர வாயிலினூடாக செல்லும் போது கண்ணுக்குப் புலப்படாத ஊடுருவிக் கதிரானது காந்த அலைகளாக நம் உடல் மீது செல்கின்றது. இதனால் தான் நாம் கோயிலுக்குள் நுழையுமுன்பாக கை கால்களை சுத்தம் செய்வது வழக்கம் போலும்' குதிக்கால்களை மேலிருந்து கழுவுவதால் ஏற்படும் விஞ்ஞான பூர்வமான காரணம் என்னவென்றால் குதிக்காலில் தான் நமது மூளையில் அமைந்துள்ள ''பிட்யூட்டரி'' சுரப்பியுடன் தொடர்புள்ள முக்கிய நரம்பு அமைந்துள்ளது.

நாம் உட்பிரகாரத்தில் செல்லும் பொழுது வேகத்தைக் குறைத்து நிதானமாக நடுவில் வைக்கப்பட்டிருக்கும் வாயில் படிகளை ஈரக்கால்களுடன் குனிந்து தொட்டுச் செல்லுதல் வேண்டும். அப்படிக் குனிந்து தொடும் பொழுது ஏற்கனவே கோபுரக் கலசங்களின் ஊடாகச் சேர்க்கப்பட்ட மின்கதிர்களின் முழுப்பயனையும் அடைய முடியும். நாம் அண்டசராசரத்துடன் இணைய வேண்டும் என்பதற்காகவே விஞ்ஞான பூர்வமாகவும் இந்து சமய வழிபாடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதலில் நமது தலையின் அமைப்பைப் பார்ப்போம். தலைப்பகுதியானது வலது மூளை, இடது மூளை என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நமது வலது மூளைப்பகுதியே பிள்ளையாருக்கு உரிய இடமாகும். பிள்ளையார் சிவன் கோயில்களில் வலது பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளார். நாம் பிறந்தவுடன் இயல்பாக இயங்கும் பகுதி மூளையின் வலது பகுதியாகும். இயல்பாக நடக்கும் எமது நடவடிக்கைகள் எல்லாவற்றிக்கும் இதுவே காரணம். உதாரணமாக பிறந்த குழந்தை பசி வந்தவுடன் அழுகின்றது, அதன் கண்ணுக்குப்பட்டவை எல்லாவற்றையும் வாயில் வைக்கும், இப்படியான செயல்களை இயல்பாக வெளிப்படுத்துகின்றது. இது கற்று வரும் அறிவு இல்லை. இதைத்தான் உள்ளுணர்வு என்கின்றோம்.

இது மனதை எந்தவித சலனமும் இன்றி அப்பழுக்கற்ற ஒரு தூய நிலை. பிள்ளையாரை முதலாவதாக வணங்குவதற்கும் இதுவே காரணமாகும். பிள்ளையாரே புத்திக்கு அதிபதியுமாவார். அவரை வழிபடும் பொழுது எதிர்மாறான மூளைப்பகுதிகளில் குட்டிக் தோப்புக்கரணம் போடுகின்றோம். இப்படிச் செய்வதின் காரணம் என்னவென்றால், நமது வலதுமூளைப்பகுதி நமது இடதுபக்க உடல் அங்கங்களை இயக்கவும், இடது மூளைப்பகுதியானது வலது பக்க உடல் அங்கங்களை இயக்கவும் கூடிய விதமாகச் செயல்படுகின்றது.

நாம் கைகளை எதிரான பக்கங்களில் வைத்து காதுக்குப்பக்கமாக குட்டும் பொழுது நமது மூளைக்குச்செல்லும் நரம்புகள் விளிப்படைகின்றன. அத்தோடு தோப்புக்கரணம் போடும் பொழுது எமது மூளைக்குச்செல்லும் நரம்புகள் அத்தனையும் நன்றாகச்செயல்பட ஏதுவாக இருக்கின்றது. அமெரிக்காவில் நடத்திய ஆராய்ச்சி இதை நிரூபித்து உள்ளது. ஆராய்ச்சியின்படி இந்தவிதமான உடற்பயிற்சியானது நரம்பு சம்பந்தமான வியாதிகளைக் குணப்படுத்துவதற்க்காகப் பயன் படுத்துகிறார்கள். உதாரணமாக “ADHD, Autism” போன்ற வற்றை மட்டுமில்லாது நினைவாற்றலைக் கூட்டுவதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அங்கே பள்ளிக்கூடங்களில் இதை மாணவர்களுக்குப் பயிற்சி முறைகளில் ஒன்றாகக் கொடுக்கின்றார்கள். ( YouTube இல் Super Brain Yoga / smart brain). வலது மூளையில் பதிவாகும் தரவுகள் நீண்ட கால நினைவாற்றலுக்குரியவை. காலம் கடந்த பின்பும் அவற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வரலாம். இதே நினைவாற்றல் யானைகளுக்கும் உண்டு.

## இணைப்பு -2

## ஆலயங்களில் புதைந்துள்ள அறிவியல் உண்மைகள்

**இந்தியாவில் லட்சக்கணக்கான கோவில்கள் உண்டு. ஆனால் அவையனைத்தும் வேத வழியில் கட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.**

**கோவில்கள் எங்கு பூமியின் காந்த அலை அடர்த்தியாக ஓடுகிறதோ அங்கு கட்டப்படவேண்டும். அது கிராமமாகவோ, நகரமாகவோ, மலை மீதோ எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். பூமியின் வட தென் துருவ காந்த அலை எங்கு அதிகமாக உள்ளதோ அங்குகட்டப்பட வேண்டும்.**

**முக்கியமான கடவுள் இருக்குமிடமான கர்ப்பகிரகம் (அ) மூலஸ்தானத்தில் இந்த அலைஅதிகமாக இருக்கும். சரியாகச் சொல்வதெனில் இந்த மூலஸ்தானத்தில் சிலை இடம்பெற்ற பிறகே கோவிலின் அமைப்பு கட்டப்படும். இந்த இடத்தில் தாமிரத் தகடுகள் வேதவரிகளைச் செதுக்கிப் புதைக்கப்படும்.**

**இவ்வாறு ஏன் செய்கிறார்கள் என்றால் காந்த அலைகளை அதைச் சுற்றிலும் பரப்பவே. எனவே ஒருவர் தொடர்ந்து கோவிலுக்கு சென்று சிலையை வலப்புறமாக சுற்றி வந்தால் அவர் பூமியின் காந்த ஆற்றலைப் பெறுவார். அவரின் உடல் அந்த ஆற்றலை கிரகித்துக்கொள்ளும். இவ்வாற்றல் அவர் நலமுடன் வாழ வழி வகுக்கும். இது அறிவியல் பூர்வமான உண்மை.**

**மேலும் கர்ப்பக்கிரகம் மூன்று திசையிலும் மூடப்பட்டுள்ளதால் ஆற்றலை அதிகப்படுத்தும். மூலஸ்தானத்திலிருக்கும் விளக்கும் வெப்ப ஆற்றலை வெளிப்படுத்தும். மணியோசை பக்தர்களின் மனதினை அலைபாய விடாமல் ஒன்றியிருக்கச் செய்யும். இது மன அழுத்தத்தினைக் குறைக்கும்.**

**மேலும் மணம் வீசும் மலர்கள் ஒருவிதமான நல்ல ஆராவை (Aura– ஒருவரைச் சுற்றியுள்ள மனித காந்த சக்தி) வெளிப்படுத்தும். கடவுளின் சிலைகளை கற்பூரம், துளசிமற்றும் பிற பொருள்களைச் சேர்த்து கழுவி அந்த நீரை தீர்த்தமாகத்தருவார்கள். அதில்மிக அதிகமான காந்த சக்தியுள்ளது.**

**அத்தீர்த்தத்தினை தாமிரப் பாத்திரத்திலிட்டுத்தருவார்கள். இது பற்சொத்தை மற்றும் சளி, இருமல் மற்றும் வாய் துர்நாற்றத்தினைப்போக்கவல்லது. இதன் மூலம் நமது முன்னோர்கள் பல நோய்களைக் குணப்படுத்தியுள்ளார்கள்**

**மேலும் தீபாரதனை காட்டும் போது மிக அதிகமான சக்தி வெளிப்படும் எனவேதான் ஆண்களை சட்டையில்லாமலும் பெண்களை அதிக அணிகலன்களோடும் கோவிலுக்குவரச் சொன்னார்கள்**

## இணைப்பு -3

## கோபுர தரிசனம்

ஞானிகள், முனிவர்கள், சித்தர்கள் சிறந்த கோயில்களையும், அதில் தெய்வ திருவுருவச் சிலைகளையும் ஏற்படுத்தும் முறைகளை வகுத்துக் கொடுத்து கோயில் திசை நான்கிலும் விண்ணை முட்டும் பெரிய கோபுரங்களை நிர்மாணித்து அவற்றின் சக்தியால் உயிர்கள் நல்ல முறையில் வாழும் அமைப்பை ஏற்படுத்தி கொடுத்தார்கள்.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்றே என்ற முன்னோர்களின் பொன் மொழிகள் இதன் பயன் கருதிக் கூறியவை.

ஆகம விதிப்படி கோயில் நிர்மாணித்து, அபிஷேகிக்கப்பட்டு, காலம் தவறாது கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வழிபாடு நடந்து கொண்டிருக்கிற கோயில்களில் உள்ள கோபுரங்களின் மேல் தங்கத்தாலும், செம்பினாலும் செய்யப்பட்ட கலசங்கள் தனது கூரிய முனை வழியாக ஆகாயத்தில் உள்ள உயிர் சக்தி என்று அழைக்கப்படும் பிராண சக்தியை கிரகித்து வெளிவிடுகிறது. அந்த சக்தியை நம் உடல் பெறுவதால் புத்துணர்ச்சி, புது உணர்வு, உள்ளத் தூய்மை, ஆன்மீக ஈர்ப்பு, நோயின்மை, நோய் எதிர்ப்பு சக்தி அடைகிறோம்.

இதனால் தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று முன்னோர்கள் கூறினர்.

கர்ப்பக்கிரக கோபுரத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள கலசங்கள் அதே போல் பிராண சக்தியை கிரகித்து கலசத்தின் நேர் கீழே உள்ள இறை பீடத்திற்கு இடையறாது அனுப்பி கொண்டிருக்கிறது. இந்த சக்தி பீடத்தின் அடியில் உள்ள தங்கத்தாலும், வெள்ளியினாலும் செய்யப்பட்ட மந்திர சக்கரங்கள், யந்திரங்கள் தன்பால் இழுத்து தான் அமையப் பெற்றிருக்கும் தன்மைக்கு ஏற்ப பீடத்தின் மேல் தன் சக்தியை வெளிப்படுத்துகிறது.

சில குறியீடுகளும், யந்திர தகடுகளும், இந்த சக்தியை முழுவதும் ஈர்த்து விடுகின்றன.

இந்த பிராண சக்தியின் அளவை மேலை நாட்டு விஞ்ஞானி போவிஸ் கண்டு பிடித்துள்ளார். இதிலிருந்து வெளிப்படும் சக்தியை (14 ,000 போவிஸ்) நம் உடலில் உள்ள உயிர் அணுக்கள் தாங்க இயலாது. எனவே தான் பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலை அந்த சக்தியை பிரித்து ஒன்பது முனைகள் வழியாக வெளியேறச் செய்கிறது.

அந்த சக்தி கர்ப்பக்கிரத்தின் வாயில் வழியாக வெளியே வருகிறது. அங்கு இறைவனை வணங்கி கொண்டுள்ள நம் மீது படுகிறது. அப்போது தீப ஆராதனை காட்டப்படும்போது , அந்த சக்தி தூண்டப்பட்டு - கைகளை இணைத்து , மேலே உயர்த்தி வணங்கும்போது - கை விரல்கள் வழியே அந்த சக்தி நம் உடம்புக்குள் ஊடுருவுகிறது.

இதனால் ஆன்மீக உணர்வு, சக்தி நம்மீது பரவி மனதில் உள்ள கவலைகள், குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள், உடல் நோய்கள் அனைத்தையும் போக்கி ஆனந்தத்தை கொடுக்கிறது. கர்ப்பக்கிரத்தில் கிழக்கு அல்லது வடக்கு திசைகளில் நீர் செல்லும் பொருட்டு ஓர் துவாரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த துவாரத்தின் வழியே செல்கின்ற நீரிலும் கலந்து பிராண சக்தி வெளிப்படுகிறது.

அங்கு அமைக்கப்பட்டுள்ள சதுர வடிவ தொட்டியில் விழும் நீரை கோயிலை வலம் வரும் நாம் அந்த இடத்தில் வந்தவுடன் எடுத்து கண்ணிலும் சிரசிலும் ஒற்றிக் கொள்கிறோம். அந்த சில நிமிடங்களில் நம் மீதும் பிராணசக்தி பரவுகிறது. இந்த பிராணசக்தி வெளிப்பட்டு கொண்டு இருப்பதால் தான் சிலையின் குறுக்கே செல்லக்கூடாது எனக் கூறுகின்றார்கள்.

சிலையின் பக்கவாட்டில் தான் செல்ல வேண்டும். சிலையை விட்டு விலகி நிற்பதுடன், அபிஷேகம் செய்யும் போது கைகள் சிலைக்கு மேல் செல்லக்கூடாது. ஒரு காலை வெளியிலும், மறு காலை கர்ப்பக்கிரகத்தின் வாயிலிலும் வைக்ககூடாது. கர்ப்பக்கிரகத்திற்குள் இரும்பாலான எந்த பொருளையும் பயன்படுத்தக் கூடாது என முன்னோர்கள் விஞ்ஞானத்தின் அடிப்படையில் தான் கூறியுள்ளனர்.

**தேர்ச்சி 5.0 : சைவசமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 :** சமய குரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறைகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு :** "திருஞானசம்பந்த சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்று அற்புதச் செயல்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்க்கையில் ஒழுகுவோம்."

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**

- திருஞானசம்பந்தர் சைவத்தை வளர்ப்பதற்கும், மக்களிடம் பக்தியை வளர்ப்பதற்கும் முன்னின்று உழைத்தார் என்பதை அறிவார்.
- அவருடைய சமயப்பணிகள் மூலமாக சமயத்தை நிலைநிறுத்தினார் எனக் கூறுவார்.
- அவரது உண்மையான இறைபக்தியும் தன்னலமற்ற இறை தொண்டும், சைவநெறி தழைக்க உதவியது என்பதை எழுதுவார்.
- சைவசமயம் உண்மையானது எனப் பல வாதங்கள் மூலம் நிறுவிக் காட்டியவர் என்பதை எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் திருஞானசம்பந்தரைப் பற்றி கேட்டு அறியுங்கள்.
- அவர் செய்த அற்புதங்கள், அவர் பாடிய தேவாரங்கள், இறைவன் அவருக்கு அருள் புரிந்த சந்தர்ப்பங்கள் என்பவற்றை எழுமாறாக மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுக்கான தரஉள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் செயற்படுவதை அவதானியுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்குங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தமது குழுச் செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

| | |
|---|---|
| - பெற்றோர் | - சிவபாதவிருதையர், பகவதி அம்மையார் |
| - பிறந்த இடம் | - சீர்காழி |
| - இளமைப் பெயர் | - சம்பந்தர் |
| - முதலில் பாடிய தேவாரம் | - "தோடுடைய செவியன்" |
| - வேறு பெயர்கள் | - ஆளுடைய பிள்ளை, ஞானசம்பந்தர், புகலியர்கோன் |
| - பக்தி உறவு முறை | - தந்தை மகன் உறவு (சற்புத்திர மார்க்கம்) |
| - நின்ற நெறி | - கிரியை நெறி |
| - அற்புதங்கள் | - மூன்று வயதில் தேவாரம் பாடியமை, பாலை நிலத்தை நெய்தல் நிலமாக மாற்றியமை, |

முயலயன் நோயால் பீடிக்கப்பட்ட பெண்ணின் நோயை தீர்த்தமை போன்றவைகளை கூறலாம்.

- முக்தி அடைந்த தினம் - வைகாசி மூலம்
- அடைந்த முத்தி - சாமீபம் (16 ஆண்டுகள் வாழ்ந்தவர்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- திருஞானசம்பந்தரின் சமயப் பணியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.
- அவருடைய வரலாற்றை முழுமையாகத் தெரிந்து கொள்வார்.
- அவருடைய அற்புதங்களைப் பட்டியல்படுத்துவார்.
- திருஞானசம்பந்தரின் சமய, சமூகப் பணிகளை அறிந்து மதிப்பளிப்பார்.
- திருஞானசம்பந்தரின் பக்தியை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- நாயனாரின் திருவுருவப்படம்
- அற்புதங்கள் எழுதப்பட்ட அட்டவணை
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 5.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாற்றை நாடகமாக நடித்துக் காட்டுக.

**குழு - 2**

திருஞானசம்பந்தரின் மறுபெயர்களையும், அவற்றிற்கான விளக்கங்களையும் எழுதிக் காட்சிப்படுத்துக.

**குழு - 3**

திருஞானசம்பந்தரின் அற்புதங்களையும், அவை நிகழ்ந்தபோது பாடப்பட்ட பதிகங்களையும் அட்டவணைப்படுத்துக.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  - (1) திருஞானசம்பந்தர் என்னும் திரைப்படத்தை காட்சிப்படுத்துங்கள்.
  - (2) திருஞானசம்பந்தர் வாழ்ந்த கால சூழ்நிலை பற்றி பிள்ளைகளுடன் கலந்துரை யாடுங்கள்.

**தேர்ச்சி 5.0 : சைவசமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 :** சமய குரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறைகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு :** "திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்று அற்புதச் செயல்களைமுன்மாதிரியாகக் கொண்டு வாழ்க்கையில் ஒழுகுவோம்."

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- திருநாவுக்கரசர் இளம் வயது தொடக்கம் பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் சைவசமயத்தைப் பின்பற்றி வளர்த்து வந்தார் என்பதைக் கூறுவார்.
- தலயாத்திரையும், கோயில் திருப்பணிகளையும் இடையறாது செய்து நாயனாராக இவர் விளங்குகிறார் என்பதை விளக்குவார்.
- இவரது உண்மைப் பக்தியும், சைவப்பற்றும், துறவு வாழ்வும், சைவசமயம் சிறந்து விளங்க வழிவகுத்தது என்பதை அறிந்து போற்றுவார்.
- நாவுக்கரசரின் அற்புதங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் திருநாவுக்கரசர் பற்றி கேட்டு அறியுங்கள்.
- அவர் செய்த அற்புதங்கள், அவர் பாடிய தேவாரங்கள், இறைவன் அவருக்கு அருள் புரிந்த சந்தர்ப்பங்கள் என்பவற்றை எழுமாறாக மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுக்கான தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்குங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தமது குழுச் செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

| | |
|---|---|
| - பெற்றோர் | - புகழனார், மாதினியார் |
| - பிறந்த இடம் | - திருவாமூர் |
| - இளமைப் பெயர் | - மருணீக்கியார் |
| - முதலில் பாடிய தேவாரம் | - "கூற்றாயினவாறு" |
| - வேறு பெயர்கள் | - தருமசேனர், ஆளுடைய அரசு, உழவாரப் படையாளி |
| - பக்தி உறவு முறை | - தாச மார்க்கம் |
| - நின்ற நெறி | - சரியை நெறி |
| - அடைந்த முக்தி | - சாலோகம் |
| - முக்தி அடைந்த தினம் | - சித்திரைச் சதயம் |

- அற்புதங்கள்
  - சமணர்களின் கொடுமைகளிலிருந்து மீண்டமை.
  - நீற்றறையில் அடைத்தமை.
  - நஞ்சு கலந்து பாற்சோற்றை உண்ணக் கொடுத்தமை.
  - மதங் கொண்ட யானையை ஏவியமை.
  - சிவபெருமானிடம் படிக்காசு பெற்றமை.
  - திருமறைக்காட்டில் சிவாலய திருக்கதவு திறக்க பாடியமை.

  போன்றவற்றைக் கூறலாம்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- திருநாவுக்கரசரின் பெருமைகளை எடுத்துக் கூறுவார்.
- அவருடைய வரலாற்றை முழுமையாகத் தெரிந்து கொள்வார்.
- இறையருளால் அவர் உயிர்பிழைத்த சந்தர்ப்பங்களைப் பட்டியல்படுத்துவார்.
- அப்பரின் பக்தி வைராக்கியத்தின் உயர்வினை விளக்குவார்.
- அவருடைய சமய, சமூக பணிகளை அறிந்து மதிப்பளிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- நாயனாரின் திருவுருவப்படம்
- நாவுக்கரசரின் அற்புதங்கள் எழுதப்பட்ட அட்டவணை
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 5.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து சைவசமயத்திற்கு மாறிய நிகழ்வினை உமது குழுவினருடன் நாடகமாக நடித்துக் காட்டுக.

**குழு - 2**

திருநாவுக்கரசருக்கு சமணர்கள் செய்த கொடுமைகளில் இரண்டினைச் சித்திரங்களாக வரைந்து காட்டுக.

**குழு - 3**

திருநாவுக்கரசரின் அற்புதங்களையும், அவை நிகழ்ந்தபோது பாடப்பட்ட பதிகங்களையும் அட்டவணைப்படுத்துக.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  - (1) திருநாவுக்கரசர் என்னும் திரைப்படத்தை காட்சிப்படுத்துங்கள்.
  - (2) பிள்ளையுடன் அவரது வரலாறு, அற்புதங்கள் பற்றி கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 5.0 :** **சைவசமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 :** சமய குரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறைகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு :** ‘‘சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கை வரலாற்றில் அவர் செய்த அற்புதங்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்க்கையில் ஒழுகுவோம்.’’

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- சுந்தரமூர்த்தி நாயனார் திருமணக் கோலத்தில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார் என்பதைக் கூறுவார்.
- இவர் சைவசமயத்தையும், பக்தியையும் மக்களிடம் ஏற்படுத்த முன்னின்று உழைத்தார் என்பதை விளக்குவார்.
- இவரின் சமய சமூகப் பணிகளைத் தொகுத்துக் கூறுவார்.
- அற்புதங்கள், இறைபக்தி, பிரச்சாரம் மூலம் சைவநெறியை பாதுகாத்தமையை அறிந்து போற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் சுந்தரமூர்த்தி நாயனார் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- அவர் செய்த அற்புதங்கள், அவர் பாடிய தேவாரங்கள், இறைவன் அவருக்கு அருள் புரிந்த சந்தர்ப்பங்கள் என்பவற்றை எழுமாறாக மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுக்கான தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்குங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தமது குழுச் செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

| | |
|---|---|
| - பெற்றோர் | - சடையனார், இசைஞானியர் |
| - பிறந்த இடம் | - திருநாவலூர் |
| - இளமைப் பெயர் | - நம்பியாரூரர் |
| - முதலில் பாடிய தேவாரம் | - ‘‘பித்தாப்பிறை’’ |
| - வேறு பெயர்கள் | - வன்றொண்டர், தம்பிரான் தோழர், சிங்கடியப்பன், வனப்பகையப்பன் |
| - பக்தி உறவு முறை | - சக மார்க்கம் |

- நின்ற நெறி - யோக நெறி
- முக்தி அடைந்த தினம் - ஆடிச்சோதி நட்சத்திரம்
- அடைந்த முத்தி - சாரூபம்
- வாழ்ந்த காலம் - 18 ஆண்டுகள்

அற்புதங்கள்
- செங்கற்களை பொன் கற்களாகப் பெற்றுக் கொண்டமை
- சிவன் கொடுத்த பன்னீராயிரம் பொன்னை ஆற்றிலே போட்டு குளத்திலே எடுத்தது.
- காவிரியாறு பிரிந்து வழிவிடச் செய்தமை
- முதலை விழுங்கிய பிராமணச் சிறுவனை உயிருடன் மீட்டமை.
- வெள்ளையானையில் ஏறி திருக்கைலாசத்திற்குச் சென்றமை.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- சுந்தரரின் அற்புதங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.
- சுந்தரரின் வரலாற்றை விளக்கிக் கூறுவார்.
- அவர் இறைவனுடன் நட்புரிமை பூண்டு பக்தி பாராட்டி வாழ்ந்தார் என்பதைக் கூறுவார்.
- அவருடைய அற்புதங்கள், பதிகங்கள் என்பவற்றின் சிறப்பினை அறிந்து மதிப்பளிப்பார்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சுந்தரரின் திருவுருவப்படம்
- சுந்தரர் செய்த அற்புதங்களின் அட்டவணை
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

சுந்தரர் வன்றொண்டரான வரலாற்றை நாடகப் பிரதியாக்கம் செய்க.

**குழு - 2**

"எற்றான் மறக்கேன்....." என்ற பதிகம் பாடப்பட்ட வரலாற்றினை நாடகமாக நடித்துக் காட்டுக.

**குழு - 3**

சுந்தரர் திருக்கைலையை அடைந்த வரலாற்றை நாடகமாக நடித்துக் காட்டுக.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  - (1) சுந்தரர் பற்றிய கதாபிரசங்கங்கள் / பேச்சுகள் அடங்கிய இறுவட்டுகளை தேடிப் பெற்று காட்சிப்படுத்துங்கள்.
  - (2) சுந்தரரின் வரலாற்றுப் பெருமைகளைக் கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 5.0 :** **சைவசமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 :** சமய குரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறைகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு :** “மாணிக்கவாசகரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து அவரின் அற்புதச் செயல்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்க்கையில் ஒழுகுவோம்.”

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப்பட்ட விதத்தினைக் கூறுவார்.
- அவர் தனது பதவியைத் துறந்து சைவத்திற்கும், மக்களுக்கும் தொண்டாற்றினார் என்பதை விளக்குவார்.
- நாயன்மார்கள் தம் சமயப் பணிகள் மூலம் சமயத்தை நிலை நிறுத்தினார் என்பதைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பார்.
- இறைபக்தி, இறைதொண்டு மூலம் சைவசமயம் இவர்களால் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டது என்பதை அறிந்து போற்றுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- மாணவர்களிடம் மாணிக்கவாசகர் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- உண்மையடியவர்களான நாயன்மார்களில் ஒருவரான மாணிக்கவாசகரின் வாழ்வில் இறைவன் அருள் புரிந்த சந்தர்ப்பங்களைக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுக்கான தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்குங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தமது குழுச் செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

| | |
|---|---|
| - பெற்றோர் | - சம்புபாதாசிரியர், சிவஞானவதியார் |
| - பிறந்த இடம் | - திருவாரூர் |
| - இளமைப் பெயர் | - திருவாதவூரர் |
| - வேறு பெயர்கள் | - கோவை வேந்தர், ஆளுடைய அடிகள், திருவாதவூரடிகள், தென்னவன் பிரமராயன் |
| - பக்தி உறவு முறை | - சன் மார்க்கம் |
| - நின்ற நெறி | - ஞான நெறி |
| - முக்தி அடைந்த தினம் | - ஆனி மகம் |
| - அடைந்த முத்தி | - சாயுச்சியம் |
| - வாழ்ந்த காலம் | - 32 ஆண்டுகள் |

அற்புதங்கள் - சிவபெருமானே நரியை பரியாக்கிக் கொண்டு வரும்படியும் மண்சுமந்து அடிபடும்படியும் நடந்து அற்புதங்கள் செய்தமை.
- பிறவிதொட்டு ஊமையாயிருந்த பெண்ணைப் பேச வைத்தமை
- தம்முடைய திருவாசகத்தையும்,திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளி வந்து எழுதும் பேறு பெற்றுக் கொண்டது.
- எல்லோரும் காணத்தக்கதாக திருச்சபையின் உள்ளே புகுந்து சிவத்தோடு கலந்தமை.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- மாணிக்கவாசகர் ஆட்கொள்ளப்பட்ட விதத்தினை எடுத்துக் கூறுவார்.
- அவர் சைவத்திற்கு தொண்டாற்றிய விதத்தினை விளக்குவார்.
- மாணிக்கவாசகரின் வரலாற்று முக்கியத்துவத்தை தொகுத்து எழுதுவார்.
- அவருடைய அற்புதங்கள், பதிகங்கள் என்பவற்றின் சிறப்பினை அறிந்து மதிப்பளிப்பார்.
- மாணிகக்வாசகரின் ஒருசில தொண்டுகளை சமுதாயத்தில் முன்னெடுத்துச் செல்வார்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- மாணிக்கவாசகரின் உருவப்படம்
- அற்புதங்கள் எழுதப்பட்ட அட்டவணை
- டிமை கடதாசி, நிறப்பேனை
- செயற்பாட்டுப் பத்திரம்

## இணைப்பு: 5.1.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

மாணிக்கவாசகரின் அற்புதங்களில் ஒன்றினை சித்திரமாக வரைந்து காட்சிப்படுத்துக.

**குழு - 2**

மாணிக்கவாசகருக்காக இறைவன் நரிகளை பரிகளாக்கிய வரலாற்றை விளக்கும் பேச்சு ஒன்றினை நிகழ்த்திக் காட்டுக.

**குழு - 3**

இறைவன் மாணிக்கவாசகருக்கு தீட்சை வழங்கிய நிகழ்வை விளக்கிக் கூறுக.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  (1) மாணிக்கவாசகர் குருபூசை தினங்களில் நடைபெறும் பிரசங்கங்கள் என்பவற்றை பிள்ளைகள் கேட்க வழிப்படுத்துங்கள்.
  (2) அவற்றைச் செவிமடுத்து நீங்கள் அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 5.0 :** **சைவசமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவர்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 :** ஈழத்தில் சமயம் வளர்த்த பெரியார்களையும், அவர்களது பணிகளையும் அறிந்து அவர்களுக்கு மதிப்பளிக்கும் முறையை விளக்குவார்.

**செயற்பாடு :** "சைவப் பெரியார் அ. சிவபாத சுந்தரனார் பணிகளை முன்மாதிரி யாகக் கொண்டு நாமும் சமயப்பணிகளில் ஈடுபடுவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- சைவப்பெரியார் அ. சிவபாத சுந்தரனார் அவர்களின் வாழ்க்கைப் பின்னணியை அறிவார்.
- அவரின் சமயப்பணிகளை அறிந்து போற்றுவார்.
- தம்மாலான சமயப் பணிகளை செய்ய முன்வருவார்.
- சமய சமூகப்பணிகளின் முக்கியத்துவத்தினை ஏனையோருக்கும் எடுத்துரைப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- ஈழத்தில் சைவசமயப் பணிபுரிந்த பெரியவர்கள் பற்றி மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள்.
- அவர்கள் செய்த சமய சமூகப் பணிகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சமய, சமூகப் பணிகள் செய்வதனால் ஏற்படும் நன்மைகள் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களையும், தரஉள்ளீடுகளையும் வழங்குங்கள்.
- செயற்பாட்டுக்கான தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்குங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தமது குழு செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- மாணவர்கள் கூறும் கருத்துக்களையும், பின்வரும் விடயங்களையும் அடிப்படை யாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - ஈழத்தில் சைவசமயப் பணிபுரிந்த பெரியார்களுள் சைவப் பெரியார் அ. சிவபாத சுந்தரனாரும் ஒருவர்.
  - இவரின் பெற்றோர் பெயர் சுப்பிரமணியம், வள்ளியம்மை என்போர் ஆவர்.
  - சிவபாத சுந்தரனார் 17.1.1878 ஆம் ஆண்டு பிறந்தார்.
  - இளமையில் பார்வதிப்பிள்ளை என்ற தனது மாமியாரிடம் கல்வி கற்றார்.
  - புலோலி ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்று பின்னர் இந்தியா சென்று பட்டதாரியானார்.
  - திருகோணமலை சென்யோசப் கல்லூரியில் ஆசிரியராகவும், யாழ்ப்பாண பரமேஸ்வராக் கல்லூரியில் (யாழ்பல்கலைக்கழகம்) தலைமை ஆசிரியராக வும் கடமையாற்றினார்.

- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முகாமையாளராகப் பணிபுரிந்தார்.
- முருகனிடம் தீவிர பக்தி உடையவர். எந்நேரமும் விபூதி பூசப் பெற்ற பரந்த நெற்றியும், அறிவையும் ஒழுக்கத்தினையும் வெளிப்படுத்தும் ஒளி வீசும் கண்களையும் உடையவர்.
- சுத்த சைவ உணவு, காலை மாலை தியானம், வெள்ளிக்கிழமை விரதம், ஒழுங்கான ஆலய வழிபாடு என்பவற்றினை தமது வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்த பெரியார்.
- மதமாற்றத்தினை தீவிரமாகக் கண்டித்தார்.மிருக பலியிடுதலை எதிர்த்தார்.
- சிவஞானபோதம், சைவத்தின் மகத்துவம் என்பவற்றை ஆங்கிலத்தில் மரபு பிசகாமல் விளக்கி எழுதினார்.
- திருவருட்பயனுக்கு இலகு உரை எழுதினார்.
- சைவபோதம் முதற்புத்தகம், சைவபோதம் இரண்டாம் புத்தகம், சுப்பிரமணியப் பெருமானின் திருப்பெருவடிவம், சைவசமயசாரம், சைவக்கிரியை விளக்கம், கந்தபுராண விளக்கம் முதலிய நூல்களை எழுதினார்.
- திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிக்கு உதவியதோடு, அங்கே எழுந்தருளி யுள்ள நடராஜப் பெருமானையும் வடிவமைத்துக் கொடுத்தார்.
- திருக்கேதீஸ்வர திருஞான சம்பந்த மடத்தினை ஆரம்பித்து வைத்தவரும் இவரே.
- சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவராகவும், (1928-1930) கல்வி ஆலோசனைச் சபை, கன்னங்கராவின் சபை, விசாரணைச் சபை என்பவற்றில் அங்கத்தவராக விளங்கினார்.
- ஆறுமுக நாவலர் வழியில் தொண்டு செய்து வாழ்ந்த பெரியார் 14.8.1953 ஆடி அத்த நன்னாளில் இறைவனடி சேர்ந்தார்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் வரலாற்றினை அறிவார்.
- அவரது சமயப்பணிகளை விளக்குவார்.
- அவர் இயற்றிய நூல்களைப் பட்டியற்படுத்துவார்.
- சிவபாத சுந்தரனார் பணிகளை ஏனையோருக்கு எடுத்துரைப்பார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சிவபாத சுந்தரனார் உருவப்படம்
- பணிகள் எழுதப்பட்ட அட்டவணை
- டிமை கடதாசி, நிறப்பேனை
- செயற்பாட்டுப் பத்திரம்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

(பொருத்தமான செயற்பாடுகளை தயாரித்து வழங்குங்கள்)

**குழு - 1**

சைவப்பெரியார் அ. சிவபாத சுந்தரனாரின் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றிப் பேசுக.

**குழு - 2**

சைவப் பெரியாரின் சமயப்பணிகள் பற்றி தொகுத்து கட்டுரை எழுதுக.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- சைவப் பெரியாரின் வாழ்வு சமயப்பணிகளை பிள்ளைகளோடு கலந்துரையாடி, அவர் களுடன் சேர்ந்து சமயப் பணிகளில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 6.0 :** **சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளக்கிக் கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :** சைவசித்தாந்தம் தொடர்பாக அடிப்படை விளக்கம் பெற்று தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை இனம் காண்பார். அவை தொடர்பாக விளக்கம் பெறுவார்.

**செயற்பாடு :** "சைவ சித்தாந்தம் கூறும் பசு பற்றிய தத்துவக் கோட்பாட்டினை அறிந்து ஆன்ம விடுதலைக்கான செயற்பாடுகளில் ஈடுபடுவோம்."

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் பசுவும் ஒன்று என்பதனை அறிவார்.
- பசுவின் மறுபெயர்களைக் கூறுவார்.
- பதிக்கும் பசுவிற்கும் உள்ள தொடர்பினை விளக்குவார்.
- பசு பற்றிய கோட்பாட்டினை அறிந்து ஆன்மீக விடுதலைக்கான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் பற்றி மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள்.
- பசுவின் மறுபெயர்கள் பற்றி வினவுங்கள்.
- பசுவின் இயல்புகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- ஆன்மாவின் பிறவிக்கான காரணம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- ஆன்மா விடுதலைக்கான வழிகள் பற்றி மாணவர்கள் அறிந்தவற்றைக் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களையும், தரஉள்ளீடுகளையும் வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்குங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தமது குழு செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- மாணவர்கள் கூறும் கருத்துக்களையும், பின்வரும் விடயங்களையும் அடிப்படை யாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - பதியினைப் போல் பசு, பாசம் அநாதியானவை.
  - பசு, ஆன்மா, சீவன், உயிர், சதசத்து எனப் பல பெயர்களால் அழைக்கப் படுகின்றது.
  - பசு எண்ணில்லாதவை, நித்தியமானவை, மலங்களினால் பற்றப்பட்டவை, அறிவித்தால் அறியும் தன்மையுடையவை.

    "எண்ணரிதாய் நித்தியமாய் இருள் மலத்திலழுந்தி......"
  - பசு, பதியினை சாரும்போது சத்தாகவும், உலகினைச் சாரும்போது அசத் தாகவும், அதாவது சார்ந்ததன் வண்ணமாக இருப்பதனால் சதசத்து என அழைக்கப்படுகின்றது.
  - மலங்களின் கட்டுப்பாடு அடிப்படையில் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என ஆன்மா மூவகைப்படும்.

    சகலர் - ஆணவம், கன்மம், மாயை உடையவர்கள்.

பிரளயாகலர் - ஆணவம், கன்மம் உடையவர்கள்.
விஞ்ஞானகலர் - ஆணவம் மட்டும் உடையவர்.

- ஆன்மாக்கள் ஆற்றும் வினைகளின் பயனாக பிறந்து, இறந்து அல்லற்படு கின்றன.
- மலநீக்கம் பெறுவதற்கு சைவநாற்பாதங்களின் வழிநின்று இறைவழிபாடு செய்ய வேண்டும்.
- ஆன்மாவின் இறுதி இலட்சியம் முத்தி.
- மலபரிபாகம் அடைந்ததும் ஆன்மா இறைவன் தாளினை அடைந்து முத்தி யின்பம் பெறும்.

(திருவருட்பயன் உயிரவை நிலை அதிகாரம் துணைநூலாகப் பாவிக்கலாம்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- முப்பொருள்களில் பசுவும் ஒன்று என்பதனை அறிவார்.
- பசுவின் இயல்புகளைப் பட்டியல்படுத்துவார்.
- மூவகை ஆன்மாக்களைக் குறிப்பிடுவார்.
- மலநீக்கம் பெறுவதற்கான வழிகளைக் கூறுவார்.
- பசுவின் இயல்புகளை திருவருட்பயன் நூலில் இருந்து ஆதாரம் காட்டுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- டிமை கடதாசி, பேனை
- திருவருட்பயன் நூல்
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 5.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1**

(1) சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாவின் மறுபெயர்கள் மூன்று தருக.
(2) ஆன்மாவின் இயல்புகள் நான்கு தருக.
(3) ஆன்மா ஏன் சதசத்து என அழைக்கப்படுகின்றது?
(4) ஆன்மா முத்தி அடைவதற்கு மேற்கொள்ளும் வழிபாடுகள் யாவை?

**குழு - 2**

திருவருட்பயன் என்ற நூலில் உயிரவை நிலை என்ற அதிகாரத்தினை ஆதாரமாகக் கொண்டு பசுவின் இயல்புகள் பற்றித் தொகுத்து எழுதுக.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)
(2)
(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
  (1) சித்தாந்த நூல்களைப் பெற்று ஆன்மா பற்றிய கருத்துக்களை பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.
  (2) நற்கருமங்களில் நீங்களும் ஈடுபட்டு பிள்ளைகளையும் வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 :** நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவார்.

**தேர்ச்சி மட்டம் 7.1 :** நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் கடைப் பிடிக்கும் முறைகளை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு :** "நாட்டார் வழிபாடுகளையும், வழக்காறுகளையும் அறிவோம். அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்போம்."

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள் :**

- ஆகமம் சாரா வழிபாட்டு முறையை வரைவிலக்கணப்படுத்துவர்.
- இவ்வழிபாட்டிற்குரிய தெய்வங்களைப் பட்டியற்படுத்துவார்.
- இவ்வழிபாடு நிலைத்து நிற்பதற்கும் முக்கியத்துவம் பெறுவதற்கு மான காரணங்களை விளக்குவார்.
- மதுரை வீரன் வழிபாடு இடம்பெறும் இடங்களையும், வழிபாட்டு முறைகளையும் குறிப்பிடுவார்.
- குமாரத்தன் வழிபாடு இடம்பெறும் இடங்களையும், வழிபாட்டு முறைகளையும் கூறுவார்.
- தாமும் அவ்வழிபாடுகளில் ஈடுபடுவார். கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**

- மாணவர்களிடம் நாட்டார் வழிபாடு பற்றி கேட்டு அறியுங்கள்.
- கோயில்களில் அல்லது அவர்கள் வாழும் பிரதேசங்களில் வழிபடப்படும் தெய்வங்கள் எவையெனக் கேட்டறியுங்கள்.
- தெய்வங்களின் உருவப்படங்கள்
- நாட்டார் தெய்வ வழிபாடு பற்றிய இறுவட்டுகள் ஏதேனும் இருப்பின் காட்சிப் படுத்துங்கள்.

**படி- 2:**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.

**படி- 3:**

- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்குங்கள்.
- அவர்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தமது குழுச் செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**

- பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துங்கள்.
  - விதிமுறைகளுக்கு உட்படாத, ஆகமம் சாராத, சடங்குகளைப் பிரதான மாகக் கொண்ட வழிபாட்டு முறை நாட்டார் வழிபாடு எனப்படும்.
  - பிரதேசத்திற்கு பிரதேசம் அவ்வப் பிரதேச மக்களின் வழக்காறு, சமூக அமைப்பு என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
  - நாட்டார் தெய்வங்களை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் என்றும் வகைப்படுத்துவர்.

- இத்தெய்வ ஆலயங்கள் பெரும்பாலும் ஊரின் எல்லைப்புறம், கடற்கரையோரம், குளக்கரைகள், காடு, நெல்வயல் வீதிகளின் சந்திகளில் சிறிய குடில்களாக அமைந்திருக்கும்.

**மதுரை வீரன்** மலையக நாட்டார் தெய்வங்களுள் ஒருவன் இன்னோரன்ன வாழ்வியல் தேவைகளுக்காக பல்லாண்டு காலமாக மலையக மக்களால் வழிபடப்படுகின்றான்.

| | | |
|---|---|---|
| தோற்றம் | - | சிறந்த வீரன் ஆற்றல் பொருந்தியவன், கையில் வாள் வைத்திருப்பவன், குதிரை மேல் வருவான். |
| வழிபாடு | - | பொங்கல் வைத்து வழிபடுதல், பூசாரி பறை, உடுக்கை, தப்பு, சங்கு ஒலிக்க கலை ஆடுவர். |
| வழிபாட்டின் நோக்கம் | - | கெட்ட பிசாசுகள் அணுகாமை, நோய் நீக்கம், வெள்ளம், வரட்சி ஏற்படாமை, நினைத்த காரியம் நிறைவேறல். |

### குமாரத்தன்

- குமாரத்தனை குமார தம்பிரான் எனவும் அழைப்பர். வேடர்களினால் வழிபடப் படும் நாட்டார் தெய்வமாகும். இத்தெய்வம் முருக வழிபாட்டுடனும் தொடர்பு படுகின்றது.
- பாணமை, பொத்துவில், மல்வத்தை, புல்லுமலை, கதிரைவெளி ஆகிய பிரதேசங்களில் இவ்வழிபாட்டு முறை மேற்கொள்ளப்படுகின்றது.
- கையில் கோடரி, பொல்லு ஆகிய ஆயுதங்களைத் தாங்கியவராக குமாரத்தன் காணப்படுகின்றார்.
- முக்கோணப் பந்தல் அமைத்து மூன்று பக்கமும் இயற்கைப் பொருளால் அலங்கரித்து, சேலை விரித்து மடை வைத்து வழிபாடு நடைபெறுகின்றது. வழிபாட்டில் கட்டுச் சொல்லுதலும் இடம்பெறும்.
- குமாரத்தனை வழிபாடு செய்வதன் மூலம் வயல் விளைச்சல் பெருகுதல், நோய் நீக்கம், மனநிம்மதி என்பன கிட்டும்.

### கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- நாட்டார் வழிபாடு பற்றிக் கூறுவார்.
- இவ்வழிபாட்டு முறையின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.
- தெய்வங்களின் பெயர்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார்.
- பிரதேசத்திற்கு பிரதேசம் இவ்வழிபாடுகள் பல்வேறு சடங்குகளுடன், இன்று வரை நிலைத்து வாழ்வதை அறிந்து போற்றுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- குமாரதத்தன், மதுரைவீரன் படங்கள்
- நாட்டார் தெய்வங்களின் அட்டவணை
- டிமை கடதாசி, நிறப்பேனை
- செயற்பாட்டுப் பத்திரம்

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1,3**

- இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடபகுதி, கிழக்குப்பகுதி, மலையகம் ஆகிய இடங்களில் வழிபடப்படும் கிராமிய தெய்வங்களின் பெயர் பட்டியல் ஒன்றினைத் தயாரித்து வழங்குக.
- குமாரதத்தன் வழிபாடு பற்றிய விடயங்களை சேகரித்:து வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்

**குழு - 2,4**

(1) இவ்வழிபாட்டில் காணப்படும் பொதுத் தன்மைகள் ஐந்தினை எழுதுக.

(2) மதுரைவீரன் பூசைமுறைகள் பற்றிக் குறிப்பிங்கள்.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்
    - (1) உங்கள் பிரதேச நாட்டார் தெய்வ வழிபாடு பற்றி பிள்ளைக்கு விளக்குங்கள்.
    - (2) உங்கள் ஊர் வழிபாட்டிற்குச் செல்லும்போது பிள்ளையையும் அழைத்து செல்லுங்கள்.

**தேர்ச்சி 8.0** : **சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி, உரிய ஆதாரங்களுடன் சைவத்தின் தொன்மை பற்றியும் வரலாற்றுச் சிறப்பையும் எடுத்துரைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 8.1** சைவசமய வளர்ச்சியின் தொன்மை, வரலாறு என்பவற்றை ஆதாரத்துடன் முன்வைப்பார்

**செயற்பாடு** : சமயத்தின் தொன்மையை விளக்கும் உபநிடத சிந்தனைகளை அறிவோம்.

**பாடவேளைகள் :** 02

**கற்றல் பேறுகள்** :

- உபநிடதங்கள் என்பதன் பொருளை விளக்குவார்
- உபநிடதங்களின் வகைகள் பற்றி அறிவார்
- சைவ மக்களின் ஈடேற்றத்துக்கு உபநிடதங்களின் கருத்துக்களை அறிந்து வெளிப்படுத்துவார்.
- உபநிடதங்கள் வெளிப்படுத்தும் ஒழுக்கவியல் கருத்துககளை கூறுவார்.
- சுவேதாஸ்வதர உபநிடதம் வெளிப்படுத்தும் கருத்துக்களை விளக்கிக் கூறுவார்.
- சைவசமயத்தின் தொன்மையை அறிவதில் உபநிடதங்களின் பங்கு பற்றி ஆராய்ந்து கூறுவார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

படி 1 : - சைவமரபின் தொன்மையை விளக்கும் ஆதாரங்கள் பற்றி மாணவர்கள் கூறச் சந்தர்ப்பம் அளித்துக் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- சைவ மரபின் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்கள்.
    - சிந்துவெளி நாகரிகம்
    - வேதங்கள்
    - உபநிடதங்கள்
    - சங்க நூல்கள்
- இவ்வாதாரங்களில் உபநிடதச் சிந்தனைகள் பற்றி ஆராய்து அவை கூறும் சமய விழுமியங்களைப் பேணவும் பாதுகாக்கவும் தயார்படுத்துங்கள்.

படி 2 : - வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செய்றபாட்டிற்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

படி 3:

- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களது குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப்படுத்துங்கள்.

படி 4 :

- மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்
- சைவத்தின் தொன்மையை வரலாற்றையறிய உதவும் ஆதாரங்கள்.
- வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் சைவத்தின் நிலை பற்றிய பெரியோர்களின் கருத்துக்களை ஆராய்தல்.
- உபநிடதம் என்பது மறைபொருட் கோட்பாடுகளை அறிவுறுத்தும் ஓர் ஞானாசிரியரின் அடியிலிருந்து கேட்டல் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது,
- உபநிடதங்கள் குரு சீட முறையிலே அறிவை பெற விழைந்தவர்களுக்கான அறிவுரைகளாகவும் கலந்துரையாடல்களாகவும் கொண்டவை.
- உபநிடதங்கள் எல்லாமாக 108 ஆகும் அவற்றில் ஈச(ஈசாவாசியம்), கேன,கடோப, பிரசின, முன்டக, மாண்டுக்கிய, தைத்திரீய, சாந்தோக்கிய, பிருகதாரணிய, ஐதரேய,, கௌஷீதகீ, சுவேதாஸ்வதர உபநிடதம் எனும் பன்னிரெண்டும் சிறப்பான உபநிடதங்களாகும்
- மக்ளின்ஈடேற்றத்திற்கு உபநிடதம் கூறும் உபதேசங்கள் - மக்களின் உயிரிலே பிரமம் உறைகின்றது உண்மையிற் பிரமம் மக்களின் உயிராகவே உள்ளது பிரமமே ஆன்மா, ஆதலால், மக்கள் பிரமத்தின் உண்மையை அறிவதோடு மட்டும் நின்றுவிடாது அப்பிரமத்தினை இடையறாது உணரும் நிலையை (அநுபூதி) எய்துதல் வேண்டும். இநத உயர் நிலையை எய்தும்போது, அவன் பிறப்பு இறப்புக்களினின்றும் வீடு (மோட்சம்) பெறுகின்றான். அவனுடைய உயிர்(ஆன்மா) பிரமத்தோடு இரண்டறக் கலந்துவிடுகின்றது. இந்நிலையில் இன்பதுன்பங்களையும் பிறப்பு இறப்புக்களையும் கடந்தவனாகின்றான்.
- உபநிடதத்தில் வலியுறுத்தப்படும் கருத்துக்கள் (சாந்தோக்கியம்) அதுவே ஆன்மா, அது நீ ஆகின்றாய் (ஸ ஆத்மா, தத் துவம் அஸி),ஏகான்மவாதம் பற்றிய கருத்துக்கள்.

  ஆசிரிய மாணவர் தொடர்பு பற்றிய கடோப உபநிடதத்தின் கருத்துக்கள் இறைவன் இருவோரையும் காப்பானாக

  குருகுலக்கல்வி பற்றிய கருத்துக்கள் - கூறப்படும் அறிவுரைகள்

  **தைத்திரிய உபநிடதம்** - உண்மை பேசு அறம் செய்க......

  **பிருகதாரணிய உபநிடதம்** - பொய்யின் நீக்கி என்னை.....

  **ஈச உபநிடதம்** - **இயங்கும்** இந்த உலகில் இயங்கும் பொருள்....
- சுவேதாஸ்வதர உபநிடத கருத்துக்கள் மற்றும் அக்காலத்தில் நிலவிய சமய, மெய்யியற் கருத்துக்களை இணைக்கச் செய்கின்றன. (சைவத்தின் தொன்மையை உபநிடதக் கருத்துக்களை மையமாக் கொண்டு விளக்கமளியுங்கள்)

**தர உள்ளீடுகள்** :- - இணைப்பு 8.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- உபநிடத நூல்கள்
- இணையத்தள செய்திகள்
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா

## படி 5: கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவத்தின் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- சைவத்தின் தொன்மை அறிய உபநிடதங்களின் கருத்துக்களை எடுத்துரைப்பார்
- மக்களின் ஈடேற்றத்துக்கு உபநிடதங்கள் கூறும் உபதேசங்களைக் காட்சிப்டுத்துவார்
- இந்துக்களின் சிந்தனை வளர்ச்சியில் உபநிடதங்கள் ஒழுக்கம் மற்றும் கல்வி பற்றி வெளிப்டுத்தும் கருத்துக்களை விளக்குவார்.
- சுவேதாஸ்வதர உபநிடதம் முன்வைக்கும் கருத்துக்களை வெளிப்படுத்துவார்

### செயற்பாட்டுப் பத்திரம்

1. "உபநிடதம் கூறும் சைவத்தின் தொன்மை˙" என்னும் தலைப்பில் பேச்சை ஆயத்தப்படுத்திப் பேசச் செய்யுங்கள்.

2. "மக்களின் ஈடேற்றத்துக்கு உபநிடதங்கள் கூறும் அறிவுரைகள்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதச் செய்யுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

- கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

  1……………………………………………………………………………………………

  2……………………………………………………………………………………………

  3……………………………………………………………………………………………

  4……………………………………………………………………………………………

  5……………………………………………………………………………………………

- பெற்றோருக்கானது - வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள் : - உபநிடதகாலத்து சைவம் எவ்வாறு இருந்தது அங்கு காணப்பட்ட ஒழுக்க விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேண வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 9.0 :** **ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து, அதனைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1 :** ஈழத்துச் சைவ ஆலயங்களையும், அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு :** ''திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் சிறப்பம்சங்களை அறிந்து போற்றுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- ஈழத்திலுள்ள விநாயகர் ஆலயங்கள் பற்றி மாணவர்கள் விளக்கிக் கூறுவார்கள்
- திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் தலச் சிறப்புக்களை சிறப்புற எடுத்துரைப்பார்.
- இவ் ஆலயத்தின் வரலாற்றை ஆராய்ந்து வெளிப்படுத்துவார்.
- திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் உற்சவகால சிறப்புகளை அறிந்து போற்றுவார்.
- இவ்வாலயங்களின் சிறப்பம்சங்களைத் தொகுத்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் சைவசமய மரபுகளைக் கேட்டு அறியுங்கள்.
- அவர்களின் பிரதேசங்களில் காணப்படும் சிவ ஆலயங்கள் பற்றி வினவுங்கள்.
- ஆலயங்கள் தொடர்பான புராண இதிகாசக் கதைகள், செவிவழிக் கதைகளைக் கூறச் செய்யுங்கள்.
- அவற்றை வகைப்படுத்திக் கூறுமாறு கேளுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு, குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துங்கள்.

**அமைவிடம்**

- இலங்கையின் வடக்கில் கிளிநொச்சியில் உள்ள முறிகண்டி எனும் இடத்தில் அமைந்துள்ளது.

### ஆலய வரலாறு

- யாழ் மாவட்ட மக்கள் பல்வேறு தேவை கருதி ஏனைய மாவட்டங்களுக்கு இவ்வீதியை பயன்படுத்துவது வழக்கம் அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்திற்கு வந்த பக்தர்கள் மாட்டுவண்டிகளில் பயணிக்கும்போது இவ்வாலயத்தை வணங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒரு முறை கதிர்காமத்திற்கு அவ்வழியாக மாட்டுவண்டியில் பயணித்த அடியவர் ஒருவர் இவ்வாலயத்தை தரிசிக்காது கடந்து செல்ல முற்பட்டபோது அவரது வண்டியின் துலா முறிந்து விட்டது. அதனால் துக்கமடைந்த அடியவர் பாலை மரத்தடி விநாயகரை மனமுருகி வேண்டினார் அப்போது அவ்வழியால் வந்த முதியவர் அடியவரின் நிலையறிந்து அங்குள்ள மரம் ஒன்றைச் சுட்டிக்காட்டி அதன் தடியை வெட்டி துலாவுடன் இணைத்துக் கட்டிக் கொண்டு அச்சமின்றி பயணத்தைத் தொடருமாறு அறிவுறுத்தினார். அடியவரும் அவர் கூறியவாறே பயணத்தைத் தொடர்ந்தார். கதிர்காம கந்தனை தரிசித்து திரும்பிய அடியவர் தான் வணங்கிய பிள்ளையாருக்கு முறிகண்டி பிள்ளையார் எனப் பெயர் சூட்டினார். இதுவே பின்னாளில் முறிகண்டி என அழைக்கப்படுகிறது. 1980 ஆம் ஆண்டுகளில் இவ்வாலயத்தின் புனிதம் கருதி திரு என்றும் அடைமொழி சேர்க்கப்பட்டு திருமுறிகண்டி என அழைக்கப்படுகின்றது.
- அதன் பின்பு மீழ்குடியேறிய காலப்பகுதியில் ஆலயமும் அதன் சுற்றமும் மிகவும் சிதைவுண்டு இருந்தமையால் இதுவே இவ்வாலயதினை புனரமைபதற்க்கு மிகவும் பொருத்தமான நேரம் என முடிவுசெய்த கிராம மக்கள் சைவப்பெரியவர்கள் ஜோதிடர்களையும் தொடர்பு கொண்ட போது அவர்களும் இக்கருத்தையே பிரதிபலித்தனர்.
- ஆலய சூழல் ஆலம் மரமும் அதன் விழுதுகளையும் பார்க்குமபொழுது இது தேவரும் முனிவரும் தவம் செய்த இடம் என்பதனில் எதுவித மறுப்பும் இல்லை என கூறி ஆசீர்வத்திதனர். யுத்த சூழலால் புனரமைக்க முடியாமல் போன ஆலயம் யுத்ததின் பின்னர் முழுதுமாக சிதைவடைந்திருந்தது முறிகண்டி வாழ் வர்தகர்களாலும் மக்களாலும் ஆலயம் புனரமைக்கும் பணி தொடங்க முடிவெடுக்கப்பட்து.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- ஈழத்தில் உள்ள விநாயகர் ஆலயங்களைக் குறிப்பிட்டு திருமுறிகண்டி ஆலயத்தின் வரலாறுகளை தொகுத்து எழுதுவார்.
- திருமுறிகண்டி ஆலயத்தின் பூசை முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் எழுதுவார்.
- உமது அயலில் உள்ள பிள்ளையார் ஆலயம் பற்றிய வரலாற்றினையும், தலச் சிறப்பினையும் பெரியவர்களிடம் கேட்டறிந்து தொகுத்து அறிக்கைப் படுத்துவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- ஆலயப் புகைப்படங்கள், ஒளிப்படங்கள் (வீடியோ)
- எழுதுகருவி. வரலாற்று நூல்கள்
- செயற்பாட்டுப் பத்திரம்

## இணைப்பு: 9.1.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1,3**

**1.** திருமுறிகண்டி ஆலயம் தொடர்பான பின்வரும் விபரங்களைக் குறிப்பிடுங்கள்

1. ஆலய அமைவிடம்
2. ஆலய வரலாறு
3. ஆலய அமைப்பு
4. பூசைகளும் விழாக்களும்
5. நூல்கள்

**குழு - 2, 4**

1. திருமுறிகண்டி ஆலயம் பற்றிய கட்டுரை ஒன்று வரைக.
2. திருமுறிகண்டி ஆலயம் பிள்ளையாரின் புனிதத்தன்மை பேணுவோம் என்னும் தலைப்பில் துண்டுப்பிரசுரம் எழுதுக.

**பின்தொடர் பயிற்சி:**

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்

  அருகிலுள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு அழைத்து சென்று அவ்வாலய சிறப்பம்சங்களையும் பூசை முறைகளையும் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 9.0 : ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து, அதனைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1** : ஈழத்துச் சைவ ஆலயங்களையும், அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு** : "முன்னேஸ்வரர் ஆலயத்தின் சிறப்பம்சங்களை அறிந்து போற்றுவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- ஈழத்திலுள்ள சிவன் ஆலயங்கள் பற்றி மாணவர்களிடம் விளக்கிக் சுறுவார்.
- முன்னேஸ்வர ஆலயத்தின் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களை சிறப்புற எடுத்துரைப்பார்.
- இவ் ஆலயத்துக்கான புராதன மன்னர்களின் பங்களிப்புக்களை ஆராய்ந்து வெளிப்படுத்துவார்.
- முன்னேஸ்வர ஆலயத்தின் உற்சவகால சிறப்புகளை அறிந்து போற்றுவார்.
- இவ்வாலயத்தின் சிறப்பம்சங்களைத் தொகுத்து எழுதுவார்.
- இவ்வாலயத்தின் புராதன வரலாறு, கர்ண பரம்பரைக் கதை என்பவற்றை அறிந்து கூறுவார்

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- மாணவர்களிடம் சைவசமய மரபுகளைக் கேட்டு அறியுங்கள்.
- அவர்களின் பிரதேசங்களில் காணப்படும் சிவ ஆலயங்கள் பற்றி வினவுங்கள்.
- ஆலயங்கள் தொடர்பான புராண இதிகாசக் கதைகள், செவிவழிக் கதைகளை கூறச் செய்யுங்கள்.
- அவற்றை வகைப்படுத்திக் கூறுமாறு கேளுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:** • பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துங்கள்.

**அமைவிடம்**

- இலங்கையின் வட மேற்கில் சிலாபம் நகரில் இருந்து கிழக்கே சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.
- இராமர், வியாசர் வழிபட்ட தலம் என தட்சண கைலாய புராணம் கூறுகின்றது.
- கோட்டை மன்னன் 6ஆம் பராக்கிரமபாகு திருப்பணிகளும் மானியமும் வழங்கியமையைக் கல்வெலட்டுச் சான்றுகள் மூலம் அறியலாம்.
- ஒன்பதாம் பராக்கிரமபாகு இவ்வாலயத்துக்கு மானியம் வழங்கியதாகச் செப்பேட்டுச் சான்று உள்ளது.
- குளங்கோட்டு மன்னன் இக்கோயிலை புனர்நிர்மாணம் செய்து பெருந் தொண்டாற்றினான் என முன்னேச்சர மாண்மியம் கூறுகிறது.
- போர்த்துக்கேய தளபதி 1578இல் இவ்வாலயத்தை அழித்துச் சூறையாடினான்
- கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் (1747-1782) புனர்நிர்மாணம் செய்து மானியம் வழங்கியுள்ளான்.
- ஆங்கிலேயர் காலத்தில் இவ் ஆலயங்களின் நிலங்கள் சூறையாடப்பட்டன.

**மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் - சிறப்பு**

- இறைவன் - முன்னைநாதர்
  இறைவி - வடிவாம்பிகை
- இராமர் பிரமஹத்திதோசம் நீங்க வழிபட்ட தலம் இது என கைலாச புராணம் கூறுகின்றது.
- வியாசர் சாபவிமோசனம் பெற்ற தலம்.
- இந்திய காசி விஸ்வநாதர் ஆலயத்தை ஒத்த சிறப்புடைய தலம் - தட்சணகைலாயமாலை
- அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஸ்ரீ வித்யாபீடம் எனக் கூறப்படுகிறது.
- அறுபத்து மூவர் விக்கிரகங்கள் என்பன உள்ள தலம்
- தீர்த்தம் - மாயவன் ஆறு (தெதுறு ஓயா)
- தலவிருட்சம் - அரசமரம் (திருக்குளத்தின் அருகிலுள்ளது)

**பூசைகள், விழாக்கள்**

- மகோற்சவம்
- இருபத்தியேழு நாட்கள் நடைபெறும். ஆவணி மாதப் பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். இவ்வாலயத்தில் இடம்பெறும் பக்தோற்சவம், வேட்டைத்திருவிழா என்பவை சிறப்பானவை.
- மற்றொரு உற்சவம் பத்து நாட்கள் நடைபெறும். தைமாதப் பூச நட்சத்திரத்தில் தீர்த்தம் இடம்பெறும்
- இக்கோயிலில் பங்குனி உத்தரத்தன்று பஞ்சரதங்கள் இழுக்கப்படுகின்றன.

**நூல்கள்**

- முன்னீஸ்வர ஊஞ்சல், முன்னைநாதேஸ்வரர், திருவூஞ்சல், ஸ்ரீமுன்னைநாத சுவாமி, வடிவழகி அம்பாள் திருவூஞ்சல், முனீஸ்வரர் நவமணிமாலை, முன்னைநாதசுவாமி ஆசிரிய விருத்தம், வடிவழகியம்மை ஆசிரிய விருத்தம், ஸ்ரீமுன்னேஸ்வர மான்மியம் முதலானவை.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- ஈழத்தில் உள்ள சிவன் ஆலயங்களைக் குறிப்பிட்டு முன்னேஸ்வரர் ஆலயத்தின் வரலாறுகளை தொகுத்து எழுதுவார்.
- முன்னேஸ்வர ஆலயத்தின் பூசை முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் எழுதுவார்.
- உமது அயலில் உள்ள சிவன் ஆலயம் பற்றிய வரலாற்றினையும், தலச் சிறப்பினையும் பெரியவர்களிடம் கேட்டறிந்து தொகுத்து அறிக்கைப் படுத்துவார்.
- முன்னேஸ்வர ஆலயத்தின் சமூகப் பணிகளை குறிப்பிடுவார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- ஆலயப் புகைப்படங்கள், ஒளிப்படங்கள் (வீடியோ)
- எழுதுகருவி
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 9.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1,3**

1. முன்னேஸ்வர ஆலயத்தின் அமைவிடம் பற்றிக் குறிப்பிடுங்கள்
2. புராதன காலத்து வரலாற்றைத் தொகுத்துக் கூறுங்கள்
3. ஆலயத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றி குறிப்பிடுங்கள்

**குழு - 2,4**

1. முன்னேஸ்வர ஆலய பூசைகள் விழாக்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்
2. ஆலயம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்களைப் பட்டியற்படுத்துங்கள்
3. ஆலயத்தினூடக முன்னெடுக்கப்படும் சமய,சமூகப் பணிகளைக் குறிப்பிடுங்கள்.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்

  அருகிலுள்ள சிவன் ஆலயத்திற்கு அழைத்து சென்று அவ்வாலய சிறப்பம்சங்களையும் பூசை முறைகளையும் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 9.0 :** **ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து, அதனைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1 :** ஈழத்துச் சைவ ஆலயங்களையும், அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு :** "காரைதீவு கண்ணகையம்மன் ஆலயத்தின் சிறப்பினை அறிந்து அம்மன் வழிபாட்டில் ஈடுபடுவோம்."

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- காரைதீவு கண்ணகையம்மன் ஆலய வரலாற்றினை அறிவார்.
- விழாக்கள், பூசை முறைகளைக் கூறுவார்.
- ஆலயத்தில் நடைபெறும் விசேட நிகழ்வுகளை எடுத்துரைப்பார்.
- ஆலயத்தில் நடைபெறும் குளிர்த்தி பற்றிய சிறப்புக்களை பட்டியற்படுத்துவார்.
- ஆலயத்தினூடாக முன்னெடுக்கப்படும் சமய,சமூகப் பணிகளைக் குறிப்பிடுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- மாணவர்களுக்குத் தெரிந்த அம்மன் கோயில்களைப் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- அங்கு நடைபெறும் பூசை வழிபாட்டு முறைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களையும், தரஉள்ளீடுகளையும் வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக செயற்படுவதை அவதானியுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்குங்கள்.
- அவர்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தமது குழுச் செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- மாணவர் கூறும் கருத்துக்களையும், பின்வரும் விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - மட்டக்களப்பில் அம்பாறையில் காரைதீவு என்னும் கிராமத்தில் காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.
  - அமைதியான இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது.
  - ஆதியில் கண்ணகி சிலையுடன் ஒரு தாயும் மகளும் கதிர்காம யாத்திரைக்கு சென்றபோது காரைதீவில் வேப்ப மரத்தின் கீழ் தங்கியிருந்தனர் எனவும், இவர்கள் தாங்கள் கொண்டு வந்த கண்ணகி சிலையை இவ்விடத்தில் வைத்து வழிபாடு செய்தனர் எனவும் கர்ண பரம்பரைக்கதை உண்டு.

- இந்நாட்களில் அட்டப் பள்ளத்திலிருந்து இப்பகுதியை ஆண்ட வன்னிமை யானை மீது வந்ததாகவும், அவ்யானை அவ்விடத்தில் மண்டியிட்டு படுத்திருந்ததாகவும், பின் அம்மாது தீர்த்த நீர் தெளிக்க யானை எழுந்தது. இதனைக் கண்ட வன்னிமை இவ்வாலயத்திற்கு நிலையான கட்டிடத்தை அமைத்துக் கொடுத்தார்.
- ஆலய பரிபாலனம் கற்புகமார்களால் மேற் கொள்ளப்படுகின்றது. கங்கன் தன் மனைவியுடன் கோயிலுக்கு வந்தவேளை அவனது மனைவியின் இரண்டு கண்களும் பார்வை இழந்ததாகவும், பின் அருள் வேண்டி வழிபட்டு கங்கனின் மனைவி கண்பார்வை பெற்றதாகவும் கூறப்படுகின்றது.
- வருடத்தில் ஒரு முறை திறக்கப்பட்டு பத்துநாட்கள் பூசை நடைபெற்றிருந்தது. இன்று ஆகமம்சார் வழிபாட்டுமுறையில் விமான அர்த்த மண்டபம்,மகாமண்டபம் அமைக்கப்பட்டபோதிலும் பாரம்பரிய வழிபாட்டு முறைகளே இன்னும் பின்பற்றப்பட்ட வருகின்றன.
- வைகாசி பூரணை தினத்தை அடுத்து வரும் திங்களில் பொங்கல் ,குளிர்த்தி சடங்குகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்தரத்தன்று தீர்த்தம் நடைபெறும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- ஆலயம் தொடர்பான வரலாற்றுக் கதையை முன்வைப்பார்
- ஆலயத்தில் நடைபெறும் குளிர்த்தி பற்றிய நிகழ்வுகள் தொடர்பான சிறப்புக்களை முன்வைக்குக.
- ஆலயத்துக்கும் கதிர்காம யாத்திரைக்குமான தொடர்புகளை விளக்குவார்
- ஆலயம் - சமூகத் தொடர்புகளை எடுத்துரைக்குக.
- ஆலயத்தினூடக முன்னெடுக்கப்படும் சமய,சமூகப் பணிகளைக் குறிப்பிடுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, இறுவட்டு
- செயற்பாட்டுப் பத்திரம், வரலாற்று நூல்கள்

**இணைப்பு: 9.1.1:**

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1,3**

- ஆலயத்தில் நடைபெறும் வைகாசித் திங்கள் குளிர்த்தி பற்றிய நிகழ்வுகள் தொடர்பான சிறப்புக்களை முன்வைக்குக.
- ஆலயத்துக்கும் கதிர்காம யாத்திரைக்குமான தொடர்புகளை எடுத்துரைப்புச் செய்க.

**குழு - 2,4**

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை தயாரியுங்கள்.
  - அமைவிடம்
  - இறைவி
  - தீர்த்தம்
  - திருக்குளிர்த்தி
  - பூசை, சடங்குகள்
  - வரலாற்றுக் கதைகள்

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்

அம்மன் ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள் அங்கு நடைபெறும் விசேட பூசைகளில் கலந்து அது பற்றிய தகவல்களை பிள்ளைகளுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் விளக்குங்கள்.தொடச்சியாக வழிபாடுகளில் ஈடுபட ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்,

**தேர்ச்சி 9.0 :** **ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து, அதனைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1 :** ஈழத்துச் சைவ ஆலயங்களையும், அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு :** " உடப்பு ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயத்தின் சிறப்பினை அறிந்து அம்மன் வழிபாட்டில் ஈடுபடுவோம்."

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- உடப்பு ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலய வரலாற்றினை அறிவார்.
- விழாக்கள், பூசை முறைகளைக் கூறுவார்.
- ஆலயம் பற்றிய புராண இதிகாச கதைகளை தேடித் தொகுப்பார்
- அம்மன் வழிபாட்டில் உடப்பு ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலய சிறப்புக்களை போற்றுவார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களுக்கு தெரிந்த அம்மன் கோயில்களைப் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- அங்கு நடைபெறும் பூசை வழிபாட்டு முறைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டு படிவங்களையும், தரஉள்ளீடுகளையும் வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் செயற்படுவதை அவதானியுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்குங்கள்.
- அவர்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தமது குழுச் செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- மாணவர் கூறும் கருத்துக்களையும், பின்வரும் விடயங்களையும் அடிப்படை யாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - புத்தளம் மாவட்டத்தில் உடப்பு என்னும் கிராமத்தில் உடப்பு ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயம் அமைந்துள்ளது.
  - அமைதியான இயற்கைச் சூழலில் அமைந்துள்ள இக்கோயிலை பெரிய கோயில் என அழைப்பார். இது 108 அடி உயரமான நவதள ராஜகோபுரத்தைக் கொண்டது.
  - ஆடி மாதத்தில் பதினெட்டு நாட்கள் திருவிழா நடைபெறும். (இணைப்பு -1 பார்க்கவும்)
  - திருவிழாவின் எல்லாச் செயற்பாடுகளும் மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டதாக அமைகின்றது.
  - பாரதக்கதையின் சில சம்பவங்கள் ஆலயத்தில் சடங்குகளாக நிகழ்த்தப்படும்
  - திருவிழாக்காலங்களில் "காவியம் பாடுதல்" மிகச் சிறப்பாக நடைபெறும்.
  - பதினைந்தாம் நாள் மாலையில் பாண்டவர் வனவாசம் நடைபெறும்.
  - பதினாறாம் நாள் மாலையில் அருச்சுனன் தவநிலை நடைபெறும்

- பதினேழாம் நாள் அக்கினி குண்டம் காவலும், மாலை வேளையில் கர்ணன் படுகளம் இடம்பெறும்
- பதினெட்டாம் நாள் புதன்கிழமை தீமிதிப்பு நடைபெறும்
- அடுத்தநாள் அம்பாள் ஊர்வலமும், தர்மர் பட்டாபிசேகம், கொடியிறக்கமும் நடைபெற்று திருவிழா முடிவுறும்.
- இன்று ஆகமம்சார் வழிபாட்டு முறையில் விமான, அர்த்தமண்டபம், மகா மண்டபம் அமைக்கப்பட்ட போதிலும் பாரம்பரிய வழிபாட்டு முறைகளே இன்னும் பின்பற்றப்பட்டு வருகின்றன.
- திருவிழாக்காலங்களில் புராண, இதிகாச கதைகளும் நாடகங்களாக நடித்துக் காட்டப்படும்.
- சித்திரைச் செவ்வாயில் மழைவேண்டி மாரியம்மனுக்கு கிராமமக்களால் முழக்கொட்டு எனும் சடங்கு நடைபெறுவதும் உடப்பு நகரின் சிறப்பாக காணப்படுகின்றது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- ஈழத்தில் காணப்படும் திரௌபதியம்மன் ஆலயங்கள் பற்றி அறிவார்
- உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தின் சிறப்புக்களை எடுத்துரைப்பார்
- உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தின் சமய,சமூக பணிகளை விளக்குவார்
- ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் விழாக்கள் தொடர்பாக எடுத்துரைப்பார்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- டிமை கடதாசி, இறுவட்டு (வீடீயோ)
- ஆலயம் தொடர்பான புகைப்படங்கள்
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 9.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1,3**

- உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தின் சிறப்புக்களை எடுத்துரைக்குக.
- உடப்பு நகரில் நடைபெறும் ஆலயத்துடனான ஏனைய விழாக்களைப் பட்டியற்படுத்தி அவை தொடர்பாகக் கருத்துரை வழங்குக.

**குழு - 2,4**

- உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தின் சமய,சமூக பணிகளை விளக்குக.
- ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் விழாக்கள் தொடர்பாக எடுத்துரைக்குக.

## பின்தொடர் பயிற்சி:

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்

(1) பிள்ளைகளை ஆலய சுற்றுலா அழைத்துச் செல்லும் போது முன்னேஸ்வர இறைவனை வழிபடும் போது உடப்பு நகரில் உறையும் அம்மனையும் வழிபட பிள்ளைகளை அழைத்துச் செல்லுங்கள்

**இணைப்பு -1**

உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தில் ஆடி மாதத்தில் பதினெட்டு நாட்கள் திருவிழா எடுப்பர். திருவிழாவின் எல்லாச் செயற்பாடுகளும் மகாபாரதக் கதையினை அடிப்படையாகக் கொண்டதாக அமையும். அவ்வூர் மக்களின் கலை கலாசார வளர்ச்சியில் ஆடித்திருவிழா முக்கிய பங்காற்றி வருகிறதெனலாம்.

ஆடிமாத அமாவாசையை அண்மித்து வருகின்ற ஞாயிற்றுக்கிழமை மாலை கிரியைகள் தொடங்கும். அன்று பிற்பகல் ஆலயக் குருக்கள் அவர்கள் ஆகம விதிப்படி கிரியைகளைச் செய்து பூசகருக்கும் காப்புக் கட்டுவார். தூய்மை பெற்ற பூசகர் கரகம் பாலிக்கும் சடங்கைச் செய்வார். பூசகர் மாவிலைகள் வைத்து அலங்கரிக்கப்பட்ட செப்புக்குடத்தை ஏந்தி ஒரு மைல் தொலைவில் உள்ள மாரியம்மன் ஆலயம் செல்வார்கள். அங்கு பூசகர் குளித்து, பூசனைகள் பண்ணுவார். வெள்ளிப்பிரம்பெடுத்து மந்திரம் செபிக்க பூசகருக்கு உரு ஏறும். உரு வந்த நிலையில் செப்புக்குடத்தை தலையில் ஏந்தி தெருவீதி வழியாக வருவார். அப்போது அம்மன் புகழ்பாடி ஆலயத்திற்குள் பூசகரை அழைத்துச் செல்வா ர் செப்புக் குடத்தைக் கரகம் என்றும் அதை ஏந்திச் செல்வதை கரகம் பாலித்தல் என்றும் கூறுவார்.

திருவிழாவின் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை. அன்று நடுநிசியில் பூசகர் களப்பலி கதையை அம்மானைப்பாடலுடன் படிப்பார். பின்னர் பூசகரே தமிழ் மந்திரம் ஓதிக் கொடியை ஏற்றுவார் இதனை உள் கொடி என அழைப்பார் பிராமணர்கள் இதில் பங்கேற்பதில்லை. ஐந்தாம் நாளில் ஆலயத்தின் வெளியில் உள்ள உயரமான கம்பத்தில் ஒரு கொடி ஏற்றுவார்கள். இதனை வெளிக் கொடி என அழைப்பர். இதன் பின்னர் வெளியூரில் தொழில் செய்பவர் யாவரும். ஊர் திரும்பி விடுவர். ஊரவர்கள் திருவிழா முடியும் வரை ஊரிலேயே தங்கி இருக்கவேண்டும் என்பது மரபாக உள்ளது.

வெளிக் கொடி ஏற்றிய தினத்திலிருந்து ஒன்றுவிட்ட ஒருநாள் கரகம் பாலித்தல் நடைபெறும் கரகம் பாலித்து வரும் பூசகரை மக்கள் திரௌபதியம்மனாகவே பாவனை செய்வார். மஞ்சள் நீரினால் பூசகரது பாதங்களைக் கழுவி மக்கள் அம்பாளுக்குரிய வழிபாட்டைச் செய்வார்.

பூசகருடன் செல்லும் பாடுவோர் திரௌபதியம்மனின் தோற்றம், புகழ், தெய்வீகத்தன்மை என்பவற்றை சந்தவிருத்தங்களாகவும் எச்சரிக்கைப் பாடல்களாகவும் பாடுவார். சடங்குகள் ஆடித்திருவிழாவின் போது மகாபாரதக் கதையின் சில சம்பவங்கள் ஆலயத்துள் சடங்குகளாக செய்யப்படும் திரௌபதி தேவிக்கு மாலை இடுதல், திருக்கல்யாணம், துகிலுரிதல் என்பன அவற்றுள் அடங்கும் இவற்றைப் பூசகரே நிகழ்த்துவார்.

திருவிழாவின் பதினைந்தாம் நாள் மாலையில் பாண்டவர்கள் வனவாசம் நடைபெறும் வனவாசிகளாக வேடமணிந்த ஐவரும் திரௌபதி தேவியுடன் பலவனங்களைத் தாண்டி வருவதாக நடிப்பார். காளியம்மன் ஆலயத்திலிருந்து வீதிவழியாகத் திரௌபதி அம்மன் ஆலயத்தை நோக்கி வருவார்கள். பூசகர் பாண்டவரின் வனவாசக் கதையை உடுக்கடித்துக் கூறுவார்.

பதினாறாம் நாள் மாலை அருச்சுனன் தவநிலை நடைபெறும். கைலாயமலையைக் குறிக்கும் கம்பம் ஒன்று நாட்டப்படும். மாலையில் அருச்சுனனாக தவவேடம் பூண்ட ஒருவர் கம்பத்தில் ஏறி பாசுபதம் வேண்டி பிரார்த்தனைப் பாடல்களைப் பாடுவார். பின்னர் சிவன் பார்வதி தேவியுடன் தரிசனம் கொடுத்து பாசுபதாஸ்திரம் வழங்குவதும் நடைபெறும்.

பதினேழாம் நாள் அன்பர்கள் நடமிடும் அக்கினிக்குண்டம் காவல் செய்யப்படும். பூசகர் அக்கினிக் குண்டத்தின் அருகில் நின்று பத்திரகாளி, ஐயனார், வீரபத்திரர், வைரவர் போன்ற காவல் தெய்வங்களை உடுக்கடித்து அழைப்பார். அத்தெய்வங்களாக வேடமிட்ட நால்வரும் உரு ஆடி குண்டத்தை காவல் செய்யும் கிரியைகளைச் செய்து முடிப்பார். அன்று கர்ணன் படுகளமும் காட்சிப்படுத்தப்படும்.

பதினெட்டாம் நாள் புதன்கிழமை பக்தி பூர்வமாக தீமிதிப்பு நடைபெறும். அதிகாலையிலேயே கொடித்தம்ப மண்டபத்தினுள் கோயில் குருக்கள் மந்திரங்கள் ஓதி ஓம குண்டத்தில் அக்கினி வளப்பார்கள். அவர்கள் திரௌபதியம்மனிடம் சென்று அனுமதி பெற்று உரு ஆடிக் கொண்டுவருவார்களா. பின்னர் குருக்களால் வளர்க்கப்பட்ட அக்கினியில் இருந்த நெருப்புத்தணலை கையினால் அள்ளி தனது அக்கினிச் சட்டியில் வைப்பார்கள். அக்கினிச் சட்டியுடன் ஆலயத்தை வலம் வந்து அக்கினிக் குண்டத்தில் அதை வைப்பார்கள். அக்கினிக் குண்டத்தை மூடி புளியங்கட்டைகளை அடுக்கி அவற்றை எரித்து தணலைச் செப்பனிடுவார்கள்.

பிற்பகல் திரௌபதியின் வாதுமுடிப்பு நடைபெறும். மஞ்சள் ஆடையால் போர்த்திய திரௌபதி ஆலயத்தில் இருந்து படுகளம் நோக்கி வருவார். படுகளத்தில் வீழ்ந்து கிடக்கும் துரியோதனன் மார்பைப் பிளந்து உதிரத்தை எடுத்து தலையில் தேய்த்து தனது சபதத்தை முடிப்பதாக காட்சி காண்பிக்கப்படும்.

இரவு ஏழுமணி அளவில் அனற் குளத்தில் குவிந்து கிடக்கும் தணலைச் சமப்படுத்தி, இறுக்கிப்பதப்படுத்தி வைத்திருப்பார். மாரியம்மன் ஆலயத்திலிருந்து பூசகர் உரு ஏறிய நிலையில் வேகமாக வருவார். தலையில் அலங்காரக் கரகம் இருக்கும் அரோகரா கோசத்துடன் முதலில் பூசகரே அனற் குளத்தில் நடமிடுவார் அவரைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் அனற்குளத்தில் நடமிட்டு தமது நேர்த்திக் கடனைப் பூர்த்தி செய்வார்.

அடுத்தநாள் அம்கபள் ஊர்வலமும் தர்மர் பட்டாபிசேகமும், கொடியிறக்கமும் நடைபெற்று ஆலயத்திருவிழா நிறைவுபெறும். ஆடித் திருவிழாக்காலத்திலேயே நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் காவடி பாற்செம்பு என்பவற்றை எடுப்பார். மாரியம்மன் ஆலயத்திலிருந்து புறப்படும் அவர்கள் உச்சநிலையில் உருவந்து திரௌபதியம்மன் ஆலயத்தை அடைந்து தமது நேர்த்திக் கடனை முடிப்பார். திருவிழாவின் இறுதி நான்கு நாட்களும் ஆலய முன்றலில் நாடகங்கள் நடைபெறும். குறிப்பாக நளாயினி, கீசகன் வதை, கர்ணன் போன்ற இதிகாச நாடகங்களும் நடைபெறும்.

**தேர்ச்சி 9.0 :** **ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து, அதனைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1 :** ஈழத்துச் சைவ ஆலயங்களையும், அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு :** "ஈழத்தில் முருகன் ஆலயங்கள் பற்றிய சிறப்பம்சங்களை அறிந்து வழிபடுவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- உகந்தை முருகன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.
- கதிர்காம ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.
- தம் வாழ்க்கையில் இவ்வாலயங்களுக்கு தலயாத்திரை செல்ல வேண்டும் என்ற உணர்வினைப் பெறுவார்.
- ஆலய புராண காலத்து வரலாற்றை அறிந்து கூறுவார்
- ஆலயத்தினூடக முன்னெடுக்கப்படும் சமய,சமூகப் பணிகளைக் குறிப்பிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- ஈழத்தில் உள்ள முருகன் ஆலயங்கள் பற்றி மாணவர்கள் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆலயங்களின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறு சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களையும், பின்வரும் விடயங்களையும் அடிப் படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.

**உகந்தை முருகன் ஆலயம்**

- கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பிற்கு தெற்கே அம்பாறை மாவட்டத்தில் பாணமைக்கு அடுத்துள்ள உகந்தை கிராமத்தில் அமைந்துள்ளது.
- உகந்தை ஸ்ரீ சித்திர வேலாயுதர் கோயிலானது ஆரம்ப காலத்தில் ஆலமரத் தடியில் மேடையில் வேல் மட்டும் கொண்டதாக திறந்த வெளியில் காட்சி யளித்தது.

- இவ்வாலயம் 1885 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வாழ்விடமாகவும் கொண்ட மார்க்கண்டு முதலியாரால் மலையடிவாரத்தில் கட்டப்பட்டது.
- இத்தலத்தின் மூர்த்தி - சித்திர வேலாயுத சுவாமி
  தீர்த்தம் - கிழக்கு திருக்கடல் துறை (மாணிக்ககங்கை)
  தலவிருட்சம் - வெள்ளை நாவல்
- மகோற்சவம் ஆடி அமாவாசைக்கு எட்டு நாட்கள் முன்பாக தொடங்கி ஆடி அமாவாசையன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும்.
- விழாக்களின்போது சுவாமியை தாம்பாளத்தில் வைத்து பட்டுச் சேலையினால் மூடி வீதிவலம் வருவர்.
- ஆடிப் பூரணை திருவோணத்தில் தீர்த்தம் இடம்பெறும்.

**கதிர்காமம்**

- ஈழத்தின் தென்கீழ்ப் பகுதியில் உள்ளது.
- கதிர்காமம் என்றால் கடவுள் தன்மையுடைய ஒளியும், அன்பும் நிறைந்த இடம் என்பது பொருள்.
- கதிர்காமம் என்பதற்கு தினை நிறைந்த ஊர் என்றும் பொருள். இப்பகுதியைச் சுற்றி வேடர்களினால் செய்கை பண்ணப்படும் தினைப்பயிர்கள் அதிகமாகக் காணப்பட்டதால் இப்பெயர் பெற்றது.
- இவ்வாலயத்திற்குப் பூசை செய்பவர் வேடர் வழிவந்த கப்புறாளை எனப்படு பவரே.
- கதிர்காமம், அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற புராதன திருத்தலம்.
- கதிர்காம ஆலயத்தின் பூசை முறை, ஆகமம் சார்ந்த முறையில் இருந்து வேறுபட்டதாகும்.
- ஆலயத்தின் தீர்த்தம் மாணிக்க கங்கை ஆகும்.
- முருகன் வள்ளியம்மையை கண்டு திருமணம் செய்த இடமாகும்.
- ஆடி மாதத்தில் உற்சவ விழாக்கள் நடைபெறுகின்றன. ஆடி திருவோண நாளன்று தீர்த்தம் நடைபெறும்.
- சிறப்பான விழாக்களின்போது மூலஸ்தானத்தில் இருக்கும் இயந்திரத் தகடு வைக்கப்பட்ட பெட்டியை யானை மீது எழுந்தருளச் செய்து திருவீதி உலா இடம்பெறும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- ஈழத்தில் உள்ள முருகன் ஆலயங்களைக் குறிப்பிட்டு உகந்தை முருகன் ஆலயத்தின் வரலாறுகளைத் தொகுத்து எழுதுவார்.
- கதிர்காம ஆலயத்தின் பூசை முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் எழுதுவார்.
- உமது அயலில் உள்ள முருகன் ஆலயம் பற்றிய வரலாற்றினையும், தலச் சிறப்பினையும் பெரியவர்களிடம் கேட்டறிந்து தொகுத்து அறிக்கைப் படுத்துவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- ஆலயப் புகைப்படங்கள்
- எழுதுகருவி
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 9.1.1:**

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1,3**

- ஈழத்தில் உள்ள முருகன் ஆலயங்களைக் குறிப்பிட்டு உகந்தை முருகன் ஆலயத்தின் வரலாறுகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- உகந்தை முருகன் ஆலயத்தின் பூசை முறைகள் மற்றும் மகோற்சவம் பற்றித் தொகுத்து எழுதுங்கள்.

**குழு - 2,4**

- கதிர்காம ஆலயத்தின் பூசை முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் குறிப்பிடுங்கள்.
- கதிர்காமம் ஆலயத்தின் புராதன வரலாற்றுச் சம்பவத்தைக் கதையாக எடுத்துரையுங்கள்
- உமது அயலில் உள்ள முருகன் ஆலயம் பற்றிய வரலாற்றினையும், தலச் சிறப்பினையும் பெரியவர்களிடம் கேட்டறிந்து தொகுத்து அறிக்கைப் படுத்துங்கள்.

**பின்தொடர் பயிற்சி:**

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**

- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்

அருகிலுள்ள முருகன் ஆலயத்திற்கு அழைத்து சென்று அவ்வாலய சிறப்பம்சங்களையும் பூசை முறைகளையும் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 9.0** : **ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து, அதனைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1** : ஈழத்துச் சைவ ஆலயங்களையும், அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.

**செயற்பாடு** : "வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் சிறப்பம்சங்களை அறிந்து போற்றுவோம்."

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :
- ஈழத்திலுள்ள விஷ்ணு ஆலயங்கள் பற்றி மாணவர்களிடம் விளக்கிக் கூறுவார்கள்
- வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மூர்த்தி, தல. தீர்த்தச் சிறப்புக்களை சிறப்புற எடுத்துரைப்பார்.
- இவ் ஆலயத்துக்கான புராதன மன்னர்களின் பங்களிப்புக்களை ஆராய்ந்து வெளிப்படுத்துவார்.
- வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் உற்சவகால சிறப்புகளை அறிந்து போற்றுவார்.
- இவ்வாலயங்களின் சிறப்பம்சங்களைத் தொகுத்து எழுதுவார்.
- ஆலயத்தினூடக முன்னெடுக்கப்படும் சமய,சமூகப் பணிகளைக் குறிப்பிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் சைவசமய மரபுகளைக் கேட்டு அறியுங்கள்.
- அவர்களின் பிரதேசங்களில் காணப்படும் சிவ ஆலயங்கள் பற்றி வினவுங்கள்.
- ஆலயங்கள் தொடர்பான புராண இதிகாசக் கதைகள், செவிவழிக் கதைகளைக் கூறச் செய்யுங்கள்.
- அவற்றை வகைப்படுத்திக் கூறுமாறு கேளுங்கள்.

**படி- 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத் தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை, குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:** • பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துங்கள்.

**அமைவிடம்**

- இலங்கையின் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் வல்லிபுரம் எனும் இடத்தில் அமைந்துள்ளது.
- இராமர், வியாசர் வழிபட்ட தலம் என தட்சண கைலாய புராணம் கூறுகின்றது
- மூர்த்தி - சக்கரம் (சுதர்சனம்). இது இலவல்லி என்பவளுக்கு திருமால் கொடுத்த சக்கரம்
- மகோற்சவம் - புரட்டாதி மாத அமாவாசையில் ஆரம்பித்து பதினேழு நாட்களுக்கு நடைபெறும்
- மகோற்சவ காலத்தில் பின்வரும் விழாக்கள் நடைபெறும்.

  ஒன்பதாம் நாள் - வெண்ணெய்த் திருவிழா
  பதினோராம் நாள் - பாம்புத் திருவிழா
  பன்னிரெண்டாம் நாள் - கம்சன் விழா
  பதின்மூன்றாம் நாள் - வேண்டற் திருவிழா

- சக்கரத்தாழ்வார் விழாக் காலத்தில் வலம் வருதல்.
- சமுத்திரத் தீர்த்தமாடல்
- இவ்வாலயத்தில் கிருஷ்ண ஜயந்தி, வைகுண்ட ஏகாதசி சிறப்பாக நடைபெறுகின்றது.

**நூல்கள்**

- தட்சணகைலாய புராணம்
- கோகில சந்தேச
- தட்சணகைலாய மான்மியம்
- யாழ்ப்பாண வைபவமாலை

**பிரபந்தங்கள்**

- வல்லிபுரத்திருவந்தாதி
- கருடன் தூது
- மும்மணி மாலை
- வல்லிபுரநாதர் பதிகம்
- சிங்கை நகர்ப்பதிகம்
- குருக்கட்டுத் திருவந்தாதி

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** • பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- ஈழத்தில் உள்ள விஷ்ணு ஆலயங்களைக் குறிப்பிட்டு வல்லிபுர ஆலயத்தின் வரலாறுகளைத் தொகுத்து எழுதுவார்.
- வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பூசை முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் எழுதுவார்.
- உமது அயலில் உள்ள விஷ்ணு ஆலயம் பற்றிய வரலாற்றினையும், தலச் சிறப்பினையும் பெரியவர்களிடம் கேட்டறிந்து தொகுத்து அறிக்கைப் படுத்துவார்.
- ஆலயத்தினூடக முன்னெடுக்கப்படும் சமய,சமூகப் பணிகளைக் குறிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- ஆலயப் புகைப்படங்கள்
- எழுதுகருவி
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு: 9.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு - 1,3**
- ஆலயத்தின் புராதன வரலாறு பற்றி தட்சணகைலாய புராணம் வெளிப்படுத்தும் கருத்துக்ளை எடுத்துரைக்க.
- ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவ கால நிகழ்வுகளைப் பட்டியற்படுத்துக.

**குழு - 2,4**
- ஆலயத்தினால் மேற் கொள்ளப்படும் சமய, சமூகத் தொண்டுகளை எடுத்துரைக்குக.
- ஆலயம் தொடர்பாக எழுந்த பிரபந்தங்கள், நூல்கள் என்பவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.

**பின்தொடர் பயிற்சி:**

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புகளைப் பட்டியல்படுத்துங்கள்.

(1)

(2)

(3)

**பெற்றோருக்கானது:**
- வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்

  அருகிலுள்ள விஷ்ணு ஆலயத்திற்கு அழைத்துச் சென்று அவ்வாலய சிறப்பம்சங்களையும் பூசை முறைகளையும் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 10.0** : **பிறசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிற்கு மதிப்பளிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.1**: பிறசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து கொள்வார். அவை பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** : **இலங்கையில் உள்ள சமயங்களை அறிவோம். அவர்களின் வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து மதிப்பளிப்போம்.**

**பாடவேளைகள்** : 01

**கற்றல் பேறு** :

- இலங்கையில் உள்ள சமயங்களை அறிவார்.-
- பிற சமயங்களுக்கு மதிப்பளிப்பார்.
- சைவசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து வாழ்வில் கடைப்பிடிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்** :

படி 1 :
- இலங்கையில் உள்ள சமயங்களைக் கூறும்படி மாணவர்களிடம் வினவுங்கள்.
- அவர்கள் வழிபடும் கடவுளர் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- அவர்கள் கொண்டாடும் விழாக்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

படி 2 :
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- டிமைன்ற் பேப்பர், பேனா என்பவற்றை ஒவ்வொரு குழுவிற்கும் பகிர்ந்தளியுங்கள்
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து, தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

படி 3:
- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களின் குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முடுமுமைப் படுத்துங்கள்.

படி 4 : - ஒவ்வொரு மாணவரும் எழுதிய அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- ஒவ்வொரு மாணவரினதும் செயற்பாட்டிற்கும் ஏனைய மாணவர்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.
- சைவம், கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் இலங்கையில் பின்பற்றப்படுகின்றன.
  - சைவம் - சிவன்
    கிறிஸ்தவம் - இயேசு
    பௌத்தம் - கௌதம புத்தர்
    இஸ்லாம் - அல்லாஹ் ஆகிய கடவுள்களை வழிபாடு செய்கின்றனர்.
  - இச் சமயங்களின் முதல் நூல்கள்
    - சைவம் - வேதம், ஆகமம்
    - கிறிஸ்தவம் - பைபில்
    - பௌத்தம் - திரிபீடகம், தம்மபதம்
    - இஸ்லாம் - திருக்குர்ஆன்
  - விசேட விழாக்கள்
    - சைவம் - சித்திரைப் புத்தாண்டு, தைப்பொங்கல், தீபாவளி
      கிறிஸ்தவம் - பெரிய வெள்ளி , நத்தார் பண்டிகை
      பௌத்தம் - புதுவருடம், வெசாக்
      இஸ்லாம் - றமழான், ஹஜ் பெருநாள்
  - இம் மதங்கள் இறை உண்மையையும், அன்பையும், இறைபக்தியையும் விளக்குகின்றன.
  - சகல மதங்களையும் போற்றி மதிப்பளித்தல் வேண்டும்

**தரவிருத்தி உள்ளீடுகள்:** இணைப்பு 1.2.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்
சமயங்களின் பிரதான நூல்கள், பண்டிகை தொடர்பான காட்சிகள், வீடியோ ஒளிப்படங்கள்
டிமைன் கடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**
பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- இலங்கையிலுள்ள சமயங்களை அறிவார்.
- சமயங்களின் பிரதான தெய்வங்களைப் பட்டியற் படுத்துவார்.
- ஒவ்வொரு சமயத்துக்குமுள்ள முதன்மையான நூல்களைக் கூறுவார்.
- ஒவ்வொரு சமயத்தாராலும் கொண்டாடப்படும் விழாக்களைக் கூறுவார்.
- பிறசமயங்களுக்கு மதிப்பளித்து வாழ்வார்.

**இணைப்பு 9.1.1 செயற்பாட்டுப் பத்திரம்**

இலங்கையில் உள்ள சமயங்கள்

| சமயங்கள் | வழிபாட்டுக்குரியவர் | முதன்நூல் | விசேட விழாக்கள் |
|---|---|---|---|
| 1.சைவசமயம் | | | |
| 2.கிறிஸ்தவம் | | | |
| 3.பௌத்தம் | | | |
| 4.இஸ்லாம் | | | |

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1. ……………………………………………………………………………………

   2. ……………………………………………………………………………………

   3. ……………………………………………………………………………………

   4. ……………………………………………………………………………………

   5. ……………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) இலங்கையில் உள்ள அனைத்துச் சமயங்களையும் அதன் கருத்துக்களையும் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களையும் தேடி அறிந்து அவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையில் பிள்ளைகளைப் பழக்கப்படுத்துங்கள். சமயக்கருத்துக்களை வாழ்வில் பின்பற்ற வழிகாட்டுங்கள்.

# கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாகக் கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல் /முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காகப் பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாகப் பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி/ முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு